
Registered as a News Paper in Sri Lanka | தினமுரசு வாரமலர் | பக்கம் 24 ரூபா 30.00
ஒகஸ்ட் 07 - 13, 2014

# வாரமலர் தினமுரசு

THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY முரசு 1078







## கற்கவேண்டிய விழுமியங்கள்



## பலஸ்தீனத்தின் அழிவில் இஸ்ரேலின் தோற்றம்



## அமெரிக்காவின் அத்துமீறல்

# அதிர்ச்சியில் இலங்கை



## சுக்கிரன் அருள் கிடைக்கும் வழிபாடு

அசுரர்களின் குருவாக விளங்குபவர் சுக்கிர பகவான். சகல வித்தைகளிலும் வல்லவரான இவர், சிவபெருமானை துதித்து வற்றாத செல்வத்தையும், அமர சரீரத்தையும் பெற்றவர். மேலும் சிவனை வேண்டி நவக்கிரகங்களில் ஒருவர் ஆனார்.

வெள்ளிக்கிழமை இவரது பெயரால் சுக்ரவாரம் என்று அழைக்கப்படுகிறது. ஒரு முறை ஈசனின் கோபத்தைத் தணித்து, சுக்கிரனை அம்பிகை காப்பாற்றினாள். ஆகவே வெள்ளிக்கிழமைகளில் அம்மனை வழிபட்டால், சுக்கிரனின் ஆசி கிட்டும். வெண்மை நிற திருமேனி கொண்டவர். இவருக்கு உகந்த உலோகம் வெள்ளி.

பஞ்சபூதங்களில் நீர். மிருத சஞ்சீவினி என்ற மந்திரத்தின் வாயிலாக இறந்தவர்களை உயிர்ப்பிக்கும் சக்தி படைத்தவராக சுக்கிரன் விளங்கினார் என்று புராணங்கள் தெரிவிக்கின்றன. அறிவில் சிறந்த பண்டிதராகவும், சகல சாஸ்திரங்களிலும் கரைகண்டவராகவும் இவர் திகழ்கிறார்.

சுக்கிரனை வழிபட்டு மொச்சை பயிறை நிவேதனம் செய்வதும், அதனை தானம்செய்வதும் சுக்கிரனின் அனுக்கிரகத்தை பெற வழிவகுக்கும்.

## ஆன்மீகம்

## யேசு காட்டும் அடையாளம்!

அடையாளங்கள் மனித வாழ்வுக்கு மிக அவசியமானவை. அவையின்றி உறவோ, தொடர்போ அமையாது.

இறைவன் நம் வாழ்வில் அவரது அன்புக்குப் பல அடையாளங்களைத் தந்துள்ளார். நமது வாழ்வு, கொடைகள், திறமைகள், ஆற்றல்கள், வாய்ப்புகள், நமது வெற்றிகள், சாதனைகள்... அனைத்துமே ஆண்டவரின் அருளின் அடையாளங்கள்தான்.

அவற்றை அடையாளம் கண்டுகொள்ள விசுவாசப் பார்வை தேவை. நம்பிக்கைப் பார்வையின்றி இருப்போருக்கு எத்தனை அடையாளங்கள் தரப்பட்டாலும், அவற்றைக் காண இயலாது. இயேசுவின் காலத்தில் வாழ்ந்த மறைநூல் அறிஞரும், பரிசேயரும் இத்தகையோராக இருந்தனர். எனவேதான், இயேசுவின் வாழ்வையும், பணிகளையும், குறிப்பாக அவரது அருங்குறிகளையும் கண்டபின்னும் வேறு அடையாளங்களைத் தேடினர்.

நமது வாழ்வைக் கொஞ்சம் ஆய்வுசெய்து இறைவன் நமக்குத் தந்துள்ள அடையாளங்களை இனங்கண்டு கொள்வோம். அவற்றுக்காக நன்றிகூறுவோம்.

## இஸ்லாம் கூறும் இல்லற வாழ்க்கை

கணவன் - மனைவியின் கருத்தொருமித்த உறவுதான் குடும்ப அமைதிக்கு இன்றியமையாதது. கணவனுக்கு மனைவி கட்டுப்பட்டு நடக்கவேண்டும். கணவனும் மனைவியும் தத்தம் கடமைகளை உணர்ந்து நடப்பார்களாயின் இருவர் இல்லற வாழ்விலும் எழாது பிரச்சினைகள்.


அல்லாஹ் கணவனையும் மனைவியையும் சிற்சில விடயங்களில் வேறுபடுத்தி மேன்மைப்படுத்தியுள்ளான்.

கணவனை கடின உழைப்பைக் கொண்டும் அவரது உடல் வலிமையினால் பேராபத்துக்களுக்கு ஈடுகொடுக்கும் சக்தியைக் கொண்டும் மேன்மைப்படுத்தியுள்ளான். மனைவியைக் குழந்தைகளைப் பெற்று குடும்பத்தை பராமரிப்பதன் மூலம் மேன்மைப்படுத்தியுள்ளான்.

இவ்வாறு இருபாலாருக்கும் ஆணுக்கும் பெண்ணுக்கும் எடுத்துக்கூறி இறுதியாக இஸ்லாம் எச்சரிக்கையும் செய்துள்ளது. உறவுமுறையின் உட்பட்டோரை திருமணம் செய்யாதீர்கள். இது எதிர்விளைவுகளை ஏற்படுத்தும். இவைகள்தான் இஸ்லாம் கூறும் இல்லற வாழ்க்கை.

எம்.சீ.கலீல், கல்முனை - 05

## கவிதைப்போட்டி 1075



● பாராட்டுக்குரியது ●

### என் சேய்களுக்கு!

வறட்சியின் கொடுமையே
காரணம்!
சேய்களின் தத்தளிப்பைப் பார்க்க...
முடியவில்லையே...!
கண்ணீர் விடுவதைவிட....
வேறு வழி தெரியவில்லையே...
கண்ணீரினால்...
தண்ணீர் நிறையாதோ?
என் சேய்களுக்கு...

ஜே.ஜேசுமணி.
கண்டி.

### தாய்ப்பாசம்

தாய் நான் மடிந்தாலும்
பரவாயில்லை! என் மழலைச்
செல்வங்களை என் விழிநீரில்
நீந்தச் செய்து
உயிர்வாழ வைப்பேன்!!!

எம்.யூ.அல்சாத்.
ஓட்டமாவடி.




## கவிதைப் போட்டி இல 1078



எண்ணத்தில் தோன்றும் கவிதைகளை வார்த்தைகளின் எண்ணிக்கை அதிகமில்லாமல், தபாலட்டையில் மட்டும் பதிவுசெய்து அனுப்பிவையுங்கள்.
அனுப்பவேண்டிய கடைசித் திகதி 18.08.2014

கவிதைப் போட்டி இல. 1078 தினமுரசு வாரமலர்,
த.பெ.இல. 167, யாழ்ப்பாணம்.
இல. 373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.

### மீன் இனம்!

மீன் இனமே மீன் இனமே
நீர் அற்ற நிலையோ...
கண்கள் கலங்க...
கண்ணீரில் கண்ணீரோ?
நெஞ்சம் கெஞ்சுதே
இந்நிலையைப் - பார்த்து
சித்திரம் சித்தரிக்காதோ
உன் சிந்தனையின் படத்தைப் பார்த்து...

யே.ஒகஸ்ரா. கண்டி

### தாய் மீனே!

உன் கண்ணில் கண்ணீர்...
கசிவது ஏனோ?
உன் சேய்களுக்கு ஏற்பட்ட...
ஆபத்தின் நிலைமையோ?
குளிர் மிகுதியினால்...
நீர் பனிக்கட்டிகளாகிவிட்டதோ?
பொறுத்திரு. கதிரவன்
கைகொடுப்பான்...

P.Y.

### கருணை!!

தடாகத்தில் தண்ணீர்
இல்லையோ?
தாய் மீன் அழுவதும்...
சேய் மீன் தவிப்பதும்...
வறட்சியின் காரணமோ?
உங்கள் நிலைமை...
கவலைக்கிடமோ?
படைத்தவன் கருணை
கிட்டாதோ?

ஜவின்

### தாய் மனம்

வற்றிப் போகும் நீரிலே
தப்பிக்கொள்ள முடியாமல்
தன்னைச் சுற்றி நிற்கும்
குஞ்சுகளை எண்ணி
கண்ணீர் விட்டுக்
கலங்குதே - இங்கு
கருணை கொண்ட
தாய் மனம்.

இளம்பிறை யோகன்.
புத்தளம்.

### தாய் சொல்லைத் தட்டாதீர்கள்!

வரட்சியால் இங்கு வற்றியது குளம்
குஞ்சி மீன்களோடு
குழப்பத்தில் தாய் மீன்
செம்படவன் வருவானிங்கே
சேற்றுக்குள் மறையுங்கள்
தாய் மீன் கட்டளையிது
தாய் சொல்லைத் தட்டாதீர்கள்.

எம்.சி.கலீல். கல்முனை-05.

## உங்கள் பக்கம்

### ரயில் கடவைகள் அமைக்கவேண்டும்

கடந்த 23 வருடங்களுக்குப் பின்னர் யாழ்ப்பாணம் நோக்கி புகையிரதம் வர ஆரம்பித்துவிட்டது மகிழ்ச்சிக்குரியதே. இதுவரை பளை-வரை சேவையில் ஈடு பட்டுவருகின்ற புகையிரம் மிக விரைவில் யாழ்ப்பாணம்வரை தனது சேவையை விஸ்தரித்துள்ளமை பிரயாணிகளாகிய எங்களை மகிழ்ச்சியில் ஆழ்த்தியுள்ளது.

அதேநேரம் மனதில் சஞ்சலத்தையும் ஏற்படுத்துகின்றது. ஏனெனில், குறித்த புகையிரதத் தண்டவாளங்கள் மணிக்கு 120 கிலோ மீற்றர் வேகத்தில் பயணிக்கும் வகையில் தண்டவாளங்கள் அமைக்கப்பட்டுள்ளதாகச் சொல்லப்படுகின்றது.

இந்த உயர்வேகத்தில் புகையிரதங்கள் பயணிக்கின்ற பகுதிகளில் ஏராளமான குறுக்குவீதிகள் காணப்படுகின்றன. அவற்றுக்குப் பொருத்தமான ரயில் கடவைகள் பொருத்தமான வகையில் இன்னும் அமைக்கப்படவில்லை. சில இடங்களில் தற்காலிக கடவைகள் அமைக்கப்பட்டு இருக்கின்றன. ஆனால் பல இடங்களில் எதுவித அறிவிப்போ, எச்சரிக்கையோ இன்றி காணப்படுகின்றது. இவ்வாறான இடங்களில் ஊழியர்களை நிறுத்தி ரயில் போகின்றபோது போக்குவரத்தைக் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும் எனச் சொல்லப்படுகின்றது. ஆனால் நீண்டகால அடிப்படையில் நம்பகமான பொறிமுறையாக இருக்கப் போவதில்லை. எனவே, இவ்விடயத்தில் சம்பந்தப்பட்டவர்கள் கரிசனை எடுத்து தேவையற்ற உயிராபத்துக்களை தடுக்க உடனடி நடவடிக்கை மேற்கொள்ளவேண்டும்.

கே.அருள்நாதன், யாழ்ப்பாணம்.


மடல்கள் மற்றும்
ஆக்கங்கள் உட்பட சகல
தொடர்புகளுக்கும்
தினமுரசு வாரமலர்
த.பெ.இல:- 167,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி :-0212223628
தொலைநகல்
(Fax): 0212221811
ஈமெயில்:
(E-mail):-
thinamurasu@live.com


### அமைதியின் சொற்கள்

நிம்மதி தேவை என்பதை உங்களால் ஏற்றுக்கொள்ள முடிந்தால் அன்றுதான் நிம்மதியை நோக்கிய உங்கள் பயணம் ஆரம்பமாகும்.

- பிரேம் ராவத்

## வாசகர்சாலை

### தன்னம்பிக்கை

வாசகர்களின் தன்னம்பிக்கையை நிலைத்து நிற்கவைத்து செயற்படுவது மகிழ்ச்சிக்குரியது. ஊடகதர்மத்தின்பால் நடுநிலையாக செயற்படுவது பாராட்டுக்குரியது. அரசியல் கட்டுரைகள் சிலவற்றை வாசிக்கும்போது எனது மனம் பூரிப்படைகின்றது. பிரச்சினைகளை நீ நாசூக்காகக் கையாளும் விதம் என்னை வெகுவாகக் கவர்ந்துள்ளது. முரசு இன்று மட்டுமல்ல என்றுமே நடுநிலையாக நின்று செயற்படுவதே எனது விருப்பமுமாகும்.

க. துஷா, பருத்தித்துறை.

### பெண்களின் கட்டுரைகள்

தினமுரசுக்கு வணக்கம்,

தினமுரசில் வெளிவரும் அனைத்துமே சூப்பர். லேடீஸ் ஸ்பெஷல் பக்கம் பெண்களாகிய எமக்கு மிகவும் பயன்பெறக்கூடியதாக இருக்கின்றது. அழகு குறிப்புகள் இயற்கையானவையாகவும் பிரசுரித்துவருகின்றாய். இவ்வாறான அழகு குறிப்புகளை பிரசுரிக்கவேண்டுமெனக் கேட்டுக் கொள்கின்றேன். அதைவிடுத்து பெண்கள் தொடர்பான கட்டுரைகளையும் பிரசுரித்து வருகின்றாய். இன்னும் பல அம்சங்களை சேர்த்துக் கொள்ளவேண்டும். இதை தினமுரசு செய்யுமென நம்புகின்றேன்.

ப.அச்சுதன், யாழ்ப்பாணம்.

### பாராட்டுக்கள்!

வணக்கம்.

முரசு வாசகர்கள் கேட்டுக்கொண்டதற்கிணங்க மாற்றங்களைக் கொண்டுவந்திருக்கின்றாய். அந்த வகையில் வெளிநாட்டு கட்டுரையை ஒரு பக்கம் ஆக்கியுள்ளாய். இது பாராட்டுக்குரியது. யாழில் இருந்து முள்ளிவாய்க்கால்வரை என்ற கட்டுரை பிரமாதமாக உள்ளது. என் பணிதொடர வாழ்த்துக்கள். இவ்வாறான பல கட்டுரைகளை வழங்கவேண்டும்.

அ.கோகுலன், மன்னார்.

### மகிழ்ச்சி!

காலத்தின் தேவைகருதி பல இன்னோரன்ன அம்சங்கள் வெளிவருகின்றது. அரிய படைப்புக்களும் வெளிவருகின்றது. அண்மைய நாட்களாக முன் பக்கத்தில் நடிகைகளின் படங்கள் வெளிவருகின்றது. மகிழ்ச்சியாக உள்ளது.

த.பாமினி, புத்தளம்

# கூட்டமைப்பின் கொள்கைகள் ஒருபோதும் மக்களுக்கு உதவாது

## கடற்றொழிலாளர் இணையத் தலைவர் காட்டம்

**தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் .தேசிய கொள்கைகள் மக்களுக்கு ஒருபோதும் உதவப் போவதில்லையென, வடமராட்சி வடக்கின் 14 கடற்றொழிலாளர் சங்கப் பிரதிநிதிகளுடான கலந்துரையாடலின்போது வடமாகாண கடற்றொழிலாளர் இணையத் தலைவர் சூரியகுமாரன் தெரிவித்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில், காலம் காலமாக கடற்றொழிலாளர்கள் பல்வேறுபட்ட துன்ப துயரங்களுக்கு முகங்கொடுத்து வரும் நிலையில் எமக்கு தோள் கொடுப்பவர் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்கள் மட்டுமே. அதுமட்டுமன்றி கடற்றொழிலாளர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவது, எமது பகுதிகளை அபிவிருத்தி செய்வதிலும் அவரது அயராத உழைப்பு தொடர்கின்றது.

இந்நிலையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் வாக்குகளைப் பெற்று தேர்தலில் வெற்றி பெற்றபோதிலும் கடற்றொழிலாளர்களின் பிரச்சினைகள் தொடர்பில் அக்கறையற்று இருப்பது எமக்கு வேதனையைத் தருகின்றது.

அவர்களது தேசியவாதத்தினால் எமது மக்களுக்கு ஒருபோதும் உதவ முடியாது என்பது திண்ணமாகியுள்ளது.

ஆனால், எமது இருப்பை தக்க வைத்துக்கொண்டு எமது பகுதிகளை அபிவிருத்தியால் கட்டியெழுப்பி மக்களின் வாழ்வாதாரத்தை முன்னேற்றுவதே அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்களது தேசிய கொள்கையாக இருக்கின்றது என்றும் இதன்மூலமே மக்கள் அதிக நன்மைகளை பெற்று வருகின்றார்கள் என்றும் சுட்டிக் காட்டினார்.

அத்துடன் யாழ்.மாவட்ட கடற்றொழிலாளர்கள் மட்டுமன்றி முல்லைத்தீவு மாவட்ட கடற்றொழிலாளர்கள் எதிர்நோக்கிவரும் பிரச்சினைகள் இடர்பாடுகள் தொடர்பிலும் அமைச்சர் அவர்கள் ஆராய்ந்து தீர்வுகாண வேண்டுமென்றும் கேட்டுக்கொண்டார்.

## பெண்களுக்கென தனியான வங்கிகள்

### ஜனாதிபதி பணிப்புரை!



இலங்கையின் அபிவிருத்தி நடவடிக்கைகளில் பெண்களின் பங்களிப்பு சிறப்பாக அமைந்துள்ளதால் அவர்கள் வங்கி நடவடிக்கைகளை இலகுவாக மேற்கொள்ளக்கூடிய வகையில் பெண்களுக்கென தனியான வங்கிகளை ஆரம்பிக்குமாறு உரிய அதிகாரிகளுக்கு தாம் பணிப்புரை விடுத்துள்ளதாக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

கிரிந்த புகுல்வெல்ல பிரதேசசபை வளவில் அண்மையில் நடைபெற்ற கும்புறுப்பிட்டி தொகுதி பெண்கள் அணியின் பேரவையில் உரையாற்றியபோதே ஜனாதிபதி இவ்வாறு கூறினார. அவர் இந்த வைபவத்தில தொடர்ந்தும் உரையாற்றுகையில்,

"இலங்கையில் மூன்று தசாப்த காலமாக நடைபெற்றுவந்த கொடிய யுத்தத்தை குறுகிய காலத்துக்குள் நான் முடிவுக்கு கொண்டுவந்தேன். எந்தவித பேதங்களும் இன்றி அனைவரதும் ஒத்துழைப்பை பெற்று இந்த நாட்டை அபிவிருத்தி செய்து முன்னேற்றுவதை எனது அரசாங்கம் நோக்கமாகக் கொண்டுள்ளது.

# ஏனையவர்களைப்போல எங்களால் வாழ முடியவில்லை!

## உலகத் தலைவர்களிடம் காயமடைந்த சிறுவன்!

வரலாறு காணாத அளவில் சிறுவர்கள் கொல்லப்பட அல்லது அங்கவீனர்களாக்கிய ஒரு கொடிய யுத்தத்தை காஸாவைச் சேர்ந்த சிறுவர்கள் சந்தித்துள்ளனர்.

இந்த நிலை உலக நாடுகள் மத்தியில் பாரிய தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளதுடன், யுத்த நிறுத்தத்திற்கான தேவையை வலியுறுத்தியுள்ளது.

வைத்தியசாலையில் காயமடைந்து சிகிச்சைக்காக அனுமதிக்கப்படும் சிறுவர்களின் எண்ணிக்கை தொடர்ச்சியாக அதிகரித்து செல்வதோடு, உயிரிழந்தவர்களின் எண்ணிக்கையும் அதிகரிப்பதாக தெரிவிக்கப் பட்டுள்ளது.

இப்படியிருக்கையில் மொஹமட் அலாலியா என்ற சிறுவன், காயமடைந்து குறித்த வைத்தியசாலையில் சிகிச்சைப் பெற்றுவரும் நிலையில், தனது மனத்தின் ரணங்களை வார்த்தைகளால் வெளிப்படுத்தியுள்ளான்.

"நினைக்கவே வேதனையாக உள்ளது, காஸாவில் சிறுவர்கள் சுதந்திரமாக வாழக்கூடிய சூழல் உருவாக்கப்படவேண்டும், உலக நாடுகள் ஏன் இதுபற்றி கவனம் செலுத்தவில்லை, ஏனைய நாட்டு சிறுவர்களை போல ஏன் எங்களால் வாழமுடியவில்லை" என அந்த சிறுவன் கேள்வி எழுப்பியுள்ளான்.

# நல்லூர் உற்சவம்

# கற்கவேண்டிய விழுமியங்கள்

**(ராஜு)**

இலங்கையின் யாழ்ப்பாணத்து 'நல்லூர்' என்பது நல்ல சிறப்பம்சங்களைக் கொண்டு அமைந்திருப்பதால் அதற்கு நல்லூர் என்ற காரணப்பெயராய் அமைந்துவிட்டது.

அந்த சிறப்பை அது இன்றுவரையும் தக்க வைத்துக்கொண்டிருப்பதால் அதன் பெருமை நீடித்து நிலைக்க வாய்ப்பிருக்கின்றது என்பதும் மகிழ்ச்சியான விடயம்.

இந்த நல்லூர் 12ஆம் நூற்றாண்டு தொடக்கம் 17ஆம் நூற்றாண்டின் முற்பகுதி வரை யாழ்ப்பாண இராச்சியத்தின் தலைநகராக இருந்துவந்துள்ளது என்று வரலாற்றுக் குறிப்புக்கள் கூறுகின்றன.

இந்த ஆலயம் 13ம் நூற்றாண்டில் யாழ்ப்பாண இராச்சியத்தை ஆட்சிசெய்த ஆரிய சக்கரவர்த்திகள் வம்சத்தின் முதலாவது அரசனான கலிங்கமாகன் அல்லது கூழங்கை சக்கரவர்த்தியால் கட்டுவிக்கப்பட்டதாக யாழ்ப்பாண வைபவமாலையில் கூறப்பட்டுள்ளது.

எனினும், 15ஆம் நூற்றாண்டில் யாழ்ப்பாணத்தை கைப்பற்றி பதினேழு ஆண்டுகள் ஆட்சிசெய்த சிங்கள அரசின் பிரதிநிதியும், பிற்காலத்தில் ஸ்ரீ சங்கபோதி 7ஆம் புவனேகபாகு என்ற பெயர்கொண்டு அழைக்கப்பட்ட கோட்டை அரசனான ஸ்ரீ செண்முகப்பெருமாள் என்பவனால் இக்கோவில் கட்டப்பட்டதாகவும் வரலாற்றுச் சான்றுகள் கூறுகின்றன.

இந்த நல்லூரிலேதான் இந்து மக்களிடையே மிகவும் புகழ்பெற்ற கோயில்களுள் ஒன்றான நல்லூர் கந்தசுவாமி கோயிலும் உள்ளது.

பண்டைய காலம் தொட்டே தமிழ் மக்களிடையே இந்தக் கோயிலும் நல்லூரும் சிறப்புற்று விளங்கி வந்ததாக வரலாறுகள் சான்று பகர்கின்றன.

மக்களால் கோயிலும் ஊரும் சிறப்புப் பெற்றதா?, கோயிலால் மக்களும் ஊரும் சிறப்புப பெற்றனரா என்ற வாதவிவாதங்களுக்கப்பால் தொடர்ந்து பாரம்பரியங்களையும் உயர் விழுமியங்களையும் கடைப்பிடித்து வருகின்ற ஒரு சூழலைக் கொண்டதாக நல்லூர் பிரதேசம் அமைந்துள்ளது என்பது சற்று ஆறுதலளிக்கின்ற விடயம்.

ஈழத்திலுள்ள கோவில்களுள் நேரம் தவறாத நித்திய, நைமித்திய பூசைகள் மூலம் நல்லூர் கந்தசுவாமி கோவில் மற்றைய கோவில்களுக்கு முன்னோடியாக விளங்குகின்றது.

ஆடி அமாவாசையிலிருந்து 6ஆவது நாள் கொடியேறி 25 நாட்கள் இங்கு வருடாந்த மகோற்சவம் நடைபெறுகின்றது.

இந்தத் திருவிழா யாழ்ப்பாணத்து மக்களுக்கு மட்டுமன்றி வேறு பிரதேச மக்களுக்கும் முக்கியமான ஆன்மீக விழாவாகக் கொள்ளப்படுகின்றது.

அத்துடன், ஐப்பசி மாதத்தில். கந்தசஷ்டி, சூரன்போர், இயமசங்காரம், கார்த்திகைத் திருவிழா, கற்பூரத்திருவிழா, தைப்பூசம், சித்திரை வருடப் பிறப்பு எனப் பல விழாக்கள் கொண்டாடப்படுகின்றன. இலங்கையில் ஆறுகாலப் பூசைகள் நடைபெறும் ஒரேயொரு ஆலயம் நல்லூர் என்பதுவும் குறிப்பிடத்தக்கது.

நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதாரச் சூழ்நிலைகளைக் கருத்திற்கொண்டு கோயில்களின் அர்ச்சனைப் பற்றுச்சீட்டுக்கள் பல விலைகளுக்கும் மாற்றப்பட்டுள்ள போதிலும் நல்லூரான் ஆலயத்தின் பற்றுச்சீட்டு மட்டும் இன்றுவரை ஒரு ரூபாவிற்கே விற்கப்பட்டு வருகின்றது.

இந்த ஆலயத்தின் பகுதிகள் வருடாவருடம் புனரமைக்கப்பட்டுவருவதுடன், 2011ஆம் ஆண்டு தெற்கு வாயில் பகுதியில் இராஜகோபுரம் அமைக்கப்பட்டு கும்பாபிஷேகம் செய்யப்பட்டதுடன், முருக பக்தரான அருணகிரிநாதருக்கு ஆலயத்தின் தெற்குப் பக்கமாக சிறிய ஆலயம் அமைக்கப்பட்டு பூசை வழிபாடுகள் நடாத்தப்பட்டுவருவதும் இங்கு ஒரு சிறப்பம்சமாகும்.

ஆண்டுதோறும், கந்தபுராண படன வாசிப்பு, திருவிழாக் காலத்தில் ஒவ்வொரு நாளும் மாலை நிகழ்வுகளாக ஆன்மீகப் பிரசங்கங்கள், சொற்பொழிவுகள், நாட்டிய நடனங்கள், பஜனைகள் மற்றும் இசைக் கச்சேரிகள் என்பனவும் இங்கு இடம்பெறுகின்றன.

ஆயுத வன்முறைகள், அதனால் உண்டான பண்பாட்டு கலாசார விழுமிய அழிவுகள், உள்நாட்டு இடம்பெயர்வுகள், வெளிநாட்டு புலம்பெயர்வுகள், போருக்குப் பின்னரான மீண்டெழும் வாழ்க்கை முறை என்பவற்றுக்கிடையே பாரம்பரிய விழுமியங்களைத் தாங்கிய ஒரு திருத்தலமாகத் தாக்குப் பிடித்து நிற்கிறது இந்த நல்லூர் ஆலயப் பெருமை.

உள்நாட்டுப் போரும், அகதி வாழ்க்கையும், விரக்தியும், வேட்கையும் எல்லாமே ஒன்றாகிய நிலையில் இறுதியாக ஆன்மீக ஈடேற்றத்தை நாடும் ஒரு அடைக்கலமாக இந்தக் கோயில் சந்நிதானத்தை நாடி மக்கள் படையெடுக்கிறார்கள்.

அடியார்களும், பொழுதுபோக்காளர்களும். களியாட்டக்கார்ர்களும், என்று எல்லோருமே சங்கமிக்கின்ற இடமாகவும் காலமாகவும் இந்த நல்லூர் ஆலயமும் அதன் சூழலும் அமைந்துவிட்டிருப்பதால் வருடாந்த ஆலய உற்சவத்தின் 'விழுமியம்' சீர்தூக்கிப் பார்க்கப்பட வேண்டிதொன்றாக மாறிவிட்டுள்ளது.

புலம்பெயர்ந்து வெளிநாடுகளிலே வாழ்கின்ற நம்மவர்களுக்கு நல்லூர்க் கந்தனின் உற்சவம் ஒரு கோடைகால விடுமுறையில் வந்துவிடுவதால் இரட்டிப்பு மகிழ்ச்சி.

ஏனென்றால் புலம்பெயர்ந்து, மேற்கத்தேய வாழ்க்கை முறையை விரும்பியோ, விரும்பாமலோ ஏற்றுக்கொண்டு வாழ்க்கை நடத்துகின்ற நம்மவருக்கு இது ஒரு ஆறுதலையும், ஆனந்தத்தையும் அளிக்கக்கூடும்.

(21ஆம் பக்கம் பார்க்க)



வாரமலர்
# தினமுரசு

த.பெ.இல:- 167, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: -021 222 3628
தொலைநகல் (Fax):- 021 222 1811
ஈ-மெயில் (E-mail):-
thinamurasu@live.com

## முரசம்

வாசகர்களுக்கு வணக்கம்!

## ஊதும் ஊடகங்கள்!

வடமாகாண முதலமைச்சர், வட மாகாண பிரதம செயலாளருக்கு உத்தரவிட முடியாது என்ற தீர்ப்பை உயர் நீதிமன்றம் வழங்கியுள்ளது.

இந்த தீர்ப்பு புதிய விடயம் அல்ல. அது இலங்கையின் சட்டத்திற்கு உட்பட்டதை நீதிமன்றம் தெளிவுபடுத்தியுள்ளது. மாகாணங்களுக்கு ஆளுனரையும், பிரதம செயலாளரையும் ஜனாதிபதியே நியமனம் செய்வார். அவர்களுடன் புரிந்துணர்வுடன் செயற்படுவது மாகாண அரசுகளின் செயற்பாடாக கடந்த இருபத்து ஐந்து வருடங்களாக இருந்துவரும் நடைமுறையாகும்.

அதற்காக மாகாண அரசு மத்திய அரசுக்கு அடிமையாக இருப்பது என்று அர்த்தமாகிவிடாது. ஆனால் மாகாண அரசுகள் தம்மை ஒரு தனிநாட்டுக்கான அரசாகக் கருதி தன்னிச்சையாக செயற்பட முடியாது.

மாகாண அரசும், மத்திய அரசும் புரிந்துணர்வோடும், விட்டுக்கொடுப்போடும் தமது நிர்வாகச் செயற்பாடுகளை முன்னெடுக்கும்போதே மக்களுக்கு பிரயோசனமான வெற்றிகளை நிகழ்த்த முடியும்.

வடக்கு மாகாண சபையை தமிழ்க் கூட்டமைப்பு வெற்றிபெற்றதும் "மலர்ந்தது தமிழ் அரசு" என்று ஆரம்பித்தவர்கள், வடக்கு தமிழ் அரசு, தெற்கு சிங்கள அரசு என்றவிதமாக ஏட்டிக்குப்போட்டியாக களத்தில் குதித்ததன் விளைவு வடக்கு மாகாண சபை ஒரு செத்தவீடுபோல் பிரேரணை ஒப்பாரிகள் மட்டுமே அதனால் இதுவரை சாத்தியமாகியிருக்கின்றது.

ஆளுனரை மாற்றுவது, இராணுவத்தை வெளியேற்றுவது, சிறையிலுள்ள தமிழ் கைதிகளை விடுவிப்பது, காணாமல் போனவர்களை கண்டுபிடித்துக்கொடுப்பது, எனத் தேர்தல் வாக்குறுதியாக கூறிய எதையும் வடக்கு மாகாண சபையைப் பொறுப்பெடுத்தவர்களால் நிறைவேற்ற முடியவில்லை.

இதுவரை நூற்றுக்கும் மேற்பட்ட பிரேரணைகளை வடக்கு மாகாண சபையில் கூட்டமைப்பு நிறைவேற்றி இருப்பதாக பெருமை பேசிக்கொண்டிருக்கையில் வடமாகாண சபையின் எதிர்க்கட்சித் தலைவரும், ஈ.பி.டி.பியின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான எஸ். தவராசா அப்பிரேரணைகள் தொடர்பில் கருத்துக் கூறும்போது, வட மாகாண சபையில் கூட்டமைப்பால் நிறைவேற்றப்பட்ட பிரேரணைகள் மாகாண சபை சட்ட வரம்புகளுக்குட்பட்டவை அல்ல. அவற்றில் பெரும்பாலானவை சர்வதேசத்தை நோக்கியும், ஐ.நா. சபையை நோக்கியும், மாகாண சபையின் வரம்புகளுக்கு அமையாமலும் நிறைவேற்றப்பட்டவை என்று கூறியுள்ளார்.

இவற்றைப் பார்க்கும்போது வடக்கு மாகாண சபையை கூட்டமைப்பு பொறுப்பேற்று பத்து மாதங்களாகின்ற போதும் உருப்படியாக எதையும் செய்யவில்லை. முன்னாள் நீதியரசரான முதலமைச்சருக்கே சட்டம், நியாயத்தைச் சொல்லிக் கொடுக்கும் நிலை.


பொலிசாருக்கு வழங்கவேண்டிய உத்தரவை, யாழ். மாநகர சபைக்கு வழங்கும் குழப்பம் எனத் தெளிவற்ற போக்கிலேயே வடக்கு மாகாண சபை இருக்கின்றது.

ஆனால் தமிழ் ஊடகங்களோ, பிரதம செயலாளருக்கு உத்தரவிட முதலமைச்சருக்கு அதிகாரம் இல்லை என்று கூறுவதன் ஊடாக வடக்கு முதலமைச்சருக்கு இதற்குக்கூட அதிகாரம் இல்லை என்று நிரூபிக்க முயற்சிக்கின்றன. ஊடகம் எப்படி ஊதுகின்றது புரிகிறதா?

மீண்டும் மறுமடலில்
வந்து கலக்கும்வரை
என்றென்றும் அன்புடன்,
ஆசிரியர்.

# அமெரிக்காவின் அத்துமீறல் அதிர்ச்சியில் இலங்கை

**அமெரிக்கா வெறுமெனவே குற்றங்களை சுமத்தி விசாரணைக்கான மனித உரிமை ஆணையகத்திற்கு திறந்துவிட்டதோடு ஒதுங்கிவிடவில்லை. இலங்கைக்குள்ளேயும் சில காரியங்களைச் செய்து கொண்டிருக்கின்றது. பொதுவாகவே ஊடகங்கள் அரச எதிர்ப்பு மனோபாவ செய்திகளுக்கே முன்னுரிமை கொடுப்பது வழமை ஊடகவியலாளர்களும் எதிர்ப்புக்குரல்களை தலைப்புகளிட்டு பொருளாதாரம் ஈட்டுவதையே ஊடகவியலாளனின் சமூக பங்களிப்பாக கருதிச் செயற்படுகின்றனர்.**



இலங்கைக்குள் அமெரிக்கா டொலர் அரசாங்கமொன்றை நடத்திக் கொண்டிருக்கின்றது. அமெரிக்காவின் இராஜதந்திர முகம் இலங்கை அரசுடன் சுமூகமாக காட்டப்பட்டாலும் அமெரிக்காவின் ஏனைய செயற்பாடுகள் இலங்கையின் இறைமைக்கும் தேசிய ஐக்கியத்துக்கும் எதிரானதாகவே இருக்கின்றது.

அமெரிக்காவின் தூதரகச் செயற்பாடுகளை வழமை போல் எதிர்மறையான கதைகளை கேட்பதும், எதிர்மறையான அறிக்கையை சேகரித்து அனுப்புவதுமாக இருந்து வருவது இரகசியமானதல்ல.

பொதுவாக தூதரகங்களின் செயற்பாடுகள் இதுவாகவே இருக்கின்றது. ஆகையினால் அமெரிக்கா மட்டுமே இவ்வாறு செயற்படுகின்றது என்று கூறிவிடமுடியாது.

இலங்கை தொடர்பில் அமெரிக்கா எவ்வாறானவர்களின் கருத்துக்களை கேட்கின்றது. அதை ஆய்ந்து அறியாமல் கேட்டதை அப்படியே எவ்வாறு விழுங்கிக்கொண்டு தனது தலைமையகத்துக்கு அனுப்பி வைக்கின்றது என்பதை விக்கி லீக்ஸ் இணையம் வெளியிட்டதை யாரும் மறந்திருக்கமாட்டீர்கள்.

இலங்கையில் நடந்தேறும் நல்லதும் சரி, தீயதும் சரி நேரடியாகவோ, மறைமுகமாகவோ அமெரிக்காவின் தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தலானதாக இருக்கப் போவதில்லை. எனவே அமெரிக்கா, இலங்கையில் அரங்கேற்றும் எந்தவொரு செயலும் அமெரிக்காவின் பாதுகாப்போடு தொடர்பு பட்டதல்ல.

ஆனால், தென்னாசியப் பிராந்தியத்தில் இலங்கையின் அமைவிடமானது இந்தியா, சீனா ஆகிய வளர்ந்துவரும் பொருளாதார வல்லரசுகளை மிகநெருக்கமாக இருந்து அவதானிப்பதற்கும், மேற்கூறிய நாடுகளின் ஸ்திரத்தன்மையை சீர்குலைக்கும் விதமான வேலைத்திட்டத்தை முடுக்கி விடுவதற்கு இப்பிராந்தியத்தில் ஒரு பாதுகாப்பான மையம் அவசியம்.

அதுமட்டுமல்லாது இந்து சமுத்திரத்தில் அமெரிக்காவின் நடமாட்டத்தை கண்காணிப்பதற்கும், பின்புல தளமொன்றை நிறுவுவதற்கும் ஏனைய நாடுகளைவிட இலங்கை பல வகைகளில் வாய்ப்பான நாடாக இருக்கின்றது.

ஆகவே இலங்கை அரசு அமெரிக்காவுடன் நெருக்கமான உறவுகளை கொண்டதாக இருக்கவேண்டுமென அமெரிக்கா கருதி வருகின்றது.

யுத்தத்திற்குப் பின்னர் இலங்கையின் அரசுமட்டத்தில் ஏற்பட்டிருக்கும் குணாதிசய மாற்றமும், சீனாவின் தூர நோக்கான நுழைவும், இந்தியாவின் பிராந்திய வல்லமைக்கான முன்னெடுப்புக்களும் இலங்கையின் வெளியுறவுக் கொள்கையில் பாரிய மாற்றங்களை ஏற்படுத்தியுள்ளது.

இந்த மாற்றமானது இலங்கைக்கும் அமெரிக்கா மற்றும் மேற்குலகுடனான உறவுகளில் இடைவெளியை ஏற்படுத்தியுள்ளது. அதாவது அமெரிக்காவோ வேறு மேற்கத்திய நாடுகளோ இலங்கையுடன் இராஜிய ரீதியான அனுகுமுறையூடாக இலங்கையை நெருக்கப்படுத்திக் கொள்ளும் நிலை இல்லை.

இலங்கை அரசுடன் சம்பிரதாய பூர்வமான இராஜிய உறவுகளே தற்போது உள்ளது. அதையிட்டு கவலைப்படும் நிலையில் இலங்கையும் இல்லை. ஆகவேதான் போர்க் குற்றங்கள், மனித உரிமை மீறல்கள் எனக் குற்றங்களை இலங்கைமீது சுமத்திப் பணியவைக்க அந்த நாடுகள் முயற்சிக்கின்றன.

யுத்தத்தின் இறுதி காலப்பகுதியில் உண்மையில் அங்கு மனித குலத்துக்கு என்ன நடந்தது என்பதையும், மனித உரிமைகள் எவ்விதமாக மீறப்பட்டுள்ளது என்பதையும் ஆராயவேண்டும். அதில் குற்றமிழைத்தவர்கள் தண்டிக்கப்படவேண்டும் என்பதில் எவருக்கும் மாற்றுக் கருத்து இருக்க முடியாது.

ஆனால், அமெரிக்கா தலைமையிலான நாடுகள் இவ்விடயங்களை கையில் எடுத்திருப்பதில் வெளிப்படையான இலாபம் பாதிக்கப்பட்ட மக்களுக்கு இல்லை. மாறாக ஒருபுறம் போர்க்குற்றங்களை செய்தும், போர்க்குற்றங்களை ஆதரித்துக் கொண்டுமிருக்கின்ற அமெரிக்காவும் அமெரிக்காவின் தோழமை நாடுகளும் போர்க்குற்றம் பற்றியும், மனித உரிமை மீறல்கள் பற்றியும் பேசுவதுதான் சுமத்தப்பட்ட குற்றங்களின் வலிமையை குறைத்துவிட்டுள்ளது.

அமெரிக்கா வெறுமெனவே குற்றங்களை சுமத்தி விசாரணைக்கான மனித உரிமை ஆணையகத்திற்கு திறந்துவிட்டதோடு ஒதுங்கிவிடவில்லை. இலங்கைக்கு உள்ளேயும் சில காரியங்களைச் செய்துகொண்டிருக்கின்றது.

பொதுவாகவே ஊடகங்கள் அரச எதிர்ப்பு மனோபாவ செய்திகளுக்கே முன்னுரிமை கொடுப்பது வழமை. ஊடகவியலாளர்களும் எதிர்ப்புக்குரல்களை தலைப்புக்களிட்டு பொருளாதாரம் ஈட்டுவதையே ஊடகவியலாளனின் சமூக பங்களிப்பாக கருதிச் செயற்படுகின்றனர்.

உதாரணத்துக்கு வீதிகள் பாவனைக்கு உதவாமல் பாதிப் படைந்து இருந்தால் அதை புகைப்படம் பிடித்து செய்தியாக வழங்குவார்கள் அதே வீதி புனரமைக்கப்பட்டால் அதை செய்தியாக கொடுப்பதில் சுவாரஸ்யம் இல்லை. விட்டுவிடுவார்கள். கேட்டால் மக்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளையே செய்தியாக கொடுப்போம். அதை தீர்த்து வைப்பது எமக்கு செய்தி அல்ல என்பார்கள்.

இந்த மனோநிலைதான் வளர்ச்சியடைந்து இப்போது ஊடகவியலாளர்கள் சரிகளை கண்டுகொள்ளாமல், பிழைகளைத் தேடுகின்றார்கள், அதை மக்களிடம் கொண்டு போகின்றார்கள். அரசியலிலும் இதையே செய்கின்றார்கள்.

ஊடகவியலாளர்களின் இந்த மனோநிலையை மேலும் வளர்த்துவிடுவதற்கு பல்வேறு செயற்திட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்றன. அவை தொண்டு நிறுவனங்களின் பெயரால் கருத்தரங்குகள், பயிற்சிப் பட்டறைகள், கருத்துப் பரிமாற்றங்கள் என்ற பெயர்களில் செயற்படுத்தப் படுகின்றன.

அமெரிக்காவின் டொலர்களை வருமானமாக பெறும் சில தொண்டு நிறுவனங்கள் ஊடகவியலாளர்களையும், வாக்காளர்களையும் குறிவைத்து பல வேலைத்திட்டங்களை செய்துவருகின்றன.

அண்மையில்கூட அமெரிக்காவின் தொண்டு நிறுவனம் ஒன்று வாக்களிப்பது மற்றும் சுயதொழில் முயற்சிகளுக்கு உதவுவது, கல்வி மையங்களை நிறுவி மாணவர்களுக்கு வழிகாட்டுவது போன்ற திட்டங்களை உள்நோக்கத்தோடு செயற்படுத்த ஆரம்பித்தபோது அதை இலங்கையின் பாதுகாப்பு அமைச்சு கடுமையாக விமர்சித்து தடுத்ததோடு தொண்டு நிறுவனங்கள் செயற்படுத்தும் திட்டங்களை முன்கூட்டியே பாதுகாப்பு அமைச்சுக்கு வழங்கி ஒப்புதல் பெற வேண்டும் என்று உத்தரவிட்டது.

அந்த சர்ச்சை முடிவடைவதற்கு இடையேதான் அண்மையில் ஊடகவியலாளர்களுக்கு கொழும்பில் பயிற்சிப் பட்டறை நடத்தி அதற்கு குறிப்பாக வடக்கிலிருந்து தெரிவு செய்யப்பட்ட சில ஊடகவியலாளர்களையும் அழைத்தது. அவ்வாறு அழைக்கப்பட்டவர்கள் பெரும்பாலும் இணையத்தளங்களுக்கு செய்திகளை வழங்குகின்றவர்கள்.

வடக்கில் பிராந்திய ஊடகங்கள் பல இருக்கின்றன. அவற்றில் வெளிப்படையாக பணியாற்றும் ஊடகப் பணியாளர்களுக்கு இந்த பயிற்சிப் பட்டறை தொடர்பில் எந்த அறிவிப்பும் செய்யப்படவில்லை. இவற்றைப் பார்க்கும்போது பயிற்சிப் பட்டறை நடத்தப்படுவதன் உள்நோக்கம் தொடர்பாக சந்தேகிக்கச் செய்கின்றது.

அமெரிக்காவின் இவ்வாறான செயற்பாடுகள் இலங்கை அரசுமீது வெளி அழுத்தங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ள அதேவேளை உள்நாட்டிலேயே பிரச்சினைகளை ஏற்படுத்திவிடுவதாகும். அமெரிக்காவின் இவ்விதமான செயற்பாடுகளில் இலங்கை குடிமக்கள் எவருக்கும் துளியளவு நன்மைகூட இல்லை.

அமெரிக்காவின் நலன்களுக்காக முழு இலங்கையையும்கூட பாதிப்புக்குள் தள்ளிவிடுவதற்கு தயாராக இருப்பதையே காண முடிகின்றது. தமிழர்களுக்காகவோ, முஸ்லிம்களுக்காகவோ அமெரிக்கா எதையும் செய்யவில்லை. ஆனால் அமெரிக்கா இலங்கை அரசை தோற்கடித்தால் அதனால் தமிழர்களுக்கு தனிநாடு கிடைத்து விடும் என்று தமிழ் மக்களுக்கு கூறப்படும் கதையானது முட்டாள்தனமானதாகும்.



தங்கம் வைக்கப்பட்டிருக்கும் இரும்புப்பெட்டியைத் திறப்பதற்கு நான்கு சாவிகள் தேவை, அவை எல்லாமே ஒரு ஆளின் கைகளில் கிடைப்பது கனவில்கூட நடக்கமுடியாது."

"அதை எப்படி அடித்துக் கூறுகிறீர்கள்"

"ஒருவேளை ஒவ்வொன்றாக எடுத்து மூன்று சாவிகளை கைப்பற்றினாலும், நான்காவது சாவி திருடர்களின் கைகளில் கிடைக்கவே கிடைக்காது"

"நான்காவது சாவி! அது எங்கே இருக்கிறது"

"இதோ இங்கே" என்று கூறிய ஹென்ரி தனது ஷேர்ட்டின் மேல் பட்டனைக் கழட்டிக் காட்டினார். இரும்புப் பெட்டியின் நான்காவது சாவி அவரது கழுத்தில் இருந்த செயினில் ஆடிக்கொண்டிருந்தது.

தொடருக்காக, அந்த நாளைய பிரிட்டிஷ் ரயில்வே சிஸ்டத்தின் பின்னணி பற்றி கூறவேண்டியுள்ளது. இதோ, அந்த விபரங்களை தனிக் கட்டுரையாக தருகிறோம்.

# முதலாவது பிரமாண்ட ரயில் கொள்ளை



பிரிட்டனின் ரயில்வே சிஸ்டம் மிகவேகமாக வள்ரத் தொடங்கிய நேரம் அது. ஆனால் லண்டன் நகருக்கு ஒரு மைய (சென்ட்ரல்) ரயில்வே ஸ்டேஷன் இருக்கவில்லை.

ஒவ்வொரு திசையிலும் செல்லும் ரயில்வே பாதைகள் ஒவ்வொரு தனியார் நிறுவனத்தினால் அமைக்கப் பட்டு தனியார் நிறுவனங்களுக்கு சொந்தமான பாதைகளாக இருந்தன. இதனால் எல்லாப் பாதைகளும் ஒரு சென்ட்ரல் ரயில்வே நிலையத்துக்கு வந்து சேரும்படியான அமைப்பு இருக்கவில்லை.

1800–களின் நடுப்பகுதியில் லண்டனின் ஒரு முனையில் இருந்து மற்றொரு முனைக்குச் செல்லவேண்டும் என்றால், ஒரு தனியார் ரயில்வே லைனில் ஏறி, அது முடிவடையும் ஸ்டேஷனில் இறங்கி, குதிரைவண்டி மூலமாக மற்றுமோர் நிறுவனத்துக்குச் சொந்தமான ஸ்டேஷனுக்குப் போய், அவர்களது ரயில் வேலைனில் பயணிக்கவேண்டும்.

இதனால், ஒவ்வொரு தனியார் ரயில்வே நிறுவனமும் ஒவ்வொரு இடத்தில் ஒவ்வொரு ரயில்வே நிலையத்தை அமைக்கத் தொடங்கின. விக்டோரியா ஸ்டேஷனும், கிங்ஸ் குரொஸ் ஸ்டேஷனும் 1851–ல் அமைக்கப்பட்டன.

அதைத் தொடர்ந்து வேறு சில ஸ்டேஷன்களும் அமைக்கப்பட, இறுதியில் 1899இல் மேரி லெபோன் ஸ்டேஷன் கட்டி முடிக்கப்பட்டபோது லண்டனில் மொத்தம் 15 மெயின் ரயில்வே ஸ்டேஷன் கள் இருந்தன

எந்தவொரு ஐரோப்பிய நகரத்திலும் இல்லாத அதிக எண்ணிக்கையில்.

இந்த ரயில்வே ஸ்டேஷன்களை அமைத்த தனியார் ரயில்வே நிறுவனங் களில் ஒன்று 'சௌத் ஈஸ்ட்டர்ன்' ரயில்வே. இவர்களது ரயில் செல்வது லண்டனில் இருந்து கரையோர நகரமான போக்ஸ் டோன் நகரத்திற்கு.

கிட்டத்தட்ட 80 மைல்கள் தூரம் பயணம்.

'சௌத் ஈஸ்ட்டர்ன்' ரயில்வேயின் ரயில்கள் 1851ஆம் ஆண்டுவரை லண்டனின் மையப் பகுதிவரை வரவில்லை. 'லண்டன் பிரிட்ஜ்' ரயில்வே நிலையம் 1851இல் மீண்டும் கட்டப் பட்டபோதுதான் 'சௌத் ஈஸ்ட்டர்ன்' ரயில்வே நிறுவன ரயில்கள் லண்டனுக்குள் வரச் சந்தர்ப்பம் கிடைத்தது.

தேம்ஸ் ஆற்றின் தெற்குக் கரையில் அமைக்கப்பட்டிருந்த 'லண்டன் பிரிட்ஜ்' ரயில்வே நிலையம்தான் லண்டனின் மிகப் பழைய ரயில்வே நிலையம். 1836இல் லண்டன் அன்ட் கிரின்விச் ரயில்வே நிறுவனத்தினால் அமைக்கப்பட்ட அந்த ரயில்வே ஸ்டேஷன் மிகச் சிறியதாகவும் வசதியற்றதாகவும் இருந்துவிட, பயணிகளிடம் அவ்வளவாக பிரபல்யமாக இருக்கவில்லை.

எனவே 1851–ல் மீண்டும் கட்டப் பட்டு, நியூ 'லண்டன் பிரிட்ஜ்' ஸ்டேஷன் என்றபெயருடன் பயணிகளுக்காகத் திறந்துவிடப்பட்டது.

இப்படி அமைக்கப்பட்டுக் கொண்டிருந்த நேரத்தில்தான் 'சௌத் ஈஸ்ட்டர்ன்' ரயில்வே தனது ரெயில் சேவைக்காக லண்டனுக்குள் ஒரு ஸ்டேஷ்ன் தேவை என்று தேடத் தொடங்கியிருந்தது. அவர்களது பார்வையில் இந்த நியூ 'லண்டன் பிரிட்ஜ்' ஸ்டேஷன் தட்டுப்படவே, ஸ்டேஷன்; தண்டவாளம், பிளாட்பாரம், ரயில்வே அலுவலகங்கள் ஆகிய வற்றை தங்களது சேவைக்கு பயன்படுத்துவதற்கு ஒரு லீஸ் ஒப்பந்தத்தைச் செய்துகொண்டது.

அதன்படி, அந்த ரயில்வே ஸ்டேஷன், 'லண்டன் அன்ட் கிரின்விட்ச் லைன்' நிறுவனத்துக்கு சொந்தமானது.

(தொடரும்...)

# புலிகளின் வதை முகாமில்

வதை 125

## மணியம்



அப்போதைய இந்திய அரசாங்கத்தின் கவர்னர் சக்கரவர்த்தி இராஜகோபாலாச்சாரியர் (ராஜாஜி) பாலனின் விடுதலைப் பிரகடனத்தில் கையொப்பமிட்டு விடுதலை செய்தார். தோழர் சி.ஏ.பாலன் நூலும் மக்கள் மத்தியில் பெருவரவேற்பைப் பெற்றது. இவ்வாறான சிறைக் குறிப்புகளை உலகின் பல புரட்சிகரமான தலைவர்கள் எழுதியிருக்கிறார்கள். சிலர் சிறைக்குள் இருந்துகொண்டே எழுதியிருக்கிறார்கள். சிலர் விடுதலையாகி வெளியே வந்த பின்னர் எழுதியிருக்கிறார்கள்.

வியட்நாமின் தந்தை என வர்ணிக்கப்படும் தோழர் ஹோசிமின் தனது நாட்டை ஆக்கிரமித்த பிரெஞ்சு ஏகாதி பத்தியத்தையும். பின்னர் அமெரிக்க ஏகாதிபத்தியத்தையும் எதிர்த்துப் போராடுவதற்கு தனது நாட்டு மக்களுக்குத் தலைமை தாங்கி இன்றைய சுதந்திர சோசலிச வியட்நாமுக்கு வித்திட்டவர். அவர்கூட சீனாவின் பிற்போக்கு கோமின்டாங் ஆட்சியாளர்களினால் சில காலம் சிறை வைக்கப்பட்டவர். சிறந்த கவிஞரான அவர். சீனச் சிறையில் இருந்துகொண்டு எழுதிய கவிதைகள் ஹோசிமின் சிறைக் குறிப்புகள் என்றபெயரில் நூலாக வந்து வியட்நாமிய மக்களின் போராட்ட உணர்வு களுக்கு பெரும் உத்வேகத்தைக் கொடுத்தது.

அவர் தனது கவிதையொன்றில் தான் அடைத்து வைக்கப் பட்டிருந்த சிறைச் சூழலையும். தனது மனநிலையையும் பின் வருமாறு அழகாகக் கூறுகிறார்:

"யன்னல் வழியாக
அழகு நிலா பொழிகிறது
யாத்திடுக ஓர் கவிதை
என்றெனக்குச் சொல்கிறது
மின்னல் மனப் போர் வீரன்
நிலைமையிலே
யானுள்ளேன்
மீதமில்லை நேரமிங்கு
கவியேதும் பாடுதற்கு"

இந்த ஹோசிமின் கவிதைகள் எமது இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கஸ்தாபகர்களில் ஒருவரும். சிறந்த மொழிபெயர்ப் பாளருமான கண்டி தலாத்து ஓயாவைச் சேர்ந்த தோழர் கே.கணேஸ் அவர்களால் தமிழில் மொழிபெயர்க்கப்பட்டு. எமது யாழ்.புத்தக நிலையத்தால் பரவலாக விற்பனை செய்யப்பட்டது.

இவற்றை நான் ஏன் இங்கே குறிப்பிடுகிறேன் என்றால். சிறை வாழ்வில் ஏற்படும் அனுபவங் களை அதை அனுபவிக்கும் வேளையில் அல்லது விடு தலையாகி வந்த உடனே எழுத வேண்டும். அப்பொழுதுதான் அதில் முழுமையான உயி ரோட்டம் இருக்கும்.

யூலியஸ் பூசிக் தனது குறிப்பு களை எழுதியவேளையில். அவர் அதை எழுதுவதற்கு உலகின் மிகக் கொடுங்கோலன் என இன்றுவரையும் வர்ணிக்கப்படும் ஹிட்லரின் சிறையில் உள்ள காவலர்களே உதவி செய்திருக் கிறார்கள். அவர்கள் எழுதுகருவி களை அவருக்கு இரகசியமாகக் கொடுத்து உதவியதுடன். அவர் எழுதிய குறிப்புகளை வெளியே பத்திரமாகக் கொண்டு சென்று உரிய இடத்தில் சேர்த்தும் இருக் கிறார்கள். அந்த முகம் தெரியாத காவலர்கள் இல்லையென்றால் அவரது சிறைக் குறிப்புகள் வெளி வந்திருக்கவே முடியாது. அது வெளிவந்ததால்தான். அவரை உலகம் தெரிந்துகொண்டதுடன். சிறந்த பத்திரிகையாளரான அவரது நினைவுதினத்தையே சர்வதேசப் பத்திரிகையாளர் தினமாக உலகம் இன்று கொண்டாடுகிறது.

யூலியஸ் பூசிக் போல இல்லாவிடினும். இந்தியாவின் சி.ஏ.பாலன் விடுதலையாகி வந்தபின்னர். தனது சிறைக் குறிப்புகளை எழுதி வெளியிடு வதற்கான சுதந்திரம் இந்தியா வில் இருந்திருக்கிறது.

ஆனால் என்போன்ற புலிகளின் வதை முகாம்களில் இருந்தவர்களுக்கு அந்த வாய்ப்பு எள்ளளவும் இருக்கவில்லை. புலிகளின் வதை முகாமில் இருந்துகொண்டு ஒரு துண்டுக் கடதாசியோ அல்லது ஒரு பென்சிலோ எம்மால் பெறுவதை நினைத்தும் பார்க்கமுடியாது. எனது மூக்குக் கண்ணாடியைக் கூட அவர்கள் பறித்துவைத்துக் கொண்டார்கள்.

நான் விடுதலை செய்யப்பட்ட பின்னர்கூட யாழ்ப்பாணத்தில் வைத்து எனது வதைமுகாம் குறிப்புகளை எழுதுவதற்கு ஏற்ற சூழல் இருக்கவில்லை. புலிகள் 1995இல் யாழ்ப்பாணத்தை விட்டு அரச படைகளால் துரத்தப்பட்ட பின்னர் நான் கொழும்பு வந்து வாழ்ந்தபோதும்கூட. புலிகளது நிழல் என்னைத் தொடர்ந்து கொண்டிருந்ததால் என்னால் இந்தக் குறிப்புகளை எழுத முடிய வில்லை. இறுதியாக நான் தற்பொழுது வாழும் புலம்பெயர் தேசத்திற்கு வந்தபின்னரும்கூட. 2009இல் புலிகள் முற்றாக அழிக் கப்பட்ட பின்னரே எனது இதயத் தையும் பேனாவையும் திறக்க முடிந்தது. எத்தகைய கொடுங் கோலர்களிடம் எமது மக்கள் சிக்கி இருந்திருக்கிறார்கள்?

எனவே. நான் புலிகளின் சிறையில் இருந்தபோது எனக்கு ஒவ்வொரு விநாடியும் ஏற்பட்ட மன உணர்வுகளை. 20 வருடங்கள் கழித்து அதே மனநிலையுடன் எனது எழுத்துக்களில் பிரதிபலிக்க முடியாது என்றபோதிலும்.

இயன்றவுரை முயன்றுள்ளேன். எனது தொ-டரை வாசிப்பவர்களுக்கு எனது உணர்வுகளைச் சரியாகப் புரிந்து கொள்வது சிலவேளைகளில் சிரமமாக இருக்கலாம்.

ஆனால் இப்படியும் புலிகளின் வதை முகாம்களில் நடந்தது என்ற தகவல்களை அறிந்து கொள்வதற்குத் தன்னும் எனது இத்தொடர் உதவுமென நம்புகிறேன். அத்துடன் மற்றவர்களுக்கு நான் பட்ட துன்பங்களைத் தெரியப் படுத்துவது மட்டுமின்றி. எனது மனதுக்குள் பாறாங்கல்லாக அழுத்திக்கொண்டிருந்த அந்தத் துன்பச்சுமைகளை இறக்கி வைப்பதும் எனது இத்தொடரின் நோக்கங்களில் முக்கியமான ஒன்றாகும்.

புலிகளினால் பாதிக்கப்பட்டவர் களைக் கண்டறிந்து துயர் துடைப்பதற்கு உள்நாட்டு வெளி நாட்டுப் பொறிமுறைகள் உரு வாக்கப்பட வேண்டும்! புலிகள் வடக்கு. கிழக்கைத் தமது முழுக் கட்டுப்பாட்டில் வைத்திருந்த காலத்தில் அங்கு வாழ்ந்த மக்களுக்கு புலிகளின் இரும்புச் சப்பாத்து களின் 'சுவை' புரிந்திருக்கும். அந்த வாழ்க்கையிலிருந்து தப்பி வெளிநாடுகளுக்கு ஓடிப் போனவர்களுக்கு அந்தப் பயங்கர மான வலியின் வேதனை தெரிந்திருக்க வாய்ப்பில்லை. அதனால்தான் யுத்தத்தில் சிக்காமலும். புலிகளின் அதிகார தர்பாரில் அகப்படா மலும் புலம்பெயர் நாடுகளில் வாழும் பலர். புலிகளுக்கு விசுவாசமாகவும். பொழுது போக்காகத் தமிழ் தேசியம் பேசுபவர்களாகவும் இப்பொழுதும் கூட இருக்கிறார்கள்.

இந்தச் சிறை வாழ்க்கையில் ஒருவர் மிகவும் கூடுதலாகப் பாதிக்கப்படுவது முதலில் மனோ ரீதியாகத்தான். மனிதன்தான் தோன்றிய காலத்திலிருந்து சக மனிதர்களுடன் இணைந்த ஒரு கூட்டு வாழ்க்கையையே வாழ்ந்து வந்திருக்கிறான்.

இன்றைய உச்சக்கட்ட முதலாளித்துவ வளர்ச்சி நிலையால் கிராமிய வாழ்க்கை. கூட்டுக் குடும்ப வாழ்க்கை மட்டுமின்றி. தனிப்பட்ட குடும்பங்களே சிதை வடைந்த நிலையிலும்கூட. தனக்கு உறவானவர்கள் இல்லாவிட்டாலும் தான் வாழும் சூழலில் வாழும் இதர மனிதர்களுடன் ஏதோ ஒரு வகையில் உறவுகொண்ட தாகவே அவனது வாழ்வு அமைந்துள்ளது.

(தொடரும்...)

# நிலமெல்லாம் இரத்தம்

114

பா.ராகவன்

பலஸ்தீனிய விடுதலை இயக்கத் தலைவர் யசீர் அரபாத் தன் ஞாபகத்தில் இருக்கும் முதல் சம்பவமாக வர்ணித்த காட்சிதான் மேலே சொன்னது. அந்தச் சிறுவன் அவர்தான். அது ஜெருசலேத்தில் உள்ள அவரது மாமா வீடு. நள்ளிரவில் வீடு புகுந்து தாக்கியவர்கள், அப்போது பாலஸ்தீனைக் கைப்பற்றி ஆண்டுகொண்டிருந்த பிரிட்டிஷ் படையினர். அரபாத்துக்கு அப்போது வயது ஐந்து.

அந்த ஐந்தாவது வயது தொடங்கி, தம் வாழ்நாள் முழுவதும் அவர் சுமார் பத்தாயிரம் கலவரங்களைக் கண்ணெதிரே பார்த்திருக்கிறார். பல இலட்சம், உயிர்கள் பலியாவதைக் கண்டிருக்கிறார்.

கிடையாது. சம்பாதிப்பதற்காகத்தான் அவர் போராளியானார் என்று குற்றம் சாட்டுவோர் உண்டு. பின்னாளில் அவரது சொத்துக்கள் என்று கணக் கெடுக்கப்பட்டவற்றைச் சுட்டிக்காட்டி, அப்போதே சொன்னாமே கேட்டீர்களா, என்று கேலி செய்தோரும் உண்டு.

ஆனால் இஸ்லாத்தில் தந்தையைக் காட்டிலும் தாய்வழி உறவுக்குத்தான் மதிப்பு அதிகம். தாய்வழிப் பூர்வீகம் தான் அந்தக் காலத்தில் பலஸ்தீனில் முக்கிய உறவுத் தொடர்புச் சங்கிலியாக அறியப்பட்டது. அந்தவகையில் அரபாத்தின் பூர்வீகம் ஜெருசலேம்தான் என்பதில் எந்த சந்தேகமும் இல்லை. ஆனால் அவர் ஜெருசலேத்தில் பிறந்தவர் அல்லர். எகிப்தில்தான் பிறந்தவர் என்பதிலும் சந்தேகமும் இல்லை.

அரபாத்துக்கு ஐந்து வயதானபோது அவரது தாய் இறந்துவிட்டார். ஆகவே குழந்தை தாய்மாமன் வீட்டில் வளர்வது நல்லது என்று உறவினர்கள் முடிவு செய்து அவரை ஜெருசலேத்துக்குக் கொண்டு வந்துவிட்டார்கள். அப்படி வந்த போதுதான் முன்னர் நாம் பார்த்த அந்த நள்ளிரவுக் கலவரச் சம்பவம் நடந்தது.

சுமார் நான்கு வருடங்கள்வரை அரபாத், மாமா வீட்டில், ஜெருசலேத்தில் இருந்தார். அதாவது ஒன்பது வயதுவரை



நூற்றுக்கணக்கான வீடுகள் இடிக்கப் பட்டு, தரைமட்டமாக்கப்பட்டதைப் பார்த் திருக்கிறார். ஆயிரமாயிரம் மக்கள் அகதிகளாக, இருக்க இடமின்றிப் பாலைவனங்களில் அலைந்து திரிந்ததைக் கண்டு இரத்தக்கண்ணீர் விட்டிருக்கிறார். ஒரு துண்டு ரொட்டிக்காகத் தம் இனத்து மக்கள் பல மைல்கள் நடந்து, பிச்சைக்காரர்கள்போல் நடத்தப்பட்ட காட்சிகளைப் பார்த்திருக்கிறார். பாடப்புத்தகங்களைத் தூக்கிக் கொண்டு பள்ளிக்கூடங்களுக்குப் போகவேண்டிய குழந்தைகள், நாட்டுப் துப்பாக்கி ஏந்தி போர்க்களம் காணவேண்டிய சூழலுக்குத் தள்ளப்படுவதன் ஆதாரக் காரணம் என்னவென்று சிந்திக்க ஆரம்பித்தபோதுதான் அரபாத்துக்குள் இருந்த போராளி கண்விழித்தான். அவருக்குள் இருந்த தலைவன் சீற்றம் கொண்டான்.

வேறுவழியே இல்லாமல்தான் அரபாத் துப்பாக்கி ஏந்தினார். இறக்கும்வரை ஏந்திய துப்பாக்கியை அவரால் இறக்கி வைக்கவே முடியவில்லை.

பலஸ்தீன் போராட்டத்தின் மிக முக்கிய அத்தியாயம், யசீர் அரஃபாத். அவரைப் பற்றிப் பார்க்கும்போது முதலில் நாம் கவனித்து உள்வாங்கிக் கொள்ளவேண்டிய விஷயம் அரபாத் பாலஸ்தீனில் பிறந்தவர் இல்லை என்பது!

அரபாத் எகிப்தில் கெய்ரோவில் பிறந்தவர். அவரது தந்தை அங்கே ஒரு சுமாரான துணி வியாபாரி, தாய் வழியில்தான் பலஸ்தீன் தொடர்பு அவருக்கு வருகிறது. அரபாத்தின் அம்மாவின் பூர்வீகம் ஜெருசலேம். இதை ஒரு முக்கிய குறையாகச் சுட்டிக் காட்டி, அரபாத்துக்கு பலஸ்தீன் மீது உண்மையிலேயே அக்கறை

அந்த நான்கு வருட காலமும் அவருக்கு ஜெருசலேம் நகரம் ஒரு விநோதமான பிராந்தியமாகவே தெரிந்தது. திடீர் திடீரென்று குண்டுகள் வெடிக்கும், திடீர் திடீரென்று கடையடைப்பு நடக்கும். எதிர்பாராத நேரங்களில் இராணுவ அட்டகாசம் ஆரம்பமாகும்.

ஒரு பக்கம், புனித பூமி என்று கண்மூடி, கையேந்தித் தொழுதுகொண்டு, இன்னொரு பக்கம் அச்சத்துடன்தான் அங்கே வாழ முடியும் என்கிற நிலைமை, சிறுவன் அரபாத்துக்குப் புரியவில்லை. ஒன்று மட்டும் தெளிவாகப் புரிந்தது.

வாழ்க்கை என்பது போராட்டம். உணவுக்காக, உறைவிடத்துக்காக, ஊருக்காக என்று மட்டுமல்ல. வாழ்வ தென்பதே போராட்டம்தான் என்று அவருக்குத் தோன்றியது. தன்னால் முழு அக்கறை செலுத்திப் பள்ளிப் பாடங்களைப் படிக்க முடியாது என்றும் நினைத்தார். பாதுகாப்புக்கு ஒரு குறு வாளாவது இல்லாமல் வெளியே போக முடியாது என்கிற நிலைமையில், பாடங்கள் எப்படி ஏறும்?

மனத்தளவில் மிகவும் பாதிக்கப்பட்டி ருந்தார் அரபாத். எப்போதாவது கெய்ரோ வில் உள்ள தமது மூத்த சகோதரிக்குக் கடிதங்கள் எழுதுவார். ஜெருசலேத்தில் தன்னால் சமநிலையுடன் வாழ முடியவில்லை என்று அடிக்கடிதங்களில் மிகவும் வருத்தப்படுவார். இங்கே மக்கள் படும் பாடுகளைப் பார்த்தால் நாளெல்லாம் உட்கார்ந்து கதறித் தீர்க்கலாம் போலிருக்கிறது என்று ஒரு கடிதத்தில் எழுதியிருக்கிறார்.

இதனை முற்றிலும் தவறாகப் புரிந்து கொண்ட அரபாத்தின் சகோதரி, தன் தந்தையிடம் சொல்லி, அரபாத்தை கெய்ரோவுக்கு அழைத்துக்கொண்டுவிட ஏற்பாடு செய்துவிட்டார்.

( தொடரும்...)

# காதல் ஊழல்

2



**ஏழைகள்** அவனை ஒரு ஹீரோவாகவே நினைக்கிறார்கள். அவனோடு ஒரு கீழ் மட்ட மக்கள் கூட்ட மிருக்கும். அவர்கள் அவனுக்காக உயிரை யும் கொடுக்கத் தயாராக இருப்பார்கள். எல்லா நாட்டிலும் அதுவே யதார்த்தம். எமது நாட்டிலும் அதுவே பொருத்தம்!

அப்படிப்பட்ட ஏழை எழுத்தாளன்தான் விடுதலையும். அவனுக்கெண்டு ஒரு கூட்டமிருந்தது. நானும் அந்தக் கூட்டத்தில் ஒருவனாய் இருந்தேன். அவன் கூற்று முழுவதையும் சரியாகவே கணிப்புச் செய்தேன்.

என்னைப்போல்தான் புஸ்பாவும் இருந்திருக்கவேண்டும். நான் ஆண் என்பதால் அவன்மேல் எனக்கு அரும்பிய காதல் அறுந்து போனது...! அன்பும் பற்றும் நம்பிக்கையும் இருந்தது.

அவள் பெண் என்பதால் காதல் எனும் அறுக்கமுடியாத பிண்ணப்பு. அவர்கள் இருவரையும் பிணைத்துக் கட்டியதுபோல் எனக்குள் தோன்றினாலும், உண்மை எதுவென்று கண்டறிவேன். ஆகவே படபடப்பு இல்லாமல் கதையைப் படியுங்கள்.

காலம் நகரநகர எனக்கு உண்மைகள் கிடைக்கும். காத்திருங்கள். கட்டாயம் நிஜங்களை உரைப்பேன். உறைப்போ, புளிப்போ உண்மை வரும்.

என் உணர்வுகளை தொட்ட ஒவ்வொரு வரியும் உங்களையும் நாடிவரும். உண்மையில் நாம் கணிப்பதுபோல் மனிதன் இருப்ப தில்லை. சிலர் உண்மையில் நல்லவர்கள்தான். ஆனால் பலர் கெட்டவர் நல்லவராய் நடிப்பார்கள்.

உண்மைகளை புதைத்து பொய்யை மட்டும் உலகமும் நம்பும். இந்த மனித சமுதாயத்தில் போலிகளுக்கு புகழும் அந்தஸ்தும் இருக்கும். ஒரு உண்மையாளனின் வாழ்கை வரலாறு என்றும் உண்மையாகவே இருக்கும்.

ஆன்மீகச் சொற்பொழிவாற்ற வரவில்லை. அழகிய உலகின் அருவருப்பான மனித வாழ்க்கையின் சுவடுகளை சொல்ல நினைத்தேன். சொல்லுகிறேன்!

விடுதலை பிறந்த சில மாதங்களிலேயே தந்தை இறந்துவிட்டார்!

அவன் பிறந்த இடம் வன்னி பெருநிலப்பரப்பில் முல்லைத்தீவு மாவட்டம் முள்ளியவளையில்.

சிறு வயது முதல் இடப்பெயர்வுகளை யும், துப்பாக்கி ரவைகளையும்



கண்டான். விடுதலையின் தாய் பொன்னம்மாவின் சொந்த இடம் யாழ்ப்பாணம் பலாலியாகும்.

பலாலியில் இராணுவ முகாம் அமைத்ததால் வன்னிக்கு இடம் பெயர்ந்தார். அது ஆயிரத்து தொள்ளாயிரத்து தொண்ணூறாம் ஆண்டுதான் நிகழ்ந்தது.

அப்பொழுது விடுதலைக்கு வயது பத்து. அன்றுமுதல் இன்று வரை அவர்களின் வாழ்வின் மையமாக இருப்பது வன்னியே!

பலாலிக்கு போவதற்கு பலமுறை முயற்சித்தும் தோற்றுப்போனார் கள். அந்த இடம் அன்று முதல் இன்றும் அதியுயர் பாதுகாப்பு வலயமாய் இருப்பதால் எதை செய்தாலும் எவராலும் எடுக்க முடியாது...!

ஏனெனில், அதுதான் வடமாகாணத்தின் பாதுகாப்புப் படையின் முதுகெலும்பு என்பதே மிகவும் பொருத்தம். பாதுகாப்பு படைகளின் முதுகெலும்பு என்பதைவிட இலங்கையின் சுவாசக்காற்று எனலாம். ஒரு நாட்டின் பாதுகாப்பு படைகளின் கைகளில் தங்கியிருப்பது போலவே படைகளை நிறுத்தியிருக்கும் இடமும் முக்கியமானது.

இடப்பெயர்வால் பொன்னம்மா வந்ததால் வன்னியில் அவளுக்கு குந்தவும் இடமில்லை. எவர் உதவியும் இல்லாமல் பத்து வயது மகனுடன் வீடு வீடாக ஆயாவேலை செய்து அன்றன்று அவள் வயிறும் மகன் வயிறும் கழுவினாள்.

(ஊழல் தொடரும்...)

மிஹிந்தலை A.பாரிஸ்



**வே. அர்ச்சுனன்**

# யாழில் இருந்து 04 முள்ளிவாய்க்கால் வரை

**புதிய தொடர்**



**புலிகளின்** இரண்டு போராளிகளையும் மீசாலை, மந்துவில் கிராமத்தில் சந்தித்த பல்கலைக்கழக மாணவர் ஒன்றிய பிரதிநிதிகள் அடுத்த கட்ட நடவடிக்கைகள் தொடர்பாக இவர்களுடன் ஆராய்ந்ததுடன் தமிழ்ச்செல்வனால் பல்கலைக்கழக மாணவர் ஒன்றிய தலைவரிடம் கையளிக்குமாறுகூறி ஒரு விசேட கடிதத்தையும், இதைவிட முதற்கட்டமாக பத்து இலட்சம் ரூபா பணமும் வழங்கப்பட்டது.

பொங்குதமிழ் நிகழ்வை சிறப்பாக நடத்துவதற்கும் அதற்குரிய பிறவேலைத் திட்டங்களை தயாரிப்பதற்கும் 75 இலட்சம் ரூபா செலவாகும் எனப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றிய செயலாளர் திவ்வியனால் மதிப்பீடு செய்யப்பட்டு ,அந்த மதிப்பீடு தொடர்பான மதிப்பீட்டு அறிக்கையும், புலிகளின் அரசியல்துறைப் போராளிகளிடம் கையளிக்கப்பட்டிருந்தது.

ஆனால், பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தை சந்தித்த புலிகள் இயக்கப் போராளிகள் இவர்கள் வழங்கிய மதிப்பீடு தொடர்பில் சுயமாக முடிவு எடுக்கவோ அல்லது அந்த செலவீனத் தொகை தொடர்பாக சரியான மதிப்பீடைச் செய்யக் கூடிய ஆற்றலோடோ அவர்கள் இருக்கவில்லை. அவர்கள் இவர்களிடம் கூறியது, உங்களுக்குத் தேவையான நிதி உதவியிலிருந்து அனைத்து வகையான ஏற்பாடுகளையும் செய்து கொடுக்குமாறு தமிழ்ச்செல்வன் அண்ணா உத்தரவிட்டுள்ளார். உங்களுக்கு தேவையான மிகுதி நிதியை நாங்கள் ஒரு வாரத்திற்குள் உங்களிடம் வழங்கிவிடுவோம் என்று அங்கு நின்ற அரசியல்துறைப் போராளிகளால் வாக்குறுதி அளிக்கப்பட்டது.

இதனை அடுத்து குறித்த பல்கலைக்கழக மாணவர் ஒன்றிய தலைவரும் செயலாளரும் பல்கலைக்கழகத்திற்கு வந்து பல்கலைக்கழக பேராசிரியர் சிதம்பரநாதன் குழுவினரைச் சந்தித்து பொங்குதமிழுக்கு கிடைத்த அங்கீகாரம் மற்றும் அதனை எவ்வாறு முன்னெடுப்பது போன்ற விடயங்கள் தொடர்பில் சிதம்பரநாதனின் வீட்டில் விரிவாக எடுத்து விளக்கப்பட்டதுடன் இங்கு இவர்களுடன் பத்மினி சிதம்பரநாதனும் இவர்களுடன் இந்தக் கலந்துரையாடலில் ஈடுபட்டிருந்தார்.

முதன்முதலாக முக்கால் யம்பருடன் பத்மினி சிதம்பரநாதனை தரிசித்த பல்கலைக்கழக மாணவர் ஒன்றிய பிரதிநிதிகள் பொங்குதமிழ் தொடர்பான ஏற்பாட்டு நிகழ்வுகளில் பத்மினியை தீவிரமாக பங்கெடுக்குமாறும் தமிழ்ச்செல்வன் அண்ணாவும் உங்களது செயற்பாட்டை பாராட்டியதாகவும் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியப் பிரதிநிதிகளால் கூறப்பட்டதுடன் விரைவாக பொங்குதமிழ் விழிப்புணர்வு கூட்டங்களை பல்கலைக்கழகத்திற்குள் ஒழுங்குபடுத்தி நடத்துவதற்குரிய செயற்திட்டத்தை ஆரம்பிக்குமாறும் இதற்குரிய ஊடகவியலாளர் மாநாட்டை விரைவாகக் கூட்டுவதென்றும் முடிவெடுக்கப்பட்டது.

இதேவேளை இதற்குரிய நிதிமூலங்கள் இந்த நிதி எவ்வாறு கிடைக்கின்றது? என்ற விபரங்கள் எவையும் சிதம்பரநாதன் குழுவினருடன் இவர்கள் கதைக்கவில்லை. அப்போது சிதம்பரநாதன் இதை நாங்கள் சரியாக முன்னெடுக்க வேண்டுமாக இருந்தால் கூடுதலான நிதி தேவைப்படும் என்றும் இந்த நிதியை எவ்வாறு பெற்றுக் கொள்வதென்றும் இவர்களிடம் கேள்வி எழுப்பியபோது நிதி வளம் தொடர்பில் நாங்கள் பெரிதாக யோசிக்கத் தேவையில்லை. அதைவிட புலிகளிடம் நாங்கள் நிதி தொடர்பில் கேட்கவும் கூடாது.

ஏனென்றால், அவர்கள் அங்கு சரியாக கஷ்ரப்படுகிறார்கள். எனவே நிதி தொடர்பில் நாங்கள் இங்குள்ள பொது அமைப்புக்களைச் சந்தித்து அவர்கள் ஊடாக நிதி மூலங்களைப் பெறலாம். அது பெரிய விடயமல்ல. நாங்கள் உடனடியாக செயற்திட்டத்தில் இறங்கவேண்டியதுதான் என்று விளக்கமளிக்கப்பட்டதுடன், தங்களது சொந்தப் பணத்திலிருந்து வழங்குவது போன்று பத்து இலட்சம் ரூபா நிதியில் இருந்து 50ஆயிரம் ரூபா பணம் சிதம்பரநாதன் குழுவினரிடம் இவர்களால் கையளிக்கப்பட்டது. உடனடியாகவே சிதம்பரநாதன் இதை நிராகரித்தபோது, இல்லை இதை உங்களிடம் வழங்குமாறு ஒரு தமிழ்ப் பற்றாளர் எங்களிடம் வழங்கியிருந்தார்.



எனவே இந்த நிதியை நீங்கள் உங்களுடன் இணைந்து செயற்படுகின்ற பிள்ளைகளின் போக்குவரத்து மற்றும் உணவு செலவுகளுக்கு பயன்படுத்துமாறு கூறப்பட்டது. ஆனால் அரசியல் துறையினர் வழங்கிய 10லட்சம் ரூபா தொடர்பில் இவர்கள் மூச்சேவிடவில்லை. இதைவிட நிதிக்குரிய முழுமையான பொறுப்பையும் கஜேந்திரன் திவ்வியனிடமே விட்டுவிட்டார். ஆனால் திவ்வியன் இந்த நிதியை ஒருபுறத்தில் செலவுகளுக்குப் பயன்படுத்திக்கொண்டு மறுபுறத்தில் தனது தம்பியாகிய சியாம் ஊடாக நிதி நடவடிக்கைகளை கையாளுவதற்குரிய வேலைத் திட்டத்தை முன்னெடுத்தார். குறிப்பாக சியாம் ஒரு பிரதேச சபையின் அரச ஊழியராக பணியாற்றிக்கொண்டிருந்தார்.

இருந்தபோதிலும் புலிகளின் வேலைத்திட்டங்களை முன்னெடுப்பதில் தனது கூடுதலான நேரங்களை செலவீடு செய்தார். குறிப்பாக பல்கலைக்கழக மாணவர் ஒன்றிய பிரதிநிதிகளையும் புலிகளின் போராளிகளையும் இணைக்கும் வேலைத்திட்டம் உட்பட யாழ். மாவட்டத்தில் உள்ள 'பொது அமைப்புக்களை சந்திக்கின்ற வேலைத் திட்டங்களையும் சியாம் ஒழுங்குபடுத்திக் கொடுத்திருந்தார். தனக்கிருந்த அரச பணியாளர் அடையாள அட்டையை பயன்படுத்தியவாறு யாழ். மாவட்டத்திலுள்ள மூலைமுடுக்கெல்லாம் சென்றுவரக்கூடிய வல்லமை சியாமிடம் இருந்தது. படையினரும் அரச ஊழியர்களுக்கு ஒரு கௌரவத்தை வழங்கி போக்குவரத்துகளின்போது அவர்களுக்குரிய சோதனைக் கெடுபிடிகளை ஓரளவிற்கு தளர்த்தியிருந்தனர்.

இதனை சாதகமாகப் பயன்படுத்திக் கொண்ட சியாம் யாழ். மாவட்டத்திலிருந்த பிரபலமான வர்த்தக நிறுவனங்கள், முதலீட்டாளர்கள், மற்றும் பொது அமைப்புக்களின் பிரதிநிதிகளை புலிகள் சந்திப்பதற்குரிய ஏற்பாடுகளை மேற்கொள்வதில் திறமையாக பணியாற்றிக்கொண்டிருந்தார். குறிப்பாக பொங்குதமிழுக்கென மேலதிகமான மாணவர்கள் கோரிய மிகுதி நிதியை எவ்வாறு திரட்டுவது என்ற ஆலோசனையை சியாம் அங்கு நின்ற அரசியல்துறைப் போராளிகளுக்கு எடுத்து விளக்கியதுடன் அந்த நிதியை பெறுவதற்குரிய வழிமுறையையும், சொல்லிக் கொடுத்ததுடன் மட்டும் நிற்காமல் அதற்குரிய செயல்திட்டத்திலும் உடனடியாகவே ஈடுபட்டார்.

இக்காலப் பகுதியில் யாழ் மாவட்ட பல்நோக்கு கூட்டுறவு சங்கத்தின் சமாசம் மற்றும் யாழ்மாவட்ட கடற்றொழிலாளர் சம்மேளனம், யாழ். மாவட்ட வர்த்தக சங்கம் உள்ளிட்ட பொது அமைப்புக்களிடமிருந்து முதல் கட்டமாக 25 லட்சம் ரூபா வீதம் புலிகளால் அறவீடு செய்யப்பட்டது. இவ்வாறு அறவீடு செய்யப்பட்ட பணத்தில் ஒரு பகுதி மட்டுமே பொங்கு தமிழ் செலவுகளுக்காக சியாமால் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்திடம் வழங்கப்பட்டது. மிகுதி நிதியை சியாம் தனது தாயாரின் வங்கிக் கணக்கிலும் தனது வங்கிக் கணக்கிலும் வைப்பிலிட்டு பின்னைய நாட்களில் இந்த நிதி வளத்தைப் பயன்படுத்தி அவர் மேற்குலக நாடுகளுக்கு சென்றுள்ளமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

ஆனால் மேற்குலக நாட்டிற்கு சென்ற சியாம் அங்கு நின்று புலிகளுக்கு எந்தவொரு உதவியும் செய்யாமல் இருந்ததுடன் புலிகளுடனான தொடர்புகளையும் முழுமையாகத் துண்டித்துவிட்டார். பல்கலைக்கழக மாணவர் ஒன்றிய தலைவர் கஜேந்திரன் ஒரு கட்டத்தில் பாராளுமன்ற உறுப்பினராக இருந்த காலப் பகுதியில் சியாமுடன் தொடர்வு கொள்வதற்கு பல தடவைகள் முயற்சித்தபோதிலும் சியாம் இவர்களுடன் எந்த தொடர்பையும் பேண முன்வரவில்லை. என்பதுடன் இவர்களுடன் கதைப்பதையே தவிர்த்துக் கொண்டார்.

இதனால் சினமடைந்த கஜேந்திரன் இவர் தொடர்பில் தமிழ்ச்செல்வனிடம் போட்டுக் கொடுத்தபோது இவர் தமிழீழத்திற்கு வருகின்றபொழுது கவனிப்போம் என தமிழ்ச்செல்வன் சிரித்தவாறு கஜேந்திரனிடம் சொல்லி சமாளித்துக் கொண்டார். உண்மையில் பொங்கு தமிழ் நிகழ்வை மாணவர் ஒன்றியத்தினர் நடத்தியபோதும் இதில் தனிப்பட்ட சிலர் தங்களது பொக்கெட்டுக்களை பணத்தால் நிரப்பிய பின்புல வரலாறுகளும் இருந்திருக்கிறது. தொடர்ந்து பொங்குதமிழ் நிகழ்விற்கான முன்னெடுப்புகள், அதன் பின்னணிகள் அதன் பின்னர் யாழ்ப்பாணத்தில் நிகழ்ந்த நிகழ்வுகள் இவை முள்ளிவாய்க்கால் வரை எவ்வாறு நகர்ந்து சென்றன என்பது தொடர்பில் தொடர்ந்து பார்ப்போம்.

**(தொடரும்)**

# பலஸ்தீனத்தின் அழிவில் இஸ்ரேலின் தோற்றம்

தொகுப்பு: வேணு கிருஸ்ணா



"யூதர்கள் உலகம் முழுவதும் பரந்து வாழ்கிறார்கள். ஆனால் யூதர்களுக்கு என்று ஒரு தாயகம் இல்லை." இந்தக் கூற்று முதலில் சியோனிச தேசியவாதிகளின் சுலோகமாக இருந்தது. பின்னர் ஆங்கிலேய, பிரெஞ்சு ஏகாதிபத்தியங்களால் உலகம் முழுவதும் பரப்பப்பட்டது.

19ஆம் நூற்றாண்டில் ஐரோப்பிய கண்டத்தில் உருவான தேசியவாத எழுச்சியின் எதிர்வினையாகத்தான், சியோனிச அரசியல் அமைப்பு உருவானது. அவர்களது அரசியல் ஒரு மதநூலான பைபிளை அடிப்படையாகக் கொண்டிருந்தது. (யூத மதத்தவரின் புனித நூலான 'தோரா', கிறிஸ்தவர்களால் பைபிளில் 'பழைய ஏற்பாடு' என்றபெயரில் இணைக்கப்பட்டது.)

பைபிளில் வரும் சரித்திர சம்பவங்கள் போன்று தோற்றமளிக்கும் கதைகள், புராண - இதிகாச தரவுகளைவிட சற்றுதான் வேறுபடுகின்றது. சரித்திரம் என்பது, ஒரு சம்பவம் நடந்ததாக விஞ்ஞான பூர்வமாக நிரூபிக்கப்படவேண்டிய தேவை உள்ள ஒன்று. இல்லாவிட்டால் அவை வெறும் புராண - இதிகாச கதைகள் என்ற வரையறைக்குள்தான் வரும்.

சில உண்மைகள் இருக்கலாம், சம்பவங்கள் ஒன்றில் வேறு இடத்தில், வேறு பெயரில் நடந்திருக்கும், அல்லது மிகைப்படுத்தப்பட்டவையாக இருக்கலாம். இல்லாவிட்டால் அப்படியான ஒன்று நடந்திருக்கவே வாய்ப்பில்லாத, கற்பனைக்கதையாகவும் இருக்கலாம். சியோனிஸ்ட்டுகளுக்கு அதைப் பற்றியெல்லாம் அக்கறை இல்லை. பைபிளின் படி தமது தாயகமான இஸ்ரேல், அப்போது பிரிட்டிஷ் ஆட்சியின்கீழ் இருந்த பலஸ்தீனத்தில் இருப்பதாக நம்பினர். பைபிள் என்ற மத நூலை, தமது இயக்கத்திற்கான அரசியல் தத்துவார்த்த நூலாக மாற்றினார்.

பலஸ்தீனத்தில் (அதாவது தமது முன்னோரின் தாயகத்தில்) சென்று குடியேறுவதற்காக உலகம் முழுவதும் யூத முதலாளிகளிடம் நிதி சேர்த்தனர். ஆரம்பத்தில் கிழக்கு ஐரோப்பிய யூதர்கள் தான், பலஸ்தீனத்தில் சென்று குடியேற முன்வந்தனர். (ரஷ்ய பேரரசர் சேர் ஆட்சிக் காலத்தில் நடந்த, யூதர்களுக்கு எதிரான 'பொக்ரொம்' என்ற இனப்படுகொலை ஒரு காரணம்.) சியோனிச அமைப்பு சேகரித்த நிதியைக் கொண்டு, பலஸ்தீன நிலவுடமையாளரிடம் நிலங்களை வாங்கி குடியேறினர்.

புதிதாக உருவான யூத கிராமங்கள் கூட்டுறவு விவசாய அடிப்படையில் தமது தேவைகளை பூர்த்தி செய்துகொண்டன. இரண்டாம் உலக யுத்தம் நெருங்கிக் கொண்டிருந்த காலகட்டத்தில், பெருமளவு யூதர்கள், கப்பல் கப்பலாக பலஸ்தீன் செல்வதை, பிரிட்டன் விரும்பவில்லை. அதனால் பல்வேறு தடைகள் ஏற்படுத்தப்பட்டன. அப்போது பலஸ்தீனத்தில் இருந்த யூதர்கள் பயங்கரவாத குழுக்களை உருவாக்கி, பிரிட்டிஷ் இலக்குகளை தாக்கினர்.

ஜெர்மனியில் ஹிட்லரின் யூத இனப்படுகொலையும், இரண்டாம் உலகப்போரில் நேச நாடுகளின் வெற்றியும், உலக வரைபடத்தை மாற்றியது. இஸ்ரேல்-பலஸ்தீனம் என்ற இருதேசங்களை உருவாக்க பிரிட்டனும், ஐக்கிய நாடுகள் சபையும் ஒப்புக்கொண்டன. சியோனிஸ்டுகளின் இஸ்ரேலிய தாயகக் கனவு நிஜமானது. அவர்கள் எழுதிவைத்த அரசியல் யாப்பின்படி, உலகில் எந்த மூலையில் இருக்கும் யூதரும், இஸ்ரேலின் பிரசையாக விண்ணப்பிக்கலாம். (பூர்வக்குடிகளான பலஸ்தீன அரேபியருக்கு அந்த உரிமை இல்லை).

அதன் படி, ஐரோப்பாவில் வசித்த யூதர்கள் மட்டுமல்ல, ஈராக், யேமன், மொரோக்கோ போன்ற மத்திய கிழக்கு நாடுகளில் வசித்த யூதர்களும் இஸ்ரேலில் வந்து குடியேறுமாறு ஊக்குவிக்கப்பட்டனர். பெரும் பணச் செலவில், அதற்கென பிரத்தியேகமாக அமர்த்தப்பட்ட வாடகை விமானங்கள், இலட்சக்கணக்கான யூதர்களை இஸ்ரேல் கொண்டு வந்து சேர்த்தன. இந்தியா, கேரளாவில் இருந்தும் சில ஆயிரம் யூதர்கள் சென்று குடியேறினர்.

சியோனிஸ்டுகள் கண்ட கனவு நிதர்சனமானாலும், இஸ்ரேல் என்ற தாயகத்தை கட்டியெழுப்ப தேவையான மனித வளம் இருந்தபோதும், வேண்டிய நிதி வழங்க யூத பெருமுதலாளிகள் மற்றும் (குற்றவுணர்வு கொண்ட) ஜேர்மனி இருந்த போதும், ஒரேயொரு குறை இருந்தது. இஸ்ரேல் என்ற தாயகக் கோட்பாட்டின் நியாயவாத அடிப்படை என்ன? பைபிளை தவிர வேறு எந்த ஆதாரமும் இருக்கவில்லை. இன்றைய விஞ்ஞான உலகில் ஒரு மதநூலை ஆதாரமாக காட்டி யாரையும் நம்பவைக்க முடியாது. சரித்திரபூர்வ ஆதாரங்கள் தேவை.

பைபிளில் எழுதியிருப்பதெல்லாம் உண்மை என்று நம்பும் இஸ்ரேலிய ஆட்சியாளர்கள், அவற்றை நிரூபிக்கும் நோக்கில், சரித்திர ஆசிரியர்களையும், தொல்பொருள் ஆராய்ச்சியாளர்களையும், மொழியியல் அறிஞர்களையும் பணியில் அமர்த்தினர். இஸ்ரேல் உருவாகி அறுபது ஆண்டுகளாகியும், இந்த ஆராய்ச்சியாளரால் பைபிளில் உள்ளபடி "புலம்பெயர்ந்து வாழும் யூத மக்களின் தாயகம் இஸ்ரேல்" என்னும் கருத்தை இன்றுவரை நிருபிக்க முடியவில்லை.

மேலும் பைபிளில் எழுதப்பட்டுள்ள கதைகள் உண்மையில் நடந்ததற்கான எந்த ஆதாரமும் இல்லை. பிள்ளையார் பிடிக்கப் போய், அது குரங்காக மாறிய கதையாக, தாம் காலங்காலமாக கட்டி வளர்த்த நம்பிக்கை தகருவதை காணப் பொறுக்காத இஸ்ரேலிய ஆட்சியாளர்கள், இந்த ஆராய்ச்சி முடிவுகளை வெளிப்படுத்த தயக்கம் காட்டுகின்றனர். இன்றுவரை உலகில் மிகச் சிலருக்கு மட்டுமே தெரிந்த, ஆராய்ச்சியின் பெறுபேறுகளை இங்கே தொகுத்து தருகிறேன்.

1980ஆம் ஆண்டு இடம்பெற்ற நில நடுக்கம் சியோனிச கட்டுக்கதைகளை அம்பலப்படுத்தியது. அதுவரை அறியாத பழங்கால இடிபாடுகளை வெளிப்படுத்தியது, அந்த நிலநடுக்கம். ஆனால் அந்த கண்டுபிடிப்புகள் எதுவும் யூதக் கதைகளை உண்மையென்று நிரூபிக்காததால், தொல்பொருள் ஆராய்ச்சியாளர்கள் ஏமாற்றமடைந்தனர். அதிலிருந்துதான் இஸ்ரேலின், அல்லது யூத வரலாற்றை புதிய கண்ணோட்டத்துடன் பார்க்கும் போக்கு ஆரம்பமாகியது. பைபிளில் கூறப்பட்டுள்ள பெரும்பாலான கதைகள் உண்மையாக இருக்கமுடியாது என்பது நிரூபிக்கப்பட்டது.

கிறிஸ்தவர்களுக்கு இயேசு எந்த அளவுக்கு முக்கியமோ, அதுபோல யூதர்களுக்கு மோசெஸ் ஒரு கேள்விக்கிடமற்ற தீர்க்கதரிசி. எகிப்தில் அடிமைகளாக இருந்த யூதக்குடிகளை மோசேஸ் விடுதலைசெய்து, செங்கடலை கடந்து, கடவுளால் நிச்சயிக்கப்பட்ட நாட்டிற்கு (பலஸ்தீனம்) கூட்டிச்சென்றதாக பைபிள் கூறுகின்றது. ஆனால் சரித்திர ஆசிரியர்கள் அப்படி ஒரு சம்பவம் நடந்திருக்க வாய்ப்பில்லை என்று நிரூபிக்கின்றனர்.

முதலாவதாக இப்போது உள்ளது போல அப்போதும், எகிப்திற்கும் பலஸ்தீனத்திற்கும் இடையில் நிலத்தொடர்பு இருந்திருக்கும்போது, மொசெஸ் எதற்காக கஷ்டப்பட்டு கடல் கடக்கவேண்டும்? இரண்டாவதாக பைபிள் கூறும் காலகட்டத்தை வைத்துப் பார்த்தால்கூட, அன்று பலஸ்தீனம் எகிப்து தேசத்தின் ஒரு பகுதியாக இருந்தது. மோசெஸ் வழிநடத்திய யூத குடிமக்கள் எகிப்தின் உள்ளே தான் இடப்பெயர்ச்சி செய்திருக்க வேண்டும்.

மூன்றாவதாக எகிப்தியர்கள் பல சரித்திர குறிப்புகளை ஆவணங்களாக விட்டுச்சென்றுள்ளனர். அவை எல்லாம் தற்போது மொழிபெயர்க்கப்பட்டுவிட்டன. ஆனால் எந்த இடத்திலும் யூதர்களை அடிமைகளாக பிடித்து வைத்திருந்ததகவோ, அல்லது இஸ்ரேலிய அடிமைகள் கலகம் செய்ததாகவோ குறிப்பு காணப்படவில்லை.

டேவிட் மன்னன் தலைமையில் சிறு இராசதானி இருந்திருக்க வாய்ப்புண்டு என்றபோதிலும், பைபிள் கூறுவதுபோல இஸ்ரேலியர்களின் சாம்ராஜ்ஜியத்தை வைத்திருந்ததற்கான ஆதாரம் எதுவும் இல்லை. ஆனால் அன்றைய பாலஸ்தீன பகுதியில் இஸ்ரேல், யூதேயா என்ற இரு சிறிய அரசுகள் இருந்துள்ளன. இவை பிற்காலத்தில் (ஈராக்கில் அல்லது ஈரானில் இருந்துவந்த) பாபிலோனியர்களால் கைப்பற்றப்பட்டாலும், பைபிள் கூறுவதைப் போல அனைத்து இஸ்ரேலிய யூதர்களையும் பாபிலோனிற்கு கொண்டுசென்றதாக ஆதாரம் இல்லை.

இருப்பினும், அரச அல்லது பிரபுக் குடும்பங்களை சேர்ந்தோரை கைதுசெய்து பாபிலோனில் சிறை வைத்திருக்கிறார்கள். யூதர்கள் அங்கேதான் ஒரு கடவுள் கொள்கையை அறிந்துகொண்டார்கள். (யூதர்கள் மத்தியிலும் பல கடவுள் வழிபாடு முறை நிலவியதை பைபிளே கூறுகின்றது) அன்றைய காலகட்டத்தில் இன்றைய ஈரானிலும், ஈராக்கிலும் சராதுசரின் மதம் பரவியிருந்தது. அவர்கள் 'மாஸ்டா' என்ற ஒரேயொரு கடவுளை வழிபட்டனர். இதிலிருந்து தான் யூத மதமும், 'யாஹ்வே' அல்லது 'எல்' (ஒரு காலத்தில் சிரியர்கள் வழிபட்ட கடவுளின் பெயர்) என்ற ஒரே கடவுளை வரித்துக் கொண்டது. பிற்காலத்தில் யூதர்களிடம் இருந்து கற்றுக்கொண்ட, "ஒரு கடவுள் கோட்பாட்டை" கிறிஸ்தவர்களின் மீட்பர் இயேசு, மற்றும் முஸ்லிம்களின் இறை தூதர் முஹம்மது ஆகியோர் பின்பற்றினர்.

கி.பி.70ஆம் ஆண்டுக்குமுன்னர் யூதர்களின் தாயக பூமி, உரோமர்களின் சாம்ராஜ்ஜியத்தின்கீழ் இருந்தது. ஜெருசலேமில் யூதர்களின் மிகப்பெரிய கோவில் சேதமடைந்த பின்னர், முழு யூத மக்களையும் ரோமர்கள் நாடு கடத்தியதாக இதுவரை நம்பப்பட்டு வருகின்றது. அதனால்தான் யூதர்கள் மத்திய ஆசியா, ஐரோப்பா எங்கும் புகலிடம் தேடியதாக, இன்றுவரை அவர்கள் வேற்று இனத்துடன் கலக்காமல் தனித்துவம் பேணியதாக, யூதர்கள் மட்டுமல்ல பிறரும் நம்புகின்றனர்.

ஆனால் ரோமர்கள் ஒருபோதும் எந்த ஒரு தேச மக்களையும் ஒட்டுமொத்தமாக நாடுகடத்தியதாக வரலாறு இல்லை. உரோமர்கள் பல இனத்தவரை அடிமைகளாக்கியிருக்கிறார்கள். அப்போதுகூட குறிப்பிட்ட பிரதேசத்தை சேர்ந்த சிறுதொகையினர் அடிமைகளாக உரோமாபுரி செல்ல, பெரும்பான்மை மக்கள் அங்கேயே வாழ்ந்து வந்திருக்கின்றனர்.

இதிலிருந்து ஒன்று தெளிவாகின்றது. யூத மக்கள் எங்கேயும் புலம்பெயராமல் அங்கேயே வாழ்ந்து வந்திருக்கின்றனர். ஆகவே இன்றுள்ள பலஸ்தீன அரேபியர்கள்தான் உண்மையான யூதர்கள் என்பது ஆராய்ச்சியாளர்களின் முடிவு. அவர்கள் பிற்காலத்தில் இஸ்லாமியராகவும், கிறிஸ்தவர்களாகவும் மாறியிருக்கலாம். முதலாவது இஸ்ரேலிய பிரதமர் பென் கூரியன் உட்பட பல சியோனிச தலைவர்களுக்கு இந்த உண்மை தெரிந்தே இருந்தது. ஆனால் அதனை வெளியே சொன்னால், அவர்களது சியோனிச அரசியல் அத்திவாரமே அப்போது ஆட்டம் கண்டிருக்கும்.

இன்று, இஸ்ரேலிய ஆராய்ச்சியாளரின் முடிவுகள் வந்த பின்னர்கூட பலர் பகிரங்கமாக இதைப்பற்றி பேச மறுக்கின்றனர். 'யூத எதிர்ப்பாளர்' என்ற முத்திரை குத்தப்பட்டுவிடும் என்ற அச்சமே காரணம். மேற்குலகில் யூத எதிர்ப்பாளர் என்றுசொல்வது, இன வெறியர் என்று சொல்வதற்கு சமமானது.

யூத இனத்தவர்கள் உலகம் முழுவதும் புலம்பெயர்ந்து செல்லவில்லை என்றால், "யார் இந்த யூதர்கள்" என்ற கேள்வி எழுகிறதல்லவா? "யூத இனம்" என்ற தவறான கோணத்தில் இருந்து பார்ப்பதால் இந்த குழப்பம் ஏற்படுகின்றது. யூதர்கள் என்பது ஒரு மதத்தை சேர்ந்தவர்களை குறிக்கும் சொல்லாகும். கிறிஸ்தவ மதம்தான் பிறந்த மண்ணைவிட்டு, வெளியுலகத்தில் பரவியதுபோன்று, யூத மதமும் பரவியது.

முதலில், யூதேயா அரசாட்சியின்கீழ் வாழ்ந்தவர்களை மட்டுமல்ல, அயலில் இருந்த மக்களையும் கட்டாய யூத மத மாற்றத்திற்கு உள்ளாக்கினர். தொடர்ந்து மதப் பிரசாரகர்கள் யூத மதத்தை மத்திய கிழக்கு எங்கும் பரப்பினர். அரேபியா (யேமன்), வட ஆப்பிரிக்கா (மொரோக்கோ), மத்திய ஆசியா (குர்திஸ்தான்) போன்ற இடங்களில் எல்லாம், அண்மைக்காலம் வரையில், யூதர்கள் இலட்சக்கணக்கில் வாழ்ந்துவந்தனர்.

குர்திஸ்தானிலும், வட ஆபிரிக்காவிலும் (அல்ஜீரியா - மொரோக்கோ), குறிப்பிட்ட காலம் யூத இராசதானிகள் உருவாகின. பிற்காலத்தில் வடஆபிரிக்கா மீது படையெடுத்து கைப்பற்றிய அரேபியச் சரித்திரவியாளர்கள் இவற்றை எழுதி வைத்துள்ளனர். முதலில் அரேபிய-இஸ்லாமிய படையெடுப்பை எதிர்த்த யூதர்கள், பிற்காலத்தில் அரேபிய படைகளுடன் இணைந்து, ஸ்பெயினை கைப்பற்றி அங்கேயும் குடியேறி இருந்தனர்.

நீண்டகாலமாக, யூதர்கள் என்பது ஒரு இனம் என்ற கருத்தியலை, மரபணு சோதனைமூலம் நிரூபிப்பதற்கு முயற்சி நடந்தது. சில ஆராய்ச்சி முடிவுகள், யூதர்கள் தனியான மரபணு கொண்டிருப்பதாக தெரிவித்தபோதும், அவற்றின் நம்பகத்தன்மை கேள்விக்குரியது. பொதுவான பெறுபேறுகள், யூதர்களும் அந்தந்த நாடுகளில் வாழும் பிற மக்களும், ஒரேவிதமான மரபணு கொண்டுள்ளதை எடுத்துக்காட்டுகின்றன. இதனை பரிசோதனை சாலையில் விஞ்ஞானிகள் சோதித்துதான் அறிய வேண்டிய அவசியமில்லை.

(17 ஆம் பக்கம் பார்க்க)

நன்றி - தேனீ



# தமிழர்களின் தேசியத்தலைவர் சுடப்பட்டு 25 ஆண்டுகள்

பதவியில் இருந்தாலும் அல்லது இல்லாவிட்டாலும் மிகவும் மதிக்கப்பட்ட இலங்கை தமிழ் தலைவர் அமிர்தலிங்கம் அவர்கள்தான். அவர் உயிரோடு இருந்தவரை அந்த சிம்மாசனத்தை எந்த ஏமாற்றுக்காரராலும் எளிதில் கைப்பற்ற முடியவில்லை. அமிர்தலிங்கத்தின் மரணத்தின் பின்னர்தான் புலிகளின் கூட்டாளிகள் பிரபாகரனை தேசியத் தலைவர் என அழைக்க ஆரம்பித்தார்கள். இலங்கையில் தனக்காக காத்திருக்கும் ஆபத்தைப் பற்றி அமிர்தலிங்கம் நன்றாக அறிந்திருந்தார்.

நீலன் திருச்செல்வம் அவர்களும் கொழும்பு - 7, பௌத்தாலோக மாவத்த (புல்லர்ஸ் வீதி) யில் உள்ள 342 - 2 ம் இலக்க வீட்டை அவர்களுக்காக ஒழுங்கு செய்தார்கள்.

அது ஆடை உற்பத்தியில் ஈடு பட்டுள்ள மன்னாரை சேர்ந்த பிரபலமான ஒரு முஸ்லிம் வியாபாரிக்கு சொந்தமானதாக இருந்தது. முன்னாள் மகாவலி அபிவிருத்தி அமைச்சரான காமினி திசாநாயக்கா இந்திய - இலங்கை ஒப்பந்தத்தையும் மற்றும் அதன் விளைவாக ஏற்பட்ட சமாதான முயற்சிகளையும் தீவிரமாக ஆதரித்தார். அவர் ஜே.ஆர். ஜெயவர்த்தனா அரசாங்கத்தின் கடைசிப் பகுதிகளில் சுயமாக நாட்டைவிட்டு வெளியேறியிருந்த ரி.யு.எல்.எப் தலைவர்கள் நாட்டுக்குத் திரும்பி, பிரதான அரசியல் நீரோட்டத்தில் மீண்டும் சேர்ந்து 1988ல் காமினி திசாநாயக்கா அமைச்சராக இருந்த காலத்தில், ரி.யு.எல்.எப் தலைவர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதில் ஆரம்ப முயற்சிகளை மேற்கொண்டிருந்தார். மகாவலி அமைச்சின் பாதுகாப்பு பிரிவை சேர்ந்த ஆறு அங்கத்தவர்கள் மற்றும் காவல்துறையினர் அந்த வளாகத்தில் நிலை கொண்டிருந்தார்கள்.

ஒரு காலத்தில் நாவலர் மற்றும் தளபதி என்றெல்லாம் இளம் ஆதரவாளர்களால் அழைக்கப்பட்ட அமிர்தலிங்கம் பிற்காலத்தில் புலிகளின் குற்றச்சாட்டுக்கு இலக்கானார். ஐக்கிய இலங்கைக்குள் பேச்சுவார்த்தைமூலமான ஒரு தீர்வை ஏற்படுத்துவதற்காக அவர் மேற்கொண்ட முயற்சிகளை, தமிழீழக் கனவை அவர் விலைபேசும் முயற்சியில் இறங்கியிருப்பதாக புலிகள் கருதினார்கள். ஒரு காலத்தில் முன்னணி தமிழ் தலைவராக இருந்த அமீர் அண்ணன்தான், தமிழீழ விடயத்துக்கு துணை செய்தவரும் மற்றும் இந்த பத்தியின் எழுத்தாளர் உட்பட ஒரு தலைமுறையை சேர்ந்த தமிழ் இளைஞர்களின் மனதில் பிரிவினைவாத கற்பனைக்கு தீ மூட்டியவரும் ஆவார். பின்னைய வருடங்களில் அவர் பின்பற்றிய நடைமுறைக்கேற்ற அணுகுமுறை இளைஞர்கள் குறிப்பாக தங்கள் இலட்சியத்தை அடைவதற்காக ஆயுதம் ஏந்தியவர்களின் மயக்கத்தை கலைத்தது.

## துரோகி அல்லது காட்டிக் கொடுப்பவர்

இதன்படி கடந்த காலங்களில் அரசாங்கத்துடன் இணைந்து இருந்தவர்களை துரோகி அல்லது காட்டிக் கொடுப்பவன் எனப்பெயரிட்ட அமிர்தலிங்கம் அவர்களையே இப்போது புலிகள் மற்றும் அவர்களைப் போன்ற இதர தீவிரவாத இளைஞர்கள் துரோகி என அழைத்தார்கள். போராளிகளின் விரோதம் அமிர்தலிங்கத்தை நோக்கி திரும்பவதற்கான மற்றொரு காரணமும் இருந்தது, அது அவரது உண்மையான அல்லது கற்பனையான தமிழீழ காட்டிக் கொடுப்புடன் எந்தவித தொடர்பும் இல்லாதது. தமிழ் போராளித் தலைவர்களால் தங்கள் ஆயுதங்கள்மூலம் கட்டளைகளை பிறப்பிக்க முடியுமாக இருந்தது, ஆனால் அவர்களில் யாருக்கும் அமிர்தலிங்கத்தைப் போன்ற பரவலான தலைமைத்துவ சான்றுக்கான அங்கீகாரம் இருக்கவில்லை.

பதவியில் இருந்தாலும் அல்லது இல்லாவிட்டாலும் மிகவும் மதிக்கப்பட்ட இலங்கை தமிழ் தலைவர் அமிர்தலிங்கம் அவர்கள்தான். அவர் உயிரோடு இருந்தவரை அந்த சிம்மாசனத்தை எந்த ஏமாற்றுக்காரராலும் எளிதில் கைப்பற்ற முடியவில்லை. அமிர்தலிங்கத்தின் மரணத்தின் பின்னர்தான் புலிகளின் கூட்டாளிகள் பிரபாகரனை தேசியத் தலைவரென அழைக்க ஆரம்பித்தார்கள். இலங்கையில் தனக்காக காத்திருக்கும் ஆபத்தைப் பற்றி அமிர்தலிங்கம் நன்றாக அறிந்திருந்தார்.

இந்தியாவிலிருந்து இலங்கையை நோக்கிய தனது நிரந்தரமான புறப்படுகைக்கு முன்னர் அமிர்தலிங்கம் சென்னையில் வைத்து முன்னாள் கிளிநொச்சி பாராளுமன்ற உறுப்பினரான வீரசிங்கம் ஆனந்தசங்கரியை சந்தித்திருந்தார். உரையாடலுக்கு மத்தியில், "இலங்கையில் எங்களுக்காக என்ன தேக்கி வைக்கப்பட்டுள்ளது என்று எங்களில் சிலர் அறிவார்கள் சங்கரி! ஆனால் நாங்கள் எங்கள் மக்களுக்கு உதவி செய்ய வேண்டுமானால் அதை எதிர்கொண்டே ஆகவேண்டும்" என்று அமிர்தலிங்கம் குறிப்பிட்டாராம். இந்தப் பின்னணியில்தான் 25 வருடங்களுக்கு முன்பு அப்பாப்பிள்ளை அமிர்தலிங்கத்தின் கொலை நடந்தேறியது. அது நடைபெற்ற சமயம் நான் கனடாவிலிருந்தேன். எனினும் பல்வேறு சந்தர்ப்பங்களில் ரி.யு.எல்.எப் உடன் தொடர்புள்ள, எம்.சிவசிதம்பரம், கலாநிதி. நீலன் திருச்செல்வம், திருமதி சரோஜினி யோகேஸ்வரன், போன்ற பல்வேறு நபர்களுடனும் தொடர்புகொண்டிருந்தேன், மற்றும் திருமதி மங்கையர்க்கரசி அமிர்தலிங்கம், கலாநிதி. பகீரதன் அமிர்தலிங்கம், திரு.வி.ஆனந்தசங்கரி, மற்றும் திரு.பி.சூசைதாசன், மற்றும் திரு சோமசுந்தரம் (மாவை) சேனாதிராஜா ஆகியோருடன் இந்த சம்பவம் பற்றி விசாரித்துமிருந்தேன். அந்த சம்பாசனைகளின் அடிப்படையிலும் மற்றும் இது தொடர்பான ஊடக அறிக்கைகள் மூலமாகவும் பெற்ற தகவல்களில் இருந்து இப்போது அந்த படுகொலையின் உடற்கூற்றியலை எழுதுகிறேன்.

புதுடில்லியின் கோபத்துக்கு அஞ்சி, அமிர்தலிங்கத்துக்கோ அல்லது இதர முக்கிய ரி.யு.எல்.எப். தலைவர்களுக்கோ இந்திய மண்ணில் வைத்து தீங்கிழைக்க புலிகளின் முயற்சி செய்யவில்லை. (அதேவேளை தமிழ்நாட்டு மண்ணில் வைத்து ராஜீவ் காந்தியை கொல்வதற்கு இந்த எச்சரிக்கையை புலிகளின் அலட்சியப்படுத்தியதால், அப்படிச் செய்ததற்கான விலையை தொடர்ந்து கொடுக்கவேண்டியிருந்தது).

அமிர்தலிங்கம் இலங்கைக்கு திரும்பியதும் அவர் அதன் இலக்காக மாறினார். தமிழ் தலைவர்களை அவர்களது பாதுகாவலர்களிலிருந்து அப்புறப்படுத்தும் முயற்சியாக புலிகள், ரி.யு.எல்.எப். உடன் நேசத்தொடர்பு முயற்சிகளை மேற்கொள்ள ஆரம்பித்தது. ரி.யு.எல்.எப் தலைவர்களிலேயே எளிதில் ஏமாறும் இயல்புள்ளவரான யோகேஸ்வரனை, புலிகள் தெரிவுசெய்து அவரை அணுகியது. அன்பான யோகேஸ்வரன் எப்போதும் பையன்களில் சிலரினால் தனக்கு ஏற்பட்ட மோசமான அனுபவங்களைக்கூட பொருட்படுத்தாது அவர்களிடத்து எப்போதும் ஒரு பரிவினைக் கொண்டிருந்தார். தமிழர்களிடத்து ஒரு பரந்த ஒற்றுமை ஏற்படுத்த வேண்டுமென்கிற ஆர்வம் உள்ளவராகவும் அதற்காக ரி.யு.எல்.எப் உடனும் மற்றும் புலிகள் உட்பட அனைத்து தமிழ் குழுக்களிடையேயும் சமரசத்தை ஏற்படுத்த அயராது உழைத்தவர்.

## சிவகுமார் அல்லது அறிவு

யோகேஸ்வரனை முதலில் அணுகியவர் அறிவு என்றழைக்கப்படும் சிவகுமார் என்கிற புலிகள் அங்கத்தவர் ஆவார். அவர் கொழும்பில் மற்றொரு பெயரில் தங்கியிருந்து புலிகளுக்காக உளவுபார்த்து வந்தார். வன்னியில் உள்ள புலிகளின் தலைமை அவரைச் சந்தித்து தமிழர்களின் ஒற்றுமைக்கான கருத்து மற்றும் வழிகள் பற்றி கலந்துரையாட விரும்புவதாக தன்னிடம் தெரிவிக்கப்பட்டதாக அறிவு யோகேஸ்வரனிடம் சொன்னார். கொள்கையளவில் எப்போதும் ஒற்றுமையை ஏற்படுத்த ஆவலாக உள்ளவர் யோகேஸ்வரன். அதன்பின்னர் வவுனியாவில் உள்ள புலிகளில் இருந்து விக்னா என அழைக்கப்படும் ஒருவர் தொலைபேசி மூலம் யோகேஸ்வரனைத் தொடர்பு கொண்டார். இயலுமானால் அமிர்தலிங்கம் மற்றும் சிவசிதம்பரம் ஆகியோரையும் அவருடன் வவுனியாவுக்கு அழைத்து வருமாறு யோகேஸ்வரன் கேட்கப்பட்டார். அப்போது சிவசிதம்பரம் ரி.யு.எல்.எப் இன் தலைவராகவும் மற்றும் அமிர்தலிங்கம் அதன் செயலாளர் நாயகம் ஆகவும் இருந்தார்கள்.

மனக்கிளர்ச்சி அடைந்த யோகேஸ்வரன் அந்தப் பணியை ஏற்றெடுக்கும் ஆபத்தை எதிர்கொள்ள முடிவுசெய்தார், அது தமிழர்களின் பாரிய ஒற்றுமைக்கான நலன்களுக்கு வேண்டி செய்யப்படுவதாக அவர் எண்ணினார். புலிகள் அந்த விடயத்தில் உண்மையாகவே வேட்கையுடன் உள்ளதா என்பதை நிச்சயப்படுத்தும் வரை அந்த விடயத்தை மறைத்துவைக்க அவர் தீர்மானித்தார். எனவே பெப்ரவரி 1989ல் யோகேஸ்வரன் தனது சகபாடிகளிடம்தான் மலைநாட்டுக்கு ஒரு குறுகிய விஜயம் மேற்கொள்ளப் போவதாக சொல்லிவிட்டு ஒரு ஜீப் வண்டியில் தனது மனைவி சரோஜினியுடனும் மற்றும் நம்பிக்கையான ஒரு சாரதியுடனும் கொழும்பை விட்டுப் புறப்பட்டார். கண்டிக்கு அருகில் உள்ள ஒரு இடத்தில் வசிக்கும் ஒரு உறவுக்காரரின் வீட்டில் சரோஜினியை இறக்கிவிட்டு, பின்னர் அவர் வடக்கு நோக்கிப் பயணமானார். வவுனியா நகரத்திலிருந்து வடக்கே சில மைல்கள் தொலைவில் உள்ள பாண்டிக்குளம் என்கிற கிராமத்தில் உள்ள ஒரு இரகசிய இடத்தில் யோகேஸ்வரன் புலிகளைச் சந்தித்தார்.

பாண்டிக்குளத்தில் வைத்துத்தான் தன்னை தொலைபேசியில் அங்கு வரும்படி அழைத்த விக்னாவின் அடையாளத்தை யோகேஸ்வரன் கண்டுபிடித்தார். விக்னா வேறுயாருமல்ல வவுனியா புலிகளின் அரசியல் பிரிவு தலைவராக பதில் கடமையாற்றிவரும் பீற்றர் லியோன் அலோசியஸ் என்பவர்தான். அலோசியஸ் யோகேஸ்வரனை மனப்பூர்வமாக வரவேற்றாலும் அமிர்தலிங்கம் மற்றும் சிவசிதம்பரம் ஆகியோர் வராததையிட்டு தனது ஏமாற்றத்தைத் தெரிவித்தார். அமிர்தலிங்கம் மற்றும் சிவசிதம்பரம் ஆகியோர் வந்ததும் அவர்களைச் சந்திப்பதற்காக புலிகளின் துணைத் தலைவர் கோபாலசாமி மகேந்திரராஜா தயாராக இருப்பதாக அலோசியஸ் யோகேஸ்வரனிடம் தெரிவித்தார். அவர்கள் வரமுடியாததுக்கு மன்னிப்பு கேட்டுக்கொண்ட யோகேஸ்வரன் முதலில் தான் தனியாக வந்தது ரி.யு.எல்.எப் தலைவர்களுடனான சந்திப்பு தொடர்பான ஏற்பாடுகளை இறுதி செய்வதற்காக என்று தெரிவித்தார். அமிர்தலிங்கம் மற்றும் சிவசிதம்பரம் ஆகியோருடன் தான் விரைவிலேயே பாண்டிக்குளம் திரும்பி வருவதாக அவர் சொன்னார்.

புலிகளால் யோகேஸ்வரன் நன்கு உபசரிக்கப்பட்டார், மற்றும் அவருக்கு சுவையான கறியுடன்கூடிய உணவு பரிமாறப்பட்டது. புலிகளினால் வழங்கப்பட்ட வரவேற்பையிட்டு மகிழ்ச்சியும் திருப்தியும் அடைந்த யோகேஸ்வரன், மனைவி சரோஜினியையும் அழைத்துக்கொண்டு கண்டி வழியாக கொழும்பு திரும்பினார். கொழும்புக்கு திரும்பி வந்ததும் ஆரம்பத்தில் தான் மலைநாட்டுக்கு மட்டுமே போய்வந்ததாக யோகேஸ்வரன் காட்டிக்கொண்டார். இருந்தும் அவர் சொன்ன சில பொய்கள் அவரது கோரிக்கையில் சந்தேகத்தை ஏற்படுத்தியது. புத்திசாலியான ஆனந்தசங்கரிதான் யோகேஸ்வரனது வண்டிச் சக்கரங்களில் ஒட்டியிருந்த சிவப்புநிற மண் அடையாளங்கள் மலைநாட்டை அடையாளப்படுத்துவதல்ல, மாறாக வடக்கை அடையாளம் காட்டுவது என்று கண்டுபிடித்தார்.

மேலும் யோகேஸ்வரன் மலைநாட்டு மரக்கறியோ, பழங்களோ கொண்டுவராது வடக்கை சேர்ந்த பலாப்பழ வகையை கொண்டு வந்திருந்தார்.

(தொடரும்...)







அறிவுடையார் முன் அறிவில்லாதவர் போல் தாழ்ந்து நின்று, மேலும் கற்றுக்கொள்பவர்களின் ஆர்வத்தைக் கற்றுக்கொள்ளாதவர்கள் கடை நிலை மாந்தராக கருதப்படுவார்கள்.

பாப்பா முரசு சிறுகதை

# எப்படி மாற்றுவது?



ஒரு ஜென் துறவியிடம் சில சீடர்கள் இருந்தனர். அவர்கள் துறவியிடம், "நம் மனதில் உதிக்கும் தீய எண்ணங்களை எப்படி மாற்றுவது?" என்று கேட்டனர்.

குரு, ஒரு மண்பானையைக் கொண்டு வருமாறு கூறினார். கொண்டு வரப்பட்ட மண்பானையைக் காட்டி, "இதில் என்ன இருக்கிறது?" என்று கேட்டார்.

பலரும் "ஒன்றுமே இல்லை" என்று கூற ஒரே ஒரு புத்திசாலி சீடன் மட்டும் "இதில் காற்று நிரம்பியுள்ளது" என்றான்.

குரு, "இந்தப் பானைக்குள் இருக்கும் காற்றை வெளியே எடுக்கவேண்டும். உங்களில் யாராவது செய்யமுடியுமா?" என்று கேட்டார். அதற்கு அந்த புத்திசாலி சீடன்,

"என்னால் முடியும்" என்றுகூறிப் பானை முழுவதையும் தண்ணீரால் நிரப்பினான்.

"இதுவே என் பதில்!" என்றார் ஜென் துறவி.

சீடர்களுக்கு ஒன்றும் புரியவில்லை.

துறவி சீடர்களை நோக்கி, "நம் மனது இந்தப் பானையைப் போன்றது. உள்ளே இருக்கும் காற்றை எப்படி நம் கண்ணால் காணமுடியாதோ, அது போலவே மனதிற்குள் இருக்கும் தீமை எவர் கண்களுக்கும் தெரியாது! நம் மனதிற்குள் இருக்கும் தீமைகளை வெளியே கொண்டுவர, சுலபமான வழி பானையைத் தண்ணீரால் நிரப்பியது போல் மனதிற்குள் நல்ல மற்றும் நேர்மறை எண்ணங்களை நிரப்பவேண்டும்..." என்றார்.

ஆம்! வெளிச்சம் உள்ளே போனால் இருட்டு விலகுவதுபோல் நல்ல எண்ணங்கள் உள்ளே போனால் தீய எண்ணங்கள் வெளியேறிவிடும்.

## ஒகேனகல்



கன்னட மொழியில் 'ஹொகே' என்றால் புகை என்று பொருள். கல் என்றால் பாறை. காவிரி நீர் வேகமாகப் பாயும்போது பாறைகளின் மேலிருந்து புகை வருவதுபோல் தோற்றமளிக்கும். இந்தக் காரணத்தினால்தான் 'ஒகேனகல்'லுக்கு அந்தப் பெயர் வந்தது.


## இப்படியும் ஒரு தாவரம்!

தென்மேற்கு ஆபிரிக்காவில் வளரும் ஒரு வகைத் தாவரத்தின் பெயர் 'வெல் விட்ஸ்-சியா' இதன் உயரம் ஓர் அடி. சுற்றளவு பதினைந்து அடிகள். வாழ்நாளில் இரண்டே இலைகள்தான் முளைக்கின்றன. ஆனால் இதன் வாழ்நாளோ 100 வருடம்.



# காகிதம் பிறந்த கதை!

ஆதிமனிதன் முதன்முதல் எழுத்துகளைப் பதித்து வைத்தது கற்களின் மீதுதான். அப்படி எழுதப்பட்ட கற்களை, தேவை ஏற்பட்டபோது ஓர் இடத்திலிருந்து மற்றோர் இடத்திற்கு எடுத்துச் செல்வதில் ஏற்பட்ட சிரமங்களைத் தொடர்ந்து, விலங்குகளின் எலும்புகளிலும், மூங்கில் தடிகளின் மீதும் மனிதன் எழுதத் தொடங்கினான். பேப்பர்களின் தோற்றத்தைப் போன்ற பொருளில், உலகில் முதன்முதலில் எழுதியவர்கள் எகிப்தியர்தான்.



கி.மு.7-ஆம் நூற்றாண்டில் எகிப்தின் நைல் நதியின் டெல்டா பகுதியில் விளைந்த 2 முதல் 3 மீற்றர் உயரம்வரை வளரக்கூடிய ஒரு தாவரம் 'பொப்பிரஸ்' ஆகும். இந்தப் 'பொப்பிரஸ்' தாவரத்தின் தண்டுப்பகுதியை நுண்ணிய துண்டுகளாக வெட்டி, அதனுடன் நீர் மற்றும் சில தாதுக்களைச் சேர்த்து, பதப்படுத்தி, பின்பு அதனை சூரிய ஒளியில் நன்றாக உலரவைத்து, எழுதுவதற்கென்று பயன்படுத்தினர்.

ஒரு வகைக் குளவி, மரத்தைத் துளையிட்டு, அதன்மூலம் கிடைத்த சிறு மரத்துகள்களைக் கொண்டு, தனது கூட்டை வலிமையாகக் கட்டிக்கொள்வதைக் கண்டனர். அப்போதுதான், மரத்தைக் கூழ்மயமாக அரைத்தால், பேப்பரை நாம் விரும்பும் வடிவில் மற்றும் அளவில் தயாரித்துக் கொள்ளலாம் என்பதை அறிந்து கொண்டனர். 1844-ஆம் ஆண்டில் சார்லஸ் மற்றும் கெல்லர் ஆகியோர் இணைந்து வெள்ளை நிறப் பேப்பரை உருவாக்கும் தொழில்நுட்பத்தினைக் கண்டறிந்தார்கள்.

# வித்தை செய்யும் கரடிகள்



கரடிகளில் எத்தனையோ வகைகள் உள்ளன. அவற்றில் ஒரு வகை இந்தியாவின் இமயமலை, காஷ்மீர், அஸ்ஸாம் பகுதிகளில் வாழ்கின்றன. அவையே கருங்கரடிகள். இந்த வகைக் கரடிகளைப் பிடித்து, பழக்கினால், மனிதர்கள் செய்யும் வித்தைகளையெல்லாம் அவையும் செய்யும். நடனமாடும், தலைகீழாக நிற்கும். அதனால்தான் தெருவில் வித்தை காட்டி பிழைப்போர்களும் சேர்க்கஸ்களிலும் இந்த வகைக் கரடிகளே பயன்படுகின்றன. இவற்றைக் கோமாளிக்கரடிகள் என்றும் கூறுவர்.

# தெரிந்துகொள்ளுங்கள்...

* அமெரிக்காவின் லிங்கன் நகரில் 'டி' என்றபெயரில் ஓர் ஆறு ஓடிக்கொண்டிருக்கிறது. உலகிலேயே ஓர் எழுத்துக் கொண்ட ஆறு இது ஒன்றுதான். மொத்த நீளம் 440 அடி.

* விமானம் பறக்கும்போது விமானியின் கண்களுக்கு வானவில் முழு வட்டமாகவே தெரியும்.

* கால்பந்தாட்டத்தில் ஆடைகளில் எண்கள் பொறிக்கும் வழக்கம் 1938-ஆம் ஆண்டு உலகக் கோப்பை கால்பந்து போட்டி நடைபெற்றபோது ஆரம்பமாயிற்று.

* ஆர்ஜென்டினாவின் 'இகுவாசு' அருவியின் அகலம் 2.7 கிலோமீற்றராகும். உயரம் 82 மீட்டர். ஆனால், இந்த அருவிகளில் நம்ம ஊர் குற்றாலத்தில் குளிப்பதுபோல் குளிக்கமுடியாது.

* ஒவ்வொரு நாட்டுக்கும் தேசிய கீதம் உண்டல்லவா? அந்த வகையில் ஜப்பான் - ஜோர்டன் - சான்மரினோ நாடுகளின் தேசிய கீதங்கள் சிறியவை. நான்கு வரிகளை மட்டுமே கொண்டவை. 23 நாடுகளின் தேசிய கீதங்கள் வெறும் இசைதான். வார்த்தைகள் கிடையாது. மிகப் பழமையான தேசிய கீதம் - ஜப்பானுடையது.


## சிறந்த வர்ணத்திற்குப் பரிசு தரும் எண்ணம்

**போட்டியில் கலந்துகொள்பவர்கள் தாம் கல்வி கற்கும் தரத்தினை கட்டாயம் குறிப்பிட வேண்டும்.**

மேலே உள்ள படத்தினை வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள்.

சிறந்த வர்ணம் ஒன்றிற்கு பரிசு காத்திருக்கிறது. அனுப்பவேண்டிய கடைசித் திகதி: 18.08.2014

**வர்ணம் தீட்டும் போட்டி இல.1056 தினமுரசு வாரமலர் த.பெ.இல:167, யாழ்ப்பாணம்.**



**வர்ணம் தீட்டும் போட்டி இல: 1054**

எம்.பாதுஷா,
ஜின்னாநகர், திருகோணமலை.

பரிசுக்குரியவர்: 1054

பாராட்டுக்குரியவர்கள்

01. த.மாலினி, பரந்தன், கிளிநொச்சி.
02. எம்.பிரிந்துஜன், ரெப்பானா, விசுவமடு.
03. M.சப்ரான் முனவ்வர், மிரிஸ்வத்த, பலாங்கொடை
04. கே.சௌமியா, வட்டு.தென்மேற்கு, வட்டுக்கோட்டை.
05. சு.பாரதி, தும்பளை, பருத்தித்துறை.
07. ய.சாரங்கன், சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்.
08. எல்.யதுர்ஷன், எட்டியாந்தோட்டை.,

# பூனைக்குட்டி

வெள்ளை நிறத்தொரு பூனை
எங்கள் வீட்டில் வளருது கண்டீர்
பிள்ளைகள் பெற்றதப் பூனை
அவை பேருக்கொரு நிறம் ஆகும்

சாம்பல் நிறத்தொரு குட்டி,
கரும் சாந்தின் நிறம் ஒரு குட்டி
பாம்பின் நிறமொரு குட்டி
வெள்ளை பாலின் நிறம் ஒரு குட்டி

எந்த நிறமிருந்தாலும்
அவை யாவும் ஒரே தரம் அன்றோ
இந்த நிறம் சிறிதென்றும்
இஃது ஏற்றம் என்றும் சொல்லலாமோ

வண்ணங்கள் வேற்றுமை பட்டால்
அதில் மானுடர் வேற்றுமை இல்லை
எண்ணங்கள் செய்கைகள் யாவும்
இங்கு யாவர்க்கும் ஒன்றென காணீர்!

\- பாரதி -



**உண்மைத் தொடர்**

**அதிர் இடி 50**

மத்வானி குடும்பத்தின் திரண்ட சொத்துக்கள் பல நூறு கோடி ரூபாய் பெறுமதியானவை. மத்வானி குடும்பம் தம் நாடான இந்தியாவுக்கு சென்றுவிட்டது. மத்வானிக்கு சொந்தமான மூன்று மாளிகைகளில்பிரம்மாண்டமான மாளிகையைத்தான் தனது உல்லாச விடுதியாக்கினான் அமீன்.

இனி...



# அற்புதன் எழுதிய
# இடி அமீன்

விஷயம் அமீனுக்கு வந்தது. ``அவருக்கு ஏன் சிரமம்? நாங்கள் எழுதும் அறிக்கையில் மட்டும் அவர் கையொப்பம் போட்டால் போதும். மறுத்தால் கையொப்பம் போடக் கையை மட்டும் நல்ல நிலையில் விட்டு வைத்துக்கொண்டு ஆளை புரட்டி எடுங்கள் என்றான் அமீன்.

அப்படித்தான் நடந்தது. சித்திரவதை தாங்காமல் காட்டிய இடத்தில் கையொப்பம் போட்டார் பிரதம நீதியரசர்.

காணாமல் போனோருக்கும் அமீன் ஆட்சிக்கும் எவ்வித தொடர்பும் இல்லை. கடந்த கால ஆட்சிகளில்தான் மிக இரகசியமாக பல நூற்றுக் கணக்கானோர் பலியாகி காணாமல் போயுள்ளனர்!`` என்றது அறிக்கை.

பிரதம நீதியரசரும் அவரது குடும்பத்தினரும் கண்காணிப்பில் வைக்கப் பட்டிருந்தனர். பாதுகாப்பு என்ற போர்வையில் புலனாய்வுப் பிரிவைச் சேர்ந்தவர்கள் அவரைச் சுற்றி நிறுத்தப் பட்டனர்.

ஒரு மாதம்வரை அவ்வாறு கண்காணிப்பில் வைத்திருந்து விட்டு ஒரு நாள் அவரை சுட்டுக்கொன்றனர். தலையை மட்டும் வெட்டி யெடுத்துச் சென்று அமீனிடம் கொடுத்தனர்.

``நீதிக்குத் தலை வணங்கு என்று கூறுவார்கள். பிரதம நீதியரசரின் தலையே என் முன்னால் வணங்கிக் கொண்டு இருக்கிறது!`` என்று சிரித்து விட்டு அந்தத் தலையையும் கொண்டு சென்று குளிர்சாதனப் பெட்டிக்குள் வைத்தான்.

``பெறுமதியான தலைகளைச் சேகரிப்பது எனக்கு பொழுது போக்கு`` என்றுகூறி அமீன் நகைத்தபோது. பேய் என்று நகைத்தது போல உணர்ந்தனர் அங்கு நின்ற அதிகாரிகள்.

அமீன் மனித மாமிசம் சாப்பிடும் பழக்கம் உள்ளவன் என்பது படிப்படியாக வெளியே தெரியத் தொடங்கியது.

அமீனும் அதனை மறுக்க வில்லை. தன் மீது ஒரு பயம் இருக்கவேண்டுமானால் இப்படியான விஷயங்கள் தெரியத்தான் வேண்டும் என்று நினைத்து மறுக்காமல் விட்டிருந்தான்.

பிரதம நீதியரசரின் தலையில்லாத உடலுக்கு அமீன் நேரில் சென்று அஞ்சலி செய்தான்.

``எங்கள் ஆட்சிமீது களங்கம் கற்பிக்குமாறு எதிரிகள் மிரட்டியும் பணியாத நீதிமானை. எதிரிகள் பலியாக்கிவிட்டனர்.

இதற்கு காரணமானவர்களை கைதுசெய்யும் வரை நான் தூங்கப் போவதில்லை என்று பொய்யான சோகத்தோடு கூறினான்.

அமீன் நடிப்பை மக்கள் படிப்படியாக இனம் காணத் தொடங்கினார்கள்.

இதற்கிடையே உகண்டாவில் புதிய புதிய பணக்காரர்கள் பலர் தோன்றினர்.

இராணுவ உயரதிகாரிகளும். அமீனுக்கு வேண்டப்பட்டவர்களுமே திடீர் பணக்காரர்களாகினர். உகண்டாவை விட்டு வெளியேறிய ஆசிய நாட்டவர்களின் சொத்துக்களை அபகரித்தே பணக்காரர்கள் ஆகினர்.



இராணுவ புலனாய்வுத்துறை அதிகரிக்கு 20 மாளிகைகள் சொந்தமாகின. அத்தனையும் ஆசிய நாட்டவரின் சொத்துகள்.

இன்னொரு அதிகாரி இரண்டு டசின் ட்ரெயிலர்கள் பல விலை உயர்ந்த கார்கள் மற்றும் டரக்குகளுக்கு சொந்தக்காரனாகிவிட்டான்.

பல வர்த்தக நிலையங்களைத் தமக்குள் பங்கிட்டுக் கொண்டனர் இராணுவ அதிகாரிகள்.

வர்த்தக நிலையங்களில் உள்ள பொருட்களின் உண்மையான விலை அவர்களுக்குத் தெரியாது. அதனால் பொருட்கள் வாங்க வருபவர்களிடமே முன்னர் இதனை என்ன விலைகொடுத்து வாங்கினீர்கள்? என்று கேட்பார்கள்.

அவர்கள் கூறும் விலையை விட ஓரளவு குறைத்து விற்பனை செய்தனர்.

இராணுவ அதிகாரிகள் சீருடையில் நின்று மேற்பார்வை செய்ய அவர்களது படையணியில் உள்ளவர்கள் விற்பனையாளர்களாகச் செயற்பட்டனர்.

இக்காட்சிகள் மக்களிடையே இடி அமீன் ஆட்சி மீதான பாரிய அதிருப்திகளைத் தோற்றுவித்தன.

கம்பாலாவில் உள்ள பிரபலமான பல் வைத்திய சாலையை பொறுப்பெடுத்த படை அதிகாரி அங்குள்ள விலை உயர்ந்த உபகரணங்களையெல்லாம் கழற்றிவிற்றுவிட்டான்.

மருந்துக் கடைகளில் கிடந்த மருந்துப் பொருட்களையும் வாங்க வருபவர்கள் கூறும் விலைக்கே விற்று தீர்த்தனர்.

வர்த்க கட்டடங்களில் உள்ள பொருட்களையெல்லாம் ஒன்றுவிடாமல் அபகரித்துவிட்டு கட்டடங்களைப் பூட்டி சாவிகளை மட்டும் வர்த்தக அமைச்சில் ஒப்படைத்தனர்.

வட இந்தியாவைச் சேர்ந்த மத்வானி குடும்பத்திற்கு உகண்டாவில் பல கோடிக் கணக்கான பவுன் பெறுமதியான சொத்துக்கள் இருந்தன. வர்த்தக சாம்ராஜ்ஜியம் ஒன்றையே அவர்கள் வைத்திருந்தனர்.

கச்சிரா என்ற மத்வானி குடும்பத்துக்கு சொந்தமான பெரும் தோட்டங்கள் இருந்தன. அவற்றில் மத்தியில் நவீன மாளிகைள் இருந்தன. மொத்தம் மூன்று மாளிகைகள் இருந்தன.

மத்வானி குடும்பச் சொத்தில் எவரும் கை வைக்கக்கூடாது என்று கண்டிப்பான உத்தர விட்ட அமீன் அத்தனை சொத்துக்களையும் தனது பொறுப்பில் எடுத்துக் கொண்டான்.

மத்வானியின் மாளிக்கைக்கு நேரில் விஜயம் செய்த அமீன் திறந்த வாய்மூடாமல் பிரமித்து நின்றுவிட்டான்.

மாளிகையின் சுவரில் ஓவியமாகத் தொங்கிய பெண்ணின் அழகு அவனை ஆட்டிப் படைத்தது. யார் இவள் என்றான்.

மத்வானி குடும்பத்தின் திரண்ட சொத்துக்கள் பல நூறு கோடி ரூபாய் பெறுமதி யானவை. மத்வானி குடும்பம் தம் நாடான இந்தியாவுக்கு சென்றுவிட்டது. மத்வானிக்கு சொந்தமான மூன்று மாளிகைகளில் பிரம்மாண்டமான மாளிகையைத்தான் தனது உல்லாச விடுதியாக்கினான் அமீன்.

**(தொடரும்)**

---

# முரசு குறுக்கெழுத்துப் போட்டி

**வாசக நெஞ்சங்களே!**

**உங்கள் சிந்தனைக்குத் தீனிபோடும் வினாக்கள் அடங்கிய இப்போட்டியிலே ஆர்வமுடன் பங்குகொண்டு பரிசுகளையும், பாராட்டுக்களையும் பெற வாழ்த்துகின்றோம்.**

## குறுக்கெழுத்துப் போட்டி - 585

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
| 7 | 8 | 9 | | | |
| 13 | | | | | 18 |
| 19 | 20 | | | 23 | 24 |
| 25 | 26 | 27 | 28 | | 30 |
| 31 | 32 | | 34 | 35 | 36 |

## குறுக்கெழுத்துப் போட்டி 583 - விடைகள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 கு | 2 ரு | 3 பூ | 4 ர் | 5 ணி | 6 மா |
| 7 ரு | | 9 ள | | 11 கோ | 12 ரி |
| 13 ப | 14 ண் | 15 பா | 16 டு | | |
| 19 த் | 20 கு | 21 ம் | 22 த | | 24 ஆ |
| 25 தி | 26 கை | | | 29 தி | 30 ட |
| 31 னி | 32 ம | 33 ர் | 34 ஜே | | 36 லை |

**இடமிருந்து வலம்**

01. வானம்பாடி.
07. குறும்பு செய்பவன். (குழம்பியுள்ளது)
19. தகுதியானவன் அல்லது பெண் சாரதி. (திரும்பியுள்ளது)
23. ஒன்பது அங்குல அளவு.
25. சங்ககால இலக்கிய பாடல்களுள் மிக அதிக பாடல்களை இயற்றியவர். (திரும்பியுள்ளது)
31. பெண்குயில்.
34. ஒரு தமிழ் சினிமா படம்

**மேலிருந்து கீழ்**

01. புத்திசாலிகளின் சங்கமான மென்சா கழகத்தில் சேர்க்கப்பட்ட இங்கிலாந்து. இரண்டு வயதுச் சிறுவன். இவர்.
02. ஆடையில் ஏறும் பழுப்பு.
03. வாழை மரம்.
06. சிரஞ்சீவி என்ற சொல்லின் சுருக்கம்.
18. நாடு. இனம். நிறம். மொழி என்று எத்தனையோ வேற்றுமைகள் இருந்தாலும் அத்தனையையும் மீறிய. உலகத்தவர்களால் நேசிக்கப்படும் ஒருவர்.
20. மகள்.
28. கயிறு இழுக்கும் கருவி.

**போட்டி விதிகள்:**

இதற்குரிய விடையைக் கூப்பனில் நிரப்பி அஞ்சலட்டையில் ஒட்டி **18.08.2014** க்கு முன்னர் எமக்குக் கிடைக்கும்படி அனுப்புங்கள்.

அனுப்பவேண்டிய முகவரி: குறுக்கெழுத்துப் போட்டி இல. - 583
தினமுரசு வாரமலர்,
- த.பெ.இல. :-167, யாழ்ப்பாணம்

தங்கள் சரியான முகவரியையும் காசுக் கட்டளையை மாற்றக்கூடிய அண்மித்த தபாலகத்தின் பெயரையும் குறிப்பிடுக.
சரியான விடையை அனுப்புவோரில் முதல் அதிர்ஷ்டசாலிக்கு 1000 ரூபா பரிசுண்டு, அடுத்த பத்து அதிர்ஷ்டசாலிகளின் பெயர்கள் தினமுரசில் பிரசுரமாகும்.

**குறுக்கெழுத்துப் போட்டி இல. 583 இற்கான சரியான விடைகளை அனுப்பி 1000 ரூபா பரிசுபெறும் அதிர்ஷ்டசாலி.**

எம். சுபத்திரா, திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.

**பாராட்டுப் பெறும் 10 அதிர்ஷ்டசாலிகள்.**

01. இ.காவியா, கோவில் வீதி, வட்டுக்கோட்டை.
02. சு.தமிழரசி, கரவெட்டி, நெல்லியடி.
03. ஆர்.கதிர்வேலன், நெல்சன் பிளேஸ், வெள்ளவத்தை.
04. எவ்.எம்.எம்.சியாம், முஸ்லிம் தெரு, யாழ்ப்பாணம்.
05. மு.கபிலன், பருத்தித்துறை வீதி, கொடிகாமம்.
06. ம.சாவித்திரி, ரெட்பானா, விசுவமடு.
07. அ.சத்தியன், பிரதான வீதி, திருகோணமலை.
08. ச.தவபாலன், அராலி மத்தி, அராலி.
09. து.துஷியந்தினி, புளியங்குளம், வவுனியா.



திரை விமர்சனம்

# சதுரங்க வேட்டை

**சிறு** வயதிலேயே தாயின் வைத்தியச் செலவுக்கு பணம் இல்லாத நிலையில் விரக்தியான நடராஜ், பணம்தான் வாழ்க்கையில் எல்லாம், அந்த பணத்தை சம்பாதிக்க என்னவேண்டுமானாலும் செய்யலாம் என களத்தில் இறங்கும் கதைதான் 'சதுரங்க வேட்டை'.

சமீபத்தில் தமிழகத்தில் பெரும் பரபரப்பை ஏற்படுத்திய கோழி வியாபாரம், மண்ணுளி பாம்பு விற்பனை, இன்று வரை பல ஆயிரக்கணக்கான இளைஞர்கள் ஏமாந்துகொண்டிருக்கும் எம்.எல்.ம் பிசினஸ் என தொழில்களை தனது நண்பர்களுடன் செய்து பணம் சம்பாதித்து வரும் நட்ராஜிடம் கதாநாயகி இஷாரா வேலை கேட்கிறார்.

இஷாராவின் வேலையில்லா பரிதாபமான நிலையை உபயோகித்து அதில் பணம் பண்ண முடிவுசெய்து அவரையும் சூழ்ச்சியாக இந்த தொழிலில் அவருக்கே தெரியாமல் ஈடுபடுத்த வைக்கிறார் நட்ராஜ். நட்ராஜின் சூழ்ச்சியை அறியாமல் வெகுளித்தனமாக இஷாரா வேலை செய்துகொண்டிருக்கும்போது ஒருநாள் நட்ராஜ் மோசக்காரன் எனத்தெரியவருகிறது. ஆனாலும் கோபப்படாமல் இதெல்லாம் தவறு என நட்ராஜை திருத்த முயற்சி செய்கிறார் இஷாரா. இந்த முயற்சி எப்படியான சாவால்களை சந்திக்கிறது. இஷாரா வெற்றியடைகிறாரா என்பது மீதிக்கதை!

நட்டு என்ற நடராஜின் யதார்த்தமான தோற்றத்துடன் இயல்பான நடிப்பால், அசத்துகிறார். இவர் போடும் திட்டமும், அதை செயற்படுத்தும் விதமும் மிக அருமை. மிக தெளிவான வசன உச்சரிப்பு, ஆச்சரியப்பட வைக்கிறது. இவருக்கு கொலிவூட்டில் நல்ல எதிர்காலம் கண்டிப்பாக இருக்கின்றது.

நாயகி இஷாரா கொடுத்த வேடத்தை மிகச்சரியாக செய்துள்ளார். மேலும் படத்தில் பல பெயர் தெரியாத புதுமுகங்கள். ஆனாலும் அனைவரிடமும் நன்றாக வேலைவாங்கியுள்ளார் இயக்குனர். விறுவிறுப்பான திரைக்கதை, அடுத்து என்ன நடக்கும் என்று பரபரப்பாக எதிர்பார்க்க வைக்கும் காட்சி அமைப்புகள், எனப் பல இடங்களில் கைதட்டல் வாங்குகிறார் இயக்குனர் வினோத். படத்தில் இடம்பெறும் அருமையான வசனங்கள் படத்திற்கு பெரிய பிளஸ் பொயிண்ட். உண்மையிலேயே சரியான வேட்டைதான் இந்த 'சதுரங்க வேட்டை'.

# குஷ்புவின்

அரசியலில் இருந்து விலகிவிட்ட கு
சின்னத்திரையில் மட்டும் ஒரு சில
நடித்துவருகிறார். அதனால் முழுநேர
முடிவெடுத்துள்ளார்.

ஏற்கனவே கிரி, ரெண்டு, நகரம் மறுபக்
ஆகிய படங்களை தயாரித்திருப்பவ
வைத்து ஒரு படம் தயாரிக்க கல்லெறி
அவருக்கு சரியான பதில் கிடைக்கவில்
அந்த முயற்சியை தற்காலிகமாக
ஆனால், இப்போது ஒரே நேரத்தில்
தயாரிக்க திட்டமிட்டுள்ளாராம் குஷ்பு.

# கௌதமி விட்டு

த்ரிஷ்யம் தமிழ் ரீமேக் படத்தின் பூ
சமீபத்தில் சென்னையில் நடந்தது. இந்
படத்தின் படப்பிடிப்பு அடுத்த மாதம் ஆ
இருக்கும்நிலையில் இந்த படத்தின் முக்
கேரக்டரான பொலிஸ் அதிகாரி வேடத்
நடிக்க நடிகை ஸ்ரீதேவியை படத்தின்
இயக்குனர் ஜீத்து ஜோசப் அணுகினார்.
நடிப்பதற்கு சம்மதம் தெரிவித்த ஸ்ரீதே
பின்னர் மறுத்துவிட்டதாக கூறப்படுகிறது.

நீண்ட இடைவெளிக்கு பின்னர்
கமல்ஹாசன் படத்தில் நடிப்பது தனக்கு
நல்ல வாய்ப்பாக இருந்தாலும், அந்த ப
இடம்பெற்றுள்ள பொலிஸ் அதிகாரி வே
தனக்கு பொருந்துமா? என்று சந்தேகமா
இருந்ததால் மறுத்துவிட்டதாகவும், தான்
அந்த படத்தில் மீனா கேரக்டரில் கமல
ஜோடியாக நடிக்க ஆசைப்பட்டதாகவும்,
ஆனால் அந்த கேரக்டரை கௌதமி
விட்டுக்கொடுக்க தயாராக இல்லாததால்
அந்த படத்தில் இருந்து விலகுவதாகவு
தெரிவித்தார். கௌதமி மனம் மாறினால்
கேரக்டரில் நடிப்பேன் என்று கூறியுள்ளா

# அஜித் படத்தில் விஜய்..!

ராஜாவின் பார்வையிலே படத்திற்கு பின்னர் அஜீத்-விஜய் இணைந்து இதுவரை எந்த படத்திலும் நடிக்கவில்லை. இனிமேலும் இவர்கள் இருவரும் சேர்ந்து நடிப்பார்கள் என்று உறுதியாக சொல்லமுடியாத நிலையில், அஜீத், விஜய் பெயருடையவரும், தனது நீண்டநாள் நண்பருமான தலைவாசல் விஜய்யுடன் மீண்டும் சேர்ந்து நடிக்கின்றார்.

அஜீத்துக்கு பெரும் திருப்புமுனையை ஏற்படுத்திய படம் அகத்தியன் இயக்கத்தில் வெளியான 'காதல் கோட்டை'. இந்த படத்தில் ஆட்டோ டிரைவராக வந்து அஜீத்துக்கு உதவும் அற்புதமான கேரக்டரில் விஜய் நடித்திருப்பார். அதுமுதல் விஜய்யும், அஜீத்தும் உண்மையிலேயே நண்பர்களாக மாறினர்.



இந்நிலையில் அஜீத் தற்போது நடித்துக் கொண்டிருக்கும் கௌதம்மேனன் படத்தில் ஒரு முக்கிய கேரக்டருக்கு தலைவாசல் விஜய்யை கௌதம்மேனனுக்கு பரிந்துரை செய்தாராம். மேலும் விஜய்க்கு இந்த படத்தில் ஒரு குத்தாட்டமும் இருக்கின்றதாம். காதல் கோட்டையில் 'க[illegible]லைப்பட[illegible]த சகோதர' என்ற பாடலில் இருவரும் சேர்ந்து ஆ பாடி நடித்ததுபோல மீண்டும் ஒரு பாட இணைகின்றனர். இந்த தகவலை இயக்குனர் கௌதம்மேனன் உறுதிப்படுத்தியுள்ளார்.

இயக்கு
தயாரிக்கின்றார்.
இந்நிலையில் இந்
பேச்சுவார்த்தை நடத்
தனிப்பட்ட முறையில்
மறுத்துவிட்டதாக கூ
படத்திலும் தெலுங்கி
நடித்துக்கொண்டிருப்
என்று சமந்தா தரப்




# பெயர் மாறும் நடிகைகள்...!

நடிகைகள் தற்போது தங்களது பெயரை மாற்றிக்கொள்வது ஃபேஷனாகி வருகிறது. லட்சுமி ராய் தனது பெயரை ராய் லட்சுமி என்றும், நீது சந்திரா தனது பெயரை ஒருசில எழுத்துக்களை மற்றும் மாற்றியுள்ளனர். இந்த வரிசையில் தற்போது நடிகை ஜனனி அய்யர் தனது பெயரை ஜனனி என்று மாற்றிக்கொண்டார்.

சமீபத்தில் நடந்த ஒரு பாடல் விழாவில் பேசிய ஒரு பிரபல இயக்குனர் நடிகைகள் தங்கள் பெயருக்கு பின்னால் ஜாதி அடைமொழியை போடுவதை தடை செய்யவேண்டும் என ஆவேசமாக பேசியதை அடுத்து ஜனனி அய்யர் தனது மாற்றியுள்ளதாக கூறப்படுகிறது. ஆனால் தெகிடி படத்தில் தான் நடித்தபோது, அந்த படத்தின் டைட்டிலில் ஜனனி அய்யர் என்று போடுவதற்கு பதிலாக ஜனனி என்றே தவறுதலாக போட்டுவிட்டதாகவும், ஆனால் அந்த பெயர் ரசிகர்களின் மனதில் நிலைத்துவிட்டதால் இனிமேல் தன்னுடைய பெயர் ஜனனி என்றே மாற்றிக்கொள்ள முடிவு செய்ததாகவும் அவர் கூறியுள்ளார். இவர்களை தொடர்ந்து கொலிவூட்டின் ஒருசில ராசியில்லாத நடிகைகள் என முத்திரை குத்தப்பட்ட இரண்டு நடிகைகளும் தங்கள் பெயரை மாற்ற முடிவு செய்துள்ளனர். சென்னை கோயம்பேடு அருகில் உள்ள ஒரு பிரபல எண்கணித நிபுணருடன் அந்த நடிகைகள் தங்களது புதுப்பெயரை ஆலோசித்து வருவதாகக் கூறப்படுகிறது.

"வே
பார்
மற்

திரை

ஆகி
வாழ்
அடு
தன
பெரு
சொ
வெ

# ...குஷ்புவின் மெகா புரொஜெக்ட்!

...அரசியலில் இருந்து விலகிவிட்ட குஷ்பு இப்போது ...னத்திரையில் மட்டும் ஒரு சில நிகழ்ச்சிகளில் ...த்துவருகிறார். அதனால் முழுநேர தயாரிப்பாளராக ...வெடுத்துள்ளார்.

...ஏற்கனவே கிரி, ரெண்டு, நகரம் மறுபக்கம், கலகலப்பு ...ிய படங்களை தயாரித்திருப்பவர், அஜீத்தை ...த்து ஒரு படம் தயாரிக்க கல்லெறிந்தார். ஆனால், ...ருக்கு சரியான பதில் கிடைக்கவில்லை. அதனால் ...த முயற்சியை தற்காலிகமாக கைவிட்டுவிட்டார். ...னால், இப்போது ஒரே நேரத்தில் 5 படங்களை ...ரிக்க திட்டமிட்டுள்ளாராம் குஷ்பு. அப்படி தான் தயாரிக்கும் படத்தை தனது கணவர் சுந்தர்.சி மட்டுமின்றி மற்ற இயக்குனர்களுக்கும் இயக்க வாய்ப்பு கொடுக்கப்போகிறாராம்.

அதோடு ஏற்கனவே ஒரு படத்தில் நடிக்க சிவகார்த்திகேயன்-ஹன்சிகாவை புக் பண்ணி விட்டவர், மேலும் சில நம்பிக்கைக்குரிய நடிகர்-நடிகைகளுக்கு அழைப்புவிட்டு வருகிறாராம். ஆனால் அப்படி குஷ்பு தயாரிக்கும் அனைத்து படங்களுமே சிறு முதலீட்டு படங்கள்தானாம். குறைந்த பட்ஜெட்டில் தரமான படங்களை கொடுக்கவேண்டும் என்பதே அவரது நோக்கமாம்.




# ...கெளதமி விட்டுக்கொடுத்தால் ஸ்ரீதேவி தயார்

...த்ரிஷ்யம் தமிழ் ரீமேக் படத்தின் பூஜை ...த்தில் சென்னையில் நடந்தது. இந்த ...த்தின் படப்பிடிப்பு அடுத்த மாதம் ஆரம்பிக்க ...க்கும்நிலையில் இந்த படத்தின் முக்கிய ...க்டரான பொலிஸ் அதிகாரி வேடத்தில் ...க்க நடிகை ஸ்ரீதேவியை படத்தின் ...க்குனர் ஜீத்து ஜோசப் அணுகினார். முதலில் ...பதற்கு சம்மதம் தெரிவித்த ஸ்ரீதேவி, ...னர் மறுத்துவிட்டதாக கூறப்படுகிறது.

...நீண்ட இடைவெளிக்கு பின்னர் ...ஹாசன் படத்தில் நடிப்பது தனக்கு ஒரு ...ல வாய்ப்பாக இருந்தாலும், அந்த படத்தில் ...பெற்றுள்ள பொலிஸ் அதிகாரி வேடம் ...க்கு பொருந்துமா? என்று சந்தேகமாக ...ந்ததால் மறுத்துவிட்டதாகவும், தான் ...த படத்தில் மீனா கேரக்டரில் கமலுக்கு ...டியாக நடிக்க ஆசைப்பட்டதாகவும், ...னால் அந்த கேரக்டரை கௌதமி ...டுக்கொடுக்க தயாராக இல்லாததால், தான் ...த படத்தில் இருந்து விலகுவதாகவும் ...வித்தார். கௌதமி மனம் மாறினால் மீனா ...க்டரில் நடிப்பேன் என்று கூறியுள்ளார்.

## 'அஞ்சான்' அஞ்சலாமா?

தமிழ்த் திரைப்படங்களில் சில முக்கிய நடிகர்கள் நடிக்கும் படங்கள் தெலுங்கில் தொடர்ச்சியாக 'டப்பிங்' செய்யப்பட்டு வருகின்றன. ரஜினிகாந்த், சூர்யா, கார்த்தி, ஆகியோர் நடிக்கும் படங்களுக்குத் தெலுங்குத் திரையுலகிலும் வரவேற்பு இருந்துவருவதால் அவர்கள் நடிக்கும் படங்களை அங்குள்ள தயாரிப்பாளர்கள் வாங்கி டப்பிங் செய்து வெளியிடுகிறார்கள்.

இதனிடையே, சூர்யா, சமந்தா நடித்துள்ள 'அஞ்சான்' படத்தை இம்மாதம் 15ஆம் திகதி தமிழ், தெலுங்கு இருமொழிகளிலும் வெளியிட முடிவு செய்திருந்தார்கள். தெலுங்கில் 'சிக்கந்தர்' எனப்பெயர் வைத்திருக்கிறார்கள். ஆனால், அதே தினத்தில் தெலுங்குத் திரையுலகின் முன்னணி நடிகரான ஜூனியர் என்.டி.ஆர், சமந்தா நடித்துள்ள 'ரபாஷா' படமும் வெளியாக உள்ளது. எனவே, 'ரபாஷா' படத்துடன் ஒரு 'டப்பிங்' படம் போட்டி போடமுடியாது என்பதால் 'அஞ்சான்' படத்தின் தெலுங்கு டப்பிங்கான 'சிக்கந்தர்' படத்தை ஒரு சில நாட்கள் கழித்தோ அல்லது ஒரு வாரம் கழித்தோ வெளியிட முடிவு செய்துள்ளார்களாம்.



# ...விஜய்..!



...து இதுவரை எந்த ...ப்பார்கள் என்று ...ும், தனது நீண்டநாள் ...

...அகத்தியன் இயக்கத்தில் வெளி... ...டிரைவராக வந்து ...டரில் விஜய் நடித்திருப்பார். ...ும் உண்மையிலேயே நண்பர்களாக ...

...லையில் அஜீத் தற்போது நடித்துக் ...ும் கௌதம்மேனன் படத்தில் ஒரு ...ரக்டருக்கு தலைவாசல் விஜய்யை ...மேனனுக்கு பரிந்துரை செய்தாராம். ...் விஜய்க்கு இந்த படத்தில் ஒரு ...ட்டமும் இருக்கின்றதாம். காதல் ...டையில் '...லைப்ப...த சகோதரா' ...ன்ற பாடலில் இருவரும் சேர்ந்து ஆடிப் ...டி நடித்ததுபோல மீண்டும் ஒரு பாடலில் ...இணைகின்றனர். இந்த தகவலை ...இயக்குனர் கௌதம்மேனன் ...உறுதிப்படுத்தியுள்ளார்.

# அதிர்ந்தார் த்ரிஷா!

த்ரிஷா நடிப்பில் கடைசியாக வெளியான படம் என்றென்றும் புன்னகை. ஜீவாவுடன் அவர் நடித்த அந்த படத்தையடுத்து ஜெயம்ரவியுடன் பூலோகம் என்ற படத்தில் நடித்துள்ளார். அப்படத்தில் ரவுடித்தனம் பண்ணிக்கொண்டு திரியும் ஜெயம்ரவியை ஒரு பொக்சராக உருவாக்கும் பவர்புல்லான வேடத்தில் நடித்திருக்கிறார் த்ரிஷா. அதையடுத்து, இப்போது அஜீத்தின் 55ஆவது படத்திலும் கதைக்கு முக்கியத்துவம் வாய்ந்த வேடத்தில் நடிக்கிறார். கதைப்படி இளவட்ட அஜீத்துக்கு ஜோடியாக நடித்துள்ள த்ரிஷா ஒரு குழந்தைக்கு அம்மாவாகவும் நடித்து வருகிறார்.

இந்த நிலையில், குயின் இந்தி படத்தின் தமிழ் ரீமேக்கில் நடிக்க நடிகர் தியாகராஜன் அழைத்து பேசினாராம். அப்போது, ஜெயம்ரவி படத்தை அடுத்து, இப்போது தல அஜீத்துடன் நடிக்கிறேன். அதனால் என் மார்க்கெட் இன்னும் கெட்டியாகவே உள்ளது. அதனால், ஒன்னேகால் கோடி சம்பளம் தந்தால் நடிக்கிறேன் என்று முதல் சுற்று பேச்சுவார்த்தையிலேயே தனது நிலையை ஓப்பன் பண்ணிவிட்டாராம் த்ரிஷா. அதைக்கேட்டு மிரண்டுபோன தியாகராஜன், மேற்கொண்டு எதுவும் பேசவில்லையாம்.

# மறுத்தார் சமந்தா!

வருத்தப்படாத வாலிபர் சங்கம் என்ற வெற்றிப்படத்தை கொடுத்த இயக்குனர் பொன்ராம் மீண்டும் சிவகார்த்திகேயனை வைத்து அடுத்த படத்தை ஆரம்பித்துவிட்டார். இந்த படத்திற்கு 'ரஜினி முருகன்' என்ற பெயர் வைக்கபப்ட்டுள்ளது. இந்த படத்தை பிரபல இயக்குனர் லிங்குசாமி, தனது திருப்பதி பிரதர்ஸ் நிறுவனத்தின்மூலம் தயாரிக்கின்றார்.

இந்நிலையில் இந்த படத்தில் சிவகார்த்திகேயனுக்கு ஜோடியாக நடிக்க சமந்தாவிடம் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டது. சிவகார்த்திகேயனுக்கு ஜோடியாக நடிக்க லிங்குசாமி தனிப்பட்ட முறையில் சமந்தாவிடம் கேட்டுக்கொண்ட போதிலும் அவர் நடிக்க மறுத்துவிட்டதாக கூறப்படுகிறது. விக்ரமுக்கு ஜோடியாக '10 என்றதுக்குள்ளே' என்ற படத்திலும் தெலுங்கில் இரண்டு படத்திலும், விஜய்க்கு ஜோடியாக 'கத்தி' படத்திலும் நடித்துக்கொண்டிருப்பதால் தன்னால் இந்த படத்திற்கு திகதி கொடுக்கமுடியவில்லை என்று சமந்தா தரப்பில் இருந்து கூறப்பட்டுள்ளதாம். ஆனால் உண்மையில் விஜய், சூர்யா, விக்ரம் போன்ற முன்னணி நடிகர்களுடன் மட்டுமே இனிமேல் ஜோடியாக நடிக்க சமந்தா முடிவெடுத்துள்ளாராம்.




# ...நடிகைகள்...!

...மாற்றிக்கொள்வது ஃபேஷனாகி ...ி என்றும், நீது சந்திரா தனது ... இந்த வரிசையில் தற்போது ...கொண்டார்.

...ரபல இயக்குனர் நடிகைகள் ... தடை செய்யவேண்டும் என ...தாக கூறப்படுகிறது. ஆனால் ...ி அய்யர் என்று போடுவதற்கு ... பெயர் ரசிகர்களின் மனதில் ...றே மாற்றிக்கொள்ள முடிவு ...ட்டின் ஒருசில ராசியில்லாத ...கள் பெயரை மாற்ற முடிவு ...எண்கணித நிபுணருடன் அந்த ...கிறது.

## ஷங்கர் பாராட்டு: தனுஷ் மகிழ்ச்சி!

தனுஷின் 25வது திரைப்படமான "வேலையில்லா பட்டதாரி" படத்தை பார்த்த பிரமாண்ட இயக்குனர் ஷங்கர், தனுஷ் மற்றும் படக்குழுவினர்களை வெகுவாக பாராட்டினார்.

தனுஷின் அருமையான நடிப்பு, வேல்ராஜின் சிறந்த திரைக்கதை மற்றும் அனிருத்தின் அசத்தலான இசை ஆகியவற்றை மனம் திறந்து பாராட்டிய அவர், படக்குழுவினர் அனைவருக்கும் வாழ்த்து தெரிவித்தார். தனுஷுக்கு போன் செய்து அவரது நடிப்பை பாராட்டிய ஷங்கர், அடுத்தடுத்து வெற்றி படங்களை கொடுக்க வாழ்த்தும் தெரிவித்துள்ளார். ஷங்கரே தனக்கு போன் செய்து பாராட்டு தெரிவித்ததை தனுஷ், தனது சமூக வலைத்தளத்தில் பெருமையாக பதிவு செய்துள்ளார். மூன்று படுதோல்வி படங்களுக்கு பிறகு தான் சொந்தமாக தயாரித்த மற்றும் 25 வது படம் என்ற பெருமை பெற்ற ஒரு படம் மாபெரும் வெற்றி பெற்றுள்ளதை நினைத்து தான் மகிழ்ச்சி அடைவதாக கூறியுள்ளார்.

# தேன் கிண்ணம்

## அமைதியைத் தேடி...



வாழ்க்கையில் வறுமை என
வளம் தேடினேன் நான்
அமைதியைத் தேட - ஆனால்
கடன் கேட்டு வந்தவர்கள்
தொல்லையால் அமைதி இழந்தேன்
வாழ்க்கையில்.
நட்புக்காக நண்பர்கள்
தேடினேன் - அவர்கள்
நட்பிலும் நான் நஞ்சைக்
கண்டு அமைதி இழந்தேன்.
அன்பு காட்ட என்னிடம்
யாருமில்லை என அலைந்தபோது
அன்னையை நினைத்தேன்.
அவளும் என்னை பிரிந்து
அரை நூற்றாண்டு ஆனதால்
அமைதியை இழந்தேன்.
தூண் இல்லாத என் வாழ்வுக்கு
துணையாக ஒருத்தி வந்தாள்
தினம் அவள் உச்சரிக்கும்
நச்சரிப்பால் அமைதி இழந்தேன்.
பாசத்தைக் காண பிள்ளைகள் கண்டேன்
பிள்ளைகளும் எனக்குத் தொல்லைகளே-
அதனால் அங்கும் நான்
அமைதி இழந்தேன்
இனியும் நான் இருப்பதில்
பலன் இல்லை என
இறப்பதற்கு துணிந்தேன் - அதிலும்
இருப்பவர்கள் தொல்லையால்
இறப்பிலும் நான் அமைதி இழந்தேன்.
இறுதியில் இறைவனிடம் கேட்டேன்
அமைதிக் காட்டென - அவனோ
இருக்கின்றபோது
இவ்வுலகில் எங்கும்
இல்லை அமைதி - உனக்கு
இயற்கை மரணம் - உன்னை
தழுவியபின் நீயே தேடிய
அமைதி அங்கே நிரம்பிக்
கிடக்கும் என்றார் - அடடா
இதுதெரியாமலா
இத்தனை நாட்களாய்
அலைந்தேன் நான்
அமைதியைத் தேடி...

**இளம்பிறை யோகன்**
**புத்தளம்.**

## நன்றி கெட்ட மகன்!



நேற்றுக் கண்ட
காதலிக்காய்
உயிரை மாய்க்க
துணிந்த மனிதனே!
உன்னை நீ
அறிந்திடாத நாளிலிருந்து
கருவாய் சுமந்து
பாராட்டி சீராட்டி
வளர்த்து ஆளாக்கிய
உன் முதுமையுற்ற
பெற்றோருக்கு
ஒரு கவள உணவை
கொடுக்க மறுத்து
முதியோர் இல்லம்
சேர்க்கிறாயே
இது எந்தவகை
பா(வே)சம்!!!

எம்.யூ.அஸ்மாத், ஓட்டமாவடி.

## ஈழத்து எழுத்தாளர்கள்

### மன்னவன் கந்தப்பு

முருகேசு கந்தப்பு என்ற இயற்பெயர் கொண்ட மன்னவன் கந்தப்பு (18 ஜூன் 1926 - 15 பெப்ரவரி 2004) ஒரு ஈழத்து எழுத்தாளர். பயிற்றப்பட்ட தமிழ் ஆசிரியரான இவர் கவிதை புனைதல், பட்டி மன்றப்பேச்சு என்பனவற்றில் திறமை காட்டியவர். சிறந்த நகைச்சுவைப் பேச்சாளரும்கூட. முற்போக்குச் சிந்தனையாளரான இவர் பாடசாலைத் தலைமை ஆசிரியராகப் பணியாற்றி ஓய்வுபெற்றவர்.

கந்தப்பு யாழ்ப்பாணத்தில் கரவெட்டியில் பிறந்தவர். தமிழ் புலமையையும், கவிபுனையும் ஆற்றலையும் தென்புலோலியூர் கந்தமுருகேசனாரிடம் கற்றுக்கொண்டவர். உயர்கல்வி பயிலும்பொழுதே இவரது தமிழ் ஆளுமையை அவதானித்த கலாநிதி சிவப்பிரகாசம் இவரை 'மன்னவன்' என்று அழைக்கத்தொடங்கினார். பின்னர் பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளையின் மாணவர்களுள் ஒருவராகவும் விளங்கினார்.

1960-1972 வரையிலான காலப்பகுதியில் இலங்கை வானொலியில் கவியரங்குகளில் பங்குபற்றி புகழ்பெற்றவர். வானொலி மற்றும் பத்திரிகை நிறுவனங்களினால் நடத்தப்பட்ட கவிதைப் போட்டிகளில் பங்குபற்றிப் பரிசில்கள் பெற்ற இவர், சிறந்த நகைச்சுவைப் பேச்சாளரும்கூட.

வடமராட்சியில் கம்பன் கழகத்தை நிறுவியதோடு, அங்கு கம்பன் விழாவை சிறப்புற நடத்துவதற்கு காரணமாக இருந்தவர்களுள் இவரும் ஒருவர்.

#### கௌரவங்கள், விருதுகள்

இந்து கலாசார அலுவல்கள் அமைச்சு 2001ம் ஆண்டில் இவருக்கு 'கலைஞானகேசரி' என்ற விருதினை வழ்ங்கி கௌரவித்தது

வடமராட்சி தெற்கு - மேற்கு பிரதேசக் கலாசாரப் பேரவை 2005இல் தமது வருடாந்த கலாசார விழாவின் ஒரு நாள் நிகழ்வு அரங்கிற்கு இவரது பெயரைச் சூட்டி கௌரவித்தது.

## கவிதை

கருவின் உருவாக்கத்தால்
கற்பனை பெருக்கத்தில்
வீசும் வேகக் காற்றின்
விஷ்வரூப வெளிப்பாட்டின்
பிரதிபலிப்பதன்
பிரசவிப்பு!

## வாழ்க்கை

பாசம் பரிதவிக்காது
பத்திரம் காத்து
பொத்திப் பொத்தி
பார்த்த உறவின்
உதறித்தள்ளும்
கதவடைப்பு!

## காலம்

ஆடும் வரை ஆடி
அடங்கும் போது
ஒடுங்கி முடங்குவது!

## நவீன காதல்!



கடிதக் காதல்
கலைத்து
கணினிக் காதல்
முளைத்து
இன்றுகளில்
காளையர் - கன்னியர்
காணுமிடமெலாம்
காத லெனும்
பெயரில்
காசிருக்கும்
திமிரினில்
கலாசாரமதை
கலைக்கிறார்கள்!

**சதீஸ்,**
**கிளிநொச்சி.**

## அழுகை

துயரங்கள் துரத்த
துன்பமழையில்
நனைந்து
துளிர்க்கும் ஊற்றினது
துர்அதிர்ஷ்ட தரவு!

## தன்னம்பிக்கை

ஓடும் கூட்டம் ஓட
ஓரடிகூட ஓடாது
நம்மை
நாமே ஆள்வது!

அப்ரார் ஏ.அஸீஸ்,
யாழ்ப்பாணம்.



# வேறென்ன வேண்டும்

இலங்கை கிரிக்கெட் அணியின் அதிர்ஷ்டம் இல்லாத வீரராக கணிக்கப்படுபவர் பிரசன்ன ஜய வர்தன. அணிக்கல்ல, தனக்குத்தானே அதிர்ஷ்டம் இல்லாதவர் என்றுதான் கூறவேண்டும். திறமை மிகுந்த இந்த விக்கெட் காப்பாளர் காயங்களால் அவஸ் தைப்பட்டு சந்தர்ப்பங்களை இழந்திருந்தபோதும், தற்போது காயங்களில் இருந்து மீண்ட நிலையிலும் சந்தர்ப்பம் மறுக்கப்பட்டிருக்கிறார் என்ற குற்றச்சாட்டு இப்பொழுது எழுந்துள்ளது.

பல சந்தர்ப்பங்களின் அணிக்கு முதுகெலும்பாகச் செயற்பட்ட இவர் தற்போது தெரிவாளர்களால் ஏன் புறக்கணிக்கப்படுகிறார் என்று தெரியவில்லை என்கிறார்கள்விமர்சகர்கள். இவருக்கான சந்தர்ப்பத்தைப் பறித்து தினேஸ் சந்திமாலுக்குக்கொடுக்க, அவர் அந்தச் சந்தர்ப்பத்தைச் சரியாகப் பயன்படுத்திக் கொள்ளவில்லை.

இதனால் அவர் நீக்கப்பட அந்த இடம் மிக இளையவரான நிரோஷன் டிக்வெல்லவிற்கு வழங்கப்பட்டது. அவர் தன்னளவில் நன்றாகவே செயற்பட்டிருந்தார். எனவே இனி அவரை நீக்குவது சரியல்ல. அப்படியாயின் பிரசன்ன ஜயவர்தன இனி டெஸ்ட் ஆட்டங்களில் விளையாடும் சந்தர்ப்பத்தை இழந்தவராகவே இருப்பார். மேலாக இவர் சிறந்த டெஸ்ட் வீரர் என்று பாராட்டப்பட்டவர். இருந்தும் துரதிர்ஷ்டம் அவரைத் துரத்திக்கொண்டிருக்கிறது.

34 வயதாகும் இவர் இன்னும் இரண்டு வருடங்கள் விளையாடும் சந்தர்ப்பம் இருந்திருக்கும். அதன் பின் புதியவர்களை உள்வாங்கி இருக்கலாம். ஆனால் ஏனோ இவரைத் தெரிவாளர்கள் கண்டு கொள்ளவில்லை. 56 டெஸ்ட் போட்டிகளில் விளை யாடியுள்ள இவர் 2075 ஓட்டங்கள் பெற்றவர். 4 சதங்களும் 5 அரைச்சதங்களும் பெற்றவர். 119 பிடிகள் எடுத்துள்ள இவர் 5 ஸ்ரம்பிங்கும் செய்துள்ளார்.

தொடர்ந்து இலங்கை அணியின் விக்கெட் காப்பாளராக விளங்க அனைத்துத் தகுதிகளும் இருந்தபோதும் புறந்தள்ளப்பட்டுள்ளார். திறமை மட்டுமன்றி சிலருக்கு அதிர்ஷ்டமும் கூடவே தேவைப்படும் போலத் தெரிகிறது. அப்படி ஒருவர்தான் பிரசன்ன ஜயவர்த்தன.


# நீரோட்டம் திரும்பியது

கொமன்வெல்த் போட்டிகள் ஸ்கொட்லாந்தின் கிளாஸ்கோ நகரத்தில் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இங்கு இங்கிலாந்து தனித்துப் போட்டியிடுகிறது. ஸ்கொட்லாந்து, இங்கிலாந்து, வேல்ஸ், வட அயர்லாந்து நான்கும் சேர்ந்ததே ஐக்கிய ராச்சியம் அல்லது United Kingdom என்பது குறிப்பிடத்தக்கது.

பொதுவாகக் கொமன்வெல்த் போட்டிகளில் நீச்சல் போட்டிகள் என்றால் அது அவுஸ்ரேலிய ஆக்கிரமிப்புத்தான். ஆனால் இம்முறை இங்கிலாந்து பத்துத் தங்கப் பதக்கங்களுடன் அவுஸ்திரேலியாவை நீரில் அமிழ்த்தி, முதல் இடம்பெற்றுவிட்டது. இதிலும் சிறப்பாக எட்டு வருடங்களாக 4x100 மெட்லிறிலே போட்டியை தன்னிடம் வைத்திருந்த அவுஸ்திரேலியா இம்முறை இங்கிலாந்திடம் பறிகொடுத்துவிட்டது.

இதனைவிட பத்தொன்பதே வயதான இங்கிலாந்தின் பென்பிரவுட் இரண்டு தங்கப் பதக்கங்களைத் தட்டிச்சென்றது பெரிய சாதனையாகப் பேசப்படுகின்றது. அதிலும் 50 மீற்றர் பிரிஸ்ரைஸ் நீச்சல் போட்டிகளில் பெரிதும் எதிர்பார்க்கப்பட்ட கெமரன் மக்வே, ஜேம்ஸ் மக்னுசன் இருவரையும் தோற்கடித்தது பெரிய ஆச்சரியமாகப் பார்க்கப்படுகிறது.

அதுபோக இதுவரை மொத்த பதக்கப் பட்டியலில் 57 பதக்கங்கள் பெற்று முன்னணியில் இருக்கிறது. இது 2006 இல் தாயகத்தில் பெற்ற பதக்கங்களைவிட அதிகமாகும். மொத்தப் போட்டிகளும் முடிவடைந்த பின்பே எந்த நாடு கொமன்வெல்த் சம்பியன் என்பது தெரிய வரும். ஆனால் நீச்சல் வெற்றிப்பதக்கம் இங்கிலாந்துக்குத்தான் என்பது தீர்மானமாயிற்று.



# வேகமங்கை

பிளெசிங்ஸ் ஒகாபரே என்றபெயர் ஒரு சில கணத்தில் தடகள விளையாட்டு உலகம் உச்சரிக்கும் பெயராக உருமாறிவிட்டது. காரணம் தெரிந்ததே. கொமன்வெல்த் போட்டிகளின் 100 மீற்றர் ஓட்டப்போட்டியில், இந்த 25 வயதான நைஜீரிய, ஆபிரிக்காவின் வேகமான மங்கை கொமன்வெல்த் போட்டிகளில் கொமன்வெல்த் சமூகத்தின் வேகமான பெண்மணி என்ற பெயரைத் தட்டிச் சென்றுவிட்டார்.

இவர் இந்த ஓட்டத்துக்கு எடுத்துக்கொண்ட நேரம் 10.85 செக்கன்கள் மட்டுமே. தகுதிகாண் போட்டிகளுக்கு முன்னமே இவருக்கு நிறைய அழுத்தங்கள் இருந்தது. அதாவது குறுந்தூர ஓட்டங்கள் என்றால் இந்தக் காலகட்டத்தில் அவற்றை ஜமெய்க்கா குத்தகைக்கு எடுத்தது போன்ற நிலையே காணப்பட்டது.

ஒலிம்பிக் தங்க மங்கை ஷெலி ஆன் பிரேசர் பங்குகொள்ளாவிட்டாலும், வெரோனிக்கா கம்பல் பிறவுண், ஷிலோணி கல்வேட் கெரோன் ஸ்வொட் போன்ற ஜமெய்க்கா வீராங்கனைகளே. அதுவும் வெரோணிக்கா கம்பெலே தங்கம் வெல்வார் என்று எதிர்பார்க்கப்பட்டது.

ஆனால் பிளெசிங்ஸ் கொமன்வெலத் போட்டிகளுக்கு முன்னமேயே, "நான் எனது தாய்நாட்டுக்கு தங்கப்பதக்கம் கொண்டுவருவேன் என்று கூறியிருந்தார். 1994ஆம் ஆண்டின் பின் 100 மீற்றர் மகளிர் போட்டியில் நைஜீரியா இதுவரை எந்தவொரு பதக்கமும் வெல்லவில்லை.

ஆனால் அதற்கு ஒரு முடிவினை பிளெசிங்ஸ் ஏற்படுத்தி உள்ளார். 100 மீற்றர் சாதனை புரிவது ஒரு விடயம். ஜமெய்க்காவின் தடகள ஆதிபத்தியத்துக்கு சவால் விருது இன்னொரு விடயம். இந்தப் பெண்மணி இரண்டு விடயங்களையும் கனகச்சிதமாக முடித்துவிட்டார். கூடுதலாக 200 மீற்றர் தங்கத்தையும் வென்றுவிட்டார்.






எதிர்வரும் சம்பியன்ஸ் லீக் இருபதுக்கு இருபது கிரிக்கெட் போட்டிகளில் லசித் மலிங்க விளையாடிய உள்ளூர் அணி தகுதிப் போட்டிகளுக்குத் தகுதி பெற்றுள்ளது. ஆனால் மலிங்க இந்த அணியில் விளையாடுவதைத் தவிர்த்து, வழமையான மும்பை இந்தியன்ஸ் அணிக்கு விளையாட முடிவுசெய்துள்ளார். இதனை இலங்கை கிரிக்கெட் சபையும் ஏற்று, அனுமதி அளித்துள்ளது.

ஆனால் இதே போன்றதொரு சந்தர்ப்பம் கடந்த வருடம் குமார் சங்கக்கார தொடர்பில் ஏற்பட்டபோது, இவருக்கு ஐ.பி.எல் அணியில் விளையாட அனுமதி

# உள் அந்தரங்கம்

மறுக்கப்பட்டு, உள்ளூர் அணிக்கே விளையாடவேண்டும் என்றும் நிர்ப்பந்தம் கொடுக்கப்பட்டது. இது இப்போது ஒரு சர்ச்சையாக உருவாக்கியுள்ள நிலையில் சங்கக்காரவிடம் கருத்துக் கேட்கப்பட்டது. அதற்கு அவர் மலிங்க தனது தெரிவை சரியாகவே மேற்கொண்டுள்ளார்.


அது அவருடைய சுதந்திரமான தெரிவு. அதன்மூலம் இலங்கையின் இன்னொரு வீரர் சர்வதேச கிரிக்கெட்டில் விளையாடும் சந்தர்ப்பத்தையும் ஏற்படுத்திக் கொடுத்துள்ளார். ஆனால் எனது நிலைமை வித்தியாசமானது. கிரிக்கெட் சபைத் தலைவர், ஏனைய உத்தியோகத்தர்கள் எல்லோருமே என்னிடம் பரிவுடனேயே நடந்துகொண்டிருக்கிறார்கள். ஆனால் ஒரு தனிநபர்தான் என்மீது பழிவாங்குவதுபோல நடந்துகொண்டுவருகிறார். நான் இலங்கை அணித் தலைவராக இருந்தபோதே இந்த நபரால் [illegible] ஏற்பட்டன. காலத்துக்குக் காலம் இது தொடர்ந்து கொண் [illegible] முறையில் நடந்துகொள்வதாகத் தெரிகிறது



# லேடிஸ் ஸ்பெஷல்

பெண்கள் பக்கத்திற்குரிய தரமான ஆக்கங்கள் வாசகர்களிடமிருந்து வரவேற்கப் படுகின்றன.





# கழுத்தில் படரும் கருமை

**முகத்தை போலவே கழுத்தையும் அக்கறையுடன் பராமரிக்கவேண்டும். சிலருக்கு கழுத்து பகுதி கறுத்து காணப்படும். இந்த கருமையை நீக்க இயற்கை பிளீச்சாக எலுமிச்சை பயன்படுகிறது. தினமும் குளிப்பதற்கு அரை மணிநேரம் முன்பு எலுமிச்சை சாறை கழுத்தில் கருமையான பகுதிகளில் தடவி ஊறவிட்டு குளிக்கவேண்டும். இதனால் படிப்படியாக கருமை மறையும்.**

இதுபோல் பால் பவுடர் ஒரு கரண்டி எடுத்துக்கொள்ளவும். இதை தேன், எலுமிச்சை சாறு, தேங்காய் எண்ணெய் சேர்த்து பசைபோல கலக்கவும். இந்த கலவையை கழுத்தில் தடவி அரை மணிநேரம் ஊறவிட்டு வெதுவெதுப்பான நீரில் கழுவிவரவும். வாரம் ஒருமுறை இதுபோல் செய்தால் கழுத்து பளபளக்கும்.

இதுபோல் தயிர், தக்காளி ஜூஸ் அல்லது மஞ்சள்தூள், கறிவேப்பிலை, எலுமிச்சை சாறு சேர்த்து அரைத்து பூசலாம். கோதுமை மாவில் வெண்ணெய் கலந்து பூசலாம். பின்னர் வெதுவெதுப்பான தண்ணீரில் கழுவவேண்டும்.

செம்பருத்தி பூ, ஆவாரம் பூ, மஞ்சள் கரிசலாங்கண்ணி, அவரி இலை போன்றவற்றை தினமும் சாப்பிட்டு வந்தால் உடல் நிறம் கூடும். குங்குமப்பூ, வால்மிளகு, லவங்கம், ஓமம், சாம்பிராணி தலா 25 கிராம் எடுத்து பொடிசெய்து வைத்துக் கொள்ளவும். இதில் அரை கரண்டி எடுத்து சில சொட்டு பால்விட்டு கலந்து முகம், கழுத்தில் பூசிவர சிவப்பழகு கூடும்.

# கருவளையம்



சருமத்தின் எல்லா இடங்களிலும் பரவியிருக்கும் ஹைப்போ டெர்மிஸ் கண்கள் சுற்றியுள்ள பகுதியில் மிகக் குறைவு. பரம்பரை வாகு, தூக்கமின்மை, சரிவிகித உணவு உண்ணாதது, கம்பியூட்டர், டி.வி முன் அதிக நேரம் இருப்பது என கருவளையங்கள் உருவாக காரணம். துவக்கத்திலேயே கவனித்து சிகிச்சை மேற்கொண்டால் சரிசெய்யலாம். முதலில் 8 மணி நேரம் தூக்கம் தேவை. பகல் நேரத்தில் உள்ளங்கை குவித்து கண்களின் மேல் வைத்து மூடியபடி அடிக்கடி செய்யலாம். கண்களை வேகமாக மூடித் திறந்தால் அது ஒருவித மசாஜ்.

கண்களை இறுகமூடவும், பிறகு அகலமாகத் திறக்கவும். இதைப்போன்று 5 முறை செய்யவும். புருவங்களை குறுக்காமல், கண் இமைகளை மட்டும் மூடிமூடி திறக்கவும். நெற்றி, முகத்தசைகள் சாதாரணமாக இருக்கட்டும். இந்த பயிற்சி கண்களைச் சுற்றியுள்ள தசைகளுக்கான பயிற்சி, கருவளையத்தை போக்க இதை தொடர்ந்து செய்யலாம். கருவளையம் அதிகமாக இருந்தால் பியூட்டி பார்லர்களில் கண் மசாஜ் செய்தால் பலனளிக்கும்.

# சுறுசுறுப்புக்கு யோகா...



யோகா உடலில் உள்ளுறுப்புகளை சுறுசுறுப்பாக இயங்க வைக்கும். இதன்மூலம் உடல் உறுப்புகள் அனைத்தும் சீராக இயங்கி ஆரோக்கியம் மேம்படும். யோகா பயிற்சியின்போது சரியான வழியில் மூச்சுப்பயிற்சியை மேற்கொண்டால், சுவாசம் ஒழுங்காக இயங்க ஆரம்பித்து, உங்களது இளமையின் காலம் நீடிக்கும்.

யோகா பயிற்சி நமக்கு தன்னம்பிக்கையுடன் முன்னோக்கி செல்லும் ஆற்றலை கொடுக்கிறது. தினமும் தவறாமல் பயிற்சி செய்தால் கோபம், எதிர்மறை எண்ணங்கள் கட்டுப்படும். யோகாசனப் பயிற்சியால் உடல் எடை குறைகிறது. மேலும் செயற்கையை தவிர்த்து, எவ்வித பிரச்சினையும் இல்லாமல், இயற்கையாக உடல் எடை குறைய யோகா மட்டுமே சிறந்த வழி.

யோகா செய்வதால் இந்த ஓட்டம் சீராகிறது. உடல் எடை குறைந்து, தொடை, கால், தண்டுவடம் மற்றும் இடுப்புத் தசைகள் வலுவடைகிறது. இடுப்பு மெலிந்து உடல் அழகிய வடிவம் பெறுகிறது. வயிற்று உறுப்புகள் நன்றாக வேலை செய்கிறது. கழிவுகள் இலகுவாக வெளியேறுகிறது. ஜீரணசக்தி அதிகரிக்கிறது. வாயுக்கோளாறு, உடல் மந்தநிலைகளுக்கு நிவாரணம் கிடைக்கிறது.

முழங்கால், மூட்டுவலிகள் பிரச்சினைகள் தீரும். சித்தாசனம், பத்மாசனம் என்ற தியான ஆசனங்களால் மனம் ஒரு நிலைப் படுகிறது. தைரோய்ட் சுரப்பிகள் நன்றாக வேலை செய்கிறது. வயிற்றுப்பகுதி உறுப்புகள், சிறுநீரகங்கள், அட்ரீனல் சுரப்பிகள், கருப்பை பிதுக்கம், புராஸ்டேட் சுரபி பிரச்சினைகள் தீரும். சுவாசம் சீரடைந்து புத்துணர்ச்சி அடைகிறது.

# கேள்விக்குறியாகும் பெண்களின் வாழ்வு?

அளவெட்டி. ப.உதயகுமார்



**இன்றைய உலகம் பல்வேறு வழிவகைகளிலும் முன்னேற்றம் கண்டுவருகின்றது. விஞ்ஞான யுகத்தின் அதீதவளர்ச்சியாக உலகம் உருண்டோடிக் கொண்டிருந்தாலும், மனிதகுலம் அத்தகைய வளர்ச்சிப்படிகளில் தடம்பதித்து முன்னேறி வருகின்றது! இத்தகைய முன்னேற்றப்படிகளில் ஆண், பெண் இருசாராரும் இணைந்தே செயற்பட்டுவருகின்றனர். ஒரு ஆண் செய்கின்ற காரியங்களை இன்று பெண்ணும் செய்து வருகின்றாள். ஒரு கால கட்டத்தில் வாகனங்களை ஓட்டுதல், பாரமான வேலைகளைச் செய்தல், விண்வெளிப் பயணம் செய்தல் உட்பட ஏராளமான தொழில்களை ஆண்களே கவனித்து வந்தனர். ஆனால் அத்தகைய தொரு காலகட்டம் மலையேறி விட்டது!**

ஆண் ஒருவன் செய்யும் காரியங்களை இன்று பெண்ணும் செய்துவருகின்றாள். ஆணுக்குப் பெண் சளைத்தவள் இல்லை என்பதைப் பெண்கள் நிரூபித்துவருகின்றனர்.

பெண்களின் நிலைமைகள் இவ்வாறு இருக்கின்றபோதிலும், பெண்களுக்கெதிரான வன்முறைகள் இன்றுவரை குறைந்தபாடாகத் தெரியவில்லை.

நகர்ப்புற, கிராமத்துப்புறம் என்ற பேதமின்றி பெண்களுக்கு எதிரான வன்முறைகள் தொடர்வதனால் பெண் என்பவள் சித்திரவ[illegible] அடக்குமுறைகளுக்கு உட்பட்டு வாழும் அவலநிலை தொடர்கின்ற[illegible] அவ்வளவு நன்மைக்குரியதல்ல. ஏனென்றால் ஒரு பெண்தான் உலகத்தின் சனத்தொகையை தீர்மானிக்கும் சக்தியா்க உள்ளாள். அவளுடைய வாழ்வு நரகமாக மாறிப்போனால், ஆண்களின் வாழ்வு பாலைவனமாகும் என்பதில் துளியேனும் சந்தேகமில்லை.

ஒரு ஆணும், பெண்ணும் சேர்ந்து வாழ்தலே குடும்பம் என்று சொல்கின்றோம். அத்தகைய குடும்ப வாழ்விலே இனிமை இருக்கும் - ஆனாலும் இன்றைய இயந்திர உலகின் முன்னால் சேர்ந்து வாழும் முறைக்கு பதிலாக பிரிந்துவாழும் நிலையே காணப்படுகின்றன. ஒரு பெண்ணை ஒரு குடும்பத்தின் விளக்கு என்றும், ஒளியேற்ற வந்தவள் என்றும் முதியோர்கள் சொல்லக் கேள்விப்பட்டிருக்கின்றேன்- அத்தகைய ஒரு சிறப்பான, கௌரவமான, நிலையில் இருந்தும் பெண்களும் விலகிச்செல்லாமல் இல்லை. சில பெண்கள் செய்யும் இழிவான செயல்களினால் முழுப்பெண் களுக்குமே பாதிப்பு உண்டாகிவருகின்றன. ஆனாலும் அதிகளவான பெண்கள் ஆணாதிக்கத்தினால் பெரும் பின்னடைவையே கண்டு வருகின்றனர்.

ஒரு பெண் எவ்வளவு படித்தவள் என்றாலும், கைநிறையச் சம்பாதிப்பவளாக இருப்பினும் ஒரு ஆணின் தலைமையின்கீழ், அவனுக்குக் கட்டுப்பட்டுத்தான் வாழவேண்டும் என்கின்ற நிலையு[illegible] அதிகளவிலே இன்று காணப்படுகின்றன. இத்தகையதொரு அடிமை நிலையினைப் பெண்கள் விரும்பாதுவிட்டாலும், பொறுமை சகிப்புத் தன்மை என்பவற்றுடன் வாழவேண்டிய நிலை உள்ளது! ஆணாதிக்கத்தின் கொடுமைகளை தட்டிக்கேட்டால் அவளை அடங்காப்பிடாரி என்றும், குடும்பத்துக்கு ஏற்றவள் இல்லை என்றும் பட்டம் சூட்டி அவளை அடித்து துன்புறுத்தும் நிலைமைகளும் தொடர்கின்றன.

ஒரு குடிகாரக் கணவனினால் பெண்களின் வாழ்வு சீரழிகின்றது என்பதும் இன்றைய காலகட்டத்திலே நடந்துவரும் கொடும் செயலாக உள்ளது! இருப்பினும் யுத்தம் நிறைவடைந்த பின்பு வடபுலத்துப் பெண்களின் வாழ்வில் பலதரப்பட்ட வன்முறைகள் நடந்தேறிவருகின்றன. செம்மணியில் தொடங்கிய கிருஷாந்தியின் பாலியல் வல்லுறவு முதல் காரைநகரில் நடந்தேறிய சிறுமிகள் மீதான பலாத்காரம் என்பன பெண்களை நிலையை குலைய வைத்துள்ளது! இது ஒருபுறமிருக்க, பெண்கள்மீதான பாலியல் ரீதியிலான துன்புறுத்தல்கள் மிக, மிக, அதிகரித்த அளவிலேயே இடம்பெற்றும் வருகின்றன! கட்டியவன் என்றாலும் அவளுக்கு இஷ்டமில்லையென்றால் தொடக்கூடாது என்று சட்டவிதி சொல்கின்றது. ஆனாலும் சட்டத்தை மதிப்பவர்களாக எதுவும் விளங்கவில்லை.

கட்டிய மனைவி இருக்க அவளின் தங்கைமீது ஆசைகொண்ட காமுகன் மூன்று பெண்களை வெட்டிப் படுகொலை செய்த சம்பவம் மறப்பதற்கில்லை. அதேபோல இராணுவ துணைப் படையிலே மனைவி சேர்வதற்கு விரும்பியபோது அதனால் உண்டான பிரச்சினையால் மனைவியின் கழுத்தை வெட்டி எறிந்த கொலைகாரனும் இம்மண்ணிலேதான் வாழ்கின்றான்.

(தொடரும்...)

250/= பரிசு

## வாரம் ஒரு அதிர்ஷ்டசாலி

பரிசுப் போட்டி இல :-431

**கேள்வி: கரு வளையங்கள் உருவாகுவதற்கான காரணங்கள் எவை?**

அனுப்ப வேண்டிய கடைசித் திகதி:- 18. 08. 2014

விடையைக் கீழுள்ள கூப்பனில் எழுதி, தபாலட்டையில் அனுப்பிவைக்கவும். அனுப்பி வைக்கவேண்டிய முகவரி:

வாரம் ஒரு அதிர்ஷ்டசாலி,
பரிசுப் போட்டி இல : 431
தினமுரசு வாரமலர்,
த.பெ.இல - 167,
யாழ்ப்பாணம்.

பரிசுப் போட்டி இல :- 429 இற்கான விடை :-
ஏஞ்சலோ மெர்க்கெல்

பரிசுபெறும் அதிர்ஷ்டசாலி :-
எஸ். சமீலா,
பிரதான வீதி, பதுளை.

சரியான விடையை எழுதியவர்களில் ஒருவர் குலுக்கல் முறையில் தெரிவு செய்யப்படுவர்.

431

பெயர் : ................................

முகவரி : ................................


................................

தே.அ. அட்டை இல : ................................

விடை : ................................

................................

கையொப்பம் : ................................



# தெரிவுக்குழுவே இனப்பிரச்சினைக்கு தீர்வு

**கிழக்கான்**

**இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்காகவே பாராளுமன்ற தெரிவுக் குழுவினை ஏற்படுத்தி இருக்கின்றோம். ஆனால் தமிழ் தேசியக் கூட்டமைப்பு அதனைப் புறக்கணித்து அதில் பங்குபற்றாமலேயே பல்வேறுபட்ட குற்றச்சாட்டுகளை முன்வைக்கின்றனர். ஆனால் நாம் அரசாங்கத்துடன் இருந்துகொண்டு எமது மக்களுக்காக பாரிய வேலைத் திட்டங்களை மேற்கொண்டு வருகின்றோம என மீள்குடியேற்றப் பிரதி அமைச்சரும் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் உப தலைவருமான விநாயகமூர்த்தி முரளிதரன் (கருணா அம்மான்) தெரிவித்தார்.**

தற்போதைய அரசியல் நிலைமைகள், மீள்குடியேற்றம், புலம்பெயர் அமைப்புகளின் செயற்பாடுகள், தேசிய நல்லிணக்கம் குறித்து வழங்கிய நேர் காணலிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

**கேள்வி : யுத்தத்திற்கு பின்னராக பல்வேறு மனித உரிமை மீறல்கள் இடம்பெறுவதாக பல்வேறு குற்றச்சாட்டுகள் இருந்து வருகின்றன. இது தொடர்பில் தங்கள் கருத்து என்ன?**

**பதில்:** பொதுவாக இது முற்று முழுதாக தவறான ஒரு கருத்து. ஏனெனில் ஒரு யுத்தம் இடம்பெற்ற நாட்டில் ஒரேயடியாக ஒரு மாற்றத்தைக் கொண்டு வருவதென்பது ஒரு முடியாத விடயம். 30 வருடகாலமாக யுத்தம் இடம்பெற்றுக் கொண்டிருந்தது. தற்போது யுத்தம் முடிவுக்கு கொண்டுவரப்பட்டு தற்போது 5 வருடங்கள் நிறைவுற்றிருக்கின்றது. இந்த வருடங்களுக்குள் எமது அரசாங்கம் பல மாற்றங்களைக் கொண்டு வந்திருக்கின்றது. பல்வேறு பாரிய அளவிலான அபிவிருத்தி திட்டங்கள் அது போல மக்கள் சுதந்திரமாக நடமாடக்கூடிய வாய்ப்பு, சுதந்திரமாக கல்வி கற்கக்கூடிய வாய்ப்புகள், சுதந்திரமான இலங்கையில் எந்த இடத்திலும் மூவின மக்களும் சென்றுவரக்கூடிய நிலைமைகள் உருவாக்கப்பட்டிருக்கின்றன.

எமது வடக்கு, கிழக்கு பிரதேசங்களை எடுத்துக்கொண்டால் எதுவித கைதுகள், இராணுவ கெடுபிடிகள், முற்றுகைகள் இல்லை. இன்று மிகவும் சிறந்த முறையில் இந்த மனித உரிமைகள் பேணுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. ஆனால் கடந்த யுத்த காலங்களில் பலர் காணாமல் போயிருக்கின்றார்கள். இதற்குப் பல காரணங்கள் இருக்கின்றன. உண்மையில் யுத்தம் தொடர்ந்து இடம்பெற்றுக் கொண்டிருந்த நேரத்தில் இங்கிருந்த போராட்டக் குழுக்களால்கூட பல இளைஞர்கள் கடத்தப்பட்டார்கள் கைதுசெய்யப்பட்டார்கள். போராடுவதற்காகக்கூட கொண்டு செல்லப்பட்டார்கள். இதன்போது யுத்தங்கள் பல காட்டுப் பிரதேசங்களில்கூட இடம்பெற்றது. அங்கு பல உடல்கள்கூட விடப்பட்டது. எனவே யார் யார் எங்கு காணாமற் போனார்கள் என்பதை திடமாகக் கூறமுடியாது.

இன்று நாங்கள் ஒரு கணக்கெடுப்பை மேற்கொள்வதற்கு தீர்மானித்திருக்கின்றோம். எல்.எல்.ஆர்.சி என்ற ஒரு பொதுவான அமைப்பை உருவாக்கி அதனூடாக பலவிசாரணைகளை மேற்கொண்டு அதில் இன்று மக்கள் வெளிப்படையாகச் சென்று தங்கள் குற்றச்சாட்டுக்களை முன்வைப்பதற்குரிய சூழ்நிலைகளை ஏற்படுத்திக் கொடுத்திருக்கின்றோம்.

எனவே இதேபோல் எமது இனப்பிரச்சினைகளை சிறந்த முறையில் பேசித் தீர்ப்பதற்காக பாராளுமன்ற தெரிவுக் குழுவினை ஏற்படுத்தி இருக்கின்றோம். ஆனால் தமிழ் தேசியக் கூட்டமைப்பினால் அது புறக்கணிக்கப்பட்டு வருகின்றது. அவர்களால் இதனைப் புறக்கணிப்பதன் மூலம் எதையும் வெல்லமுடியாத நிலை ஏற்படும். ஏனெனில் அவர்கள் அதில் பங்குபற்றாமலேயே பல்வேறுபட்ட குற்றச்சாட்டுகளை முன்வைக்கின்றார்கள். இது ஏற்றுக்கொள்ள முடியாத ஒரு செயற்பாடாகும். ஆனால் நாம் அரசாங்கத்துடன் இருந்துகொண்டு எமது மக்களுக்காக பாரிய வேலைத் திட்டங்களை மேற்கொண்டுவருகின்றோம். வருடாவருடம் எமது மக்களின் வாழ்க்கைத்தரம், கல்வித்தரம் உயர்ந்து கொண்டிருக்கின்றது. எனவே இன்னும் இதனை நாங்கள் மேம்படுத்துவதற்கு திட்டமிட்டிருக்கின்றோம்.

**கேள்வி: புலம்பெயர் நாடுகளிலுள்ள அமைப்புகளின் செயற்பாடுகள் பற்றி உங்கள் கருத்து என்ன?**

**பதில்:** அவர்கள் எங்களுடைய மக்கள் அதனை நாம் ஏற்றுக் கொள்ள வேண்டும். ஏனெனில், அவர்கள் எமது உடன்பிறப்புகள் சகோதரங்கள்தான் இன்று புலம்பெயர்ந்த மக்களாக வாழ் கின்றார்கள். புலம்பெயர்ந்த மக்களை நாம் ஒருபோதும் பிரித்துப் பார்க்க முடியாது. ஆனால் புலம்பெயர்ந்த மக்கள் மத்தியில் சிறந்த தெளிவாக்கங்களை நாம் உருவாக்கவேண்டும். ஏனெனில் அவர்கள் புலம்பெயர்ந்து வாழ்கின்றார்கள். அவர்களுக்கு இங்கு நடக்கின்ற நடைமுறைகள் தெரியாமல் இருக்கலாம்.

எனவே இங்கிருக்கின்ற வெளிப்படைத் தன்மைகளை நாம் தெளிவாக்குகின்ற போதுதான் அவர்கள் சிறந்த விடயங்களை அறிந்துகொள்வார்கள். சில தமிழ் அரசியல் கட்சிகள் புலம்பெயர்ந்த மக்களை தவறாக வழிநடத்துகின்றார்கள் என்றுதான் நான் கூறுவேன்.

ஏனெனில், இங்கு பல அட்டூழியங்கள் நடப்பதாகவும், இராணுவக் கெடுபிடிகள் இருப்பதாகவும், மக்கள் காணாமற் போவதாகவும் தவறான பிரசாரங்களை தற்போது மேற்கொண்டிருக்கின்றார்கள். எனவே இதனை நாங்கள் ஒருபோதும் ஏற்றுக் கொள்ளமுடியாது. என்னைப் பொறுத்தமட்டில் இலங்கையில் மனித உரிமைகள் மிகவும் சிறந்த முறையில் வளர்ச்சியடைந்திருக்கின்றது என்றுதான் கூறுவேன்.

**. கேள்வி : இங்கு இனஅழிப்பு, இன அடக்குமுறைகள் இடம்பெறுவதாக தெரிவிக்கப்படுகிறதே!**

**பதில்:** இன்று யுத்தம் முடிவடைந்து அனைத்து மக்களுக்கும் சுதந்திரமான ஒரு சூழ்நிலை உருவாக்கப்பட்டிருக்கின்றது. இவ்வாறான நிலை தற்போது எமது நாட்டில் இருக்கும்போது இங்கு இனப்பிரச்சினைகள் என்பதைவிட அண்மையில் முஸ்லிம், சிங்கள மக்களிடையில் தவறான புரிந்துணர்வு காரணமாக முஸ்லீம் மக்களுக்கு சில பிரச்சினைகள் ஏற்பட்டது உண்மையான விடயம்தான். இதனை நாம் ஏற்றுக் கொள்ளத்தான் வேண்டும்.

இதனை நம் அவ்விடத்திலேயே படைப்பிரிவினரை, காவல் துறையினரைப் பாவித்து அதனை தடுத்து நிறுத்தினோம். அதன்பின் ஜனாதிபதி அவர்கள்கூட அவ்விடத்திற்கு நேரடியாகச் சென்று அதற்கான சிறந்த ஒரு நடவடிக்கையினை மேற்கொண்டார். அதெல்லாம் ஒரு பாரிய விடயமாக நாம் கருதமுடியாது. நாட்டின் பல்வேறு பாகங்களிலும் இவ்வாறான விடயங்கள் இடம்பெறுவதென்பது சாதாரண-மான விடயம். ஆனாலும் சட்ட ஒழுங்குகள் சிறந்த முறையில் அந்த இடத்தில் பேணப்பட்டிருக்கின்றது. அசம்பாவிதங்கள் இடம்பெற்றிருந்தாலும் அதற்கான முழுப்பொறுப்பையும் அரசாங்கம் ஏற்றிருக்கின்றது. எனினும் இதுபோன்ற அசம்பாவிதங்கள் எதிர்காலத்தில் இடம்பெற விடக்கூடாது என்பதில் நாம் மிகவும் கவனமாக இருக்கின்றோம்.

**கேள்வி : நாட்டில் மீள் நல்லிணக்க செயற்பாடுகள் எவ்வாறு இருக்கின்றது. அதில் உங்களின் பங்கு என்ன? அதற்காக மக்கள் என்ன செய்யவேண்டும் என எதிர்பார்க்கின்றீர்கள்?**

**பதில் :** உண்மையில் மீள் நல்லிணக்கம் என்பது மக்கள் மனங்களில் இருந்து உருவாகவேண்டும். ஏனெனில் முப்பது வருடகாலமாக இடம்பெற்ற யுத்தத்தின் காரணமாக புரையோடிப் போயிருந்த பிரச்சினை, இதன்நிமித்தம் மக்களின் மனங்களில் இருந்த காழ்ப்புணர்வுகள் நீக்கப்படவேண்டும். தற்போது இது மெல்லமெல்ல உருவாகி வருவதை நாம் காண்கின்றோம். ஏனெனில் காலத்தின் மாற்றம்தான் இது ஏற்படுவதற்கு வாய்ப்பாக இருக்கும். இது குறுகிய காலத்தில் ஏற்படக்கூடிய விடயம் அல்ல. தற்போது சிங்கள மக்கள், தமிழ் மக்கள் சேர்ந்து வர்த்தகம் செய்கின்றாகள். அதுபோல் முஸ்லீம் மக்களும் வர்த்தகம் செய்கிறார்கள். மூவின மக்களும் அனைத்து இடங்களுக்கும் செல்கின்றார்கள். இதுபோல் சிறந்த புரிந்துணர்வு தற்போது ஏற்பட்டிருக்கின்றது. இதில் எனக்கும் பங்கிருக்கின்றது. எவ்வாறெனில், நான் முதலில் தேசிய நல்லிணக்க அமைச்சராகத்தான் இருந்தேன். எனவே இதில் நானும் ஒரு பங்குதாரன் என்பதை கூறிக்கொள்கின்றேன்.

**கேள்வி : நீங்கள் போராளியாக இருந்து அரசியலுக்குள் வந்திருக்கின்றீர்கள். தற்போது அந்த மாற்றத்தினை எவ்வாறு உணர்கின்றீர்கள்?**

**பதில் :** அதில் பாரிய மாற்றங்கள் என்று கூறுவதற்கு இல்லை. சொல்லப் போனால், முன்பு இருந்த அரசாங்கங்கள் விட்ட தவறின் காரணமாகத்தான் முன்பு இந்த யுத்தம் ஆரம்பிக்கப்பட்டது. அதாவது 83ஆம் ஆண்டு ஏற்பட்ட ஜூலை கலவரத்தின் பிற்பாடுதான் அந்நேரம் ஜே.ஆர். ஜெயவர்த்தன அவர்கள் நாட்டின் தலைவராக இருந்தார். அதன் பிற்பாடுதான் பாரிய யுத்தமாக இந்த நாட்டில் வெடித்தது. அதில் போராடவேண்டிய கடமை ஒன்றுக்கு நாம் தள்ளப்பட்டிருந்தோம்.

தனிநாடு தேவை என்று ஊக்கப் படுத்தப்பட்டோம். இது ஒரு தேவையற்ற யுத்தம் என்று பல காலத்தின் பின்பு தான் உணரக்கூடியதாக இருந்தது. எனவே இந்த யுத்தத்தை நிறுத்தி தற்போது நாங்கள் ஜனநாயக நீரோட்டத்திலே இணைந்து இன்று யுத்தத்தில் ஈடுபட்டதைவிட பாரிய வேலைத்திட்டங்களை மக்களுக்கு நாங்கள் செய்துகொணடிருக்கின்றோம்.

இதனூடாக பல இன உறவுகள் ஏற்பட்டு இன்று பாரிய மாற்றம் ஏற்பட்டுள்ளது. இதனை தற்போது மக்கள் நன்கு உணர்ந்து கொண்டிருக்கின்றார்கள்.

எனவே இதனை நாங்கள் நன்கு வளப்படுத்தி மேலும் மேலும் மக்களுக்கு உதவியை வழங்கவேண்டும் என்பதைத் தான் நாம் எதிர்பார்க்கின்றோம்.

**(21 ஆம் பக்கம் பார்க்க)**

**(08 ஆம் பக்கத் தொடர்ச்சி)**

## பலஸ்தீனத்தின் அழிவில்...

யூதர்களிடையே வெளிப்படையாக தெரியும் வேறுபாடுகள் நிறைய உள்ளன. இன்றைய நவீன இஸ்ரேலில்கூட ரஷ்ய யூதர்கள், கிழக்கு ஐரோப்பிய யூதர்கள், மேற்கு ஐரோப்பிய யூதர்கள், அரபு யூதர்கள், எத்தியோப்பிய யூதர்கள், என்று பலவகை சமூகங்கள் தனிதனி உலகங்களாக வாழ்வதேன்? இந்த சமூகம் ஒவ்வொன் றுக்கும் ஹீப்ரு மொழியில் விசேட பட்டப்பெயர்கள் உள்ளன.

இன்றைய இஸ்ரேலிய தேசத்தின் அரசியல், இராணுவ, பொருளாதார ஆதிக்கம் ஐரோப்பாவில் இருந்து வந்து குடியேறிய யூதர்களின் கைகளில் உள்ளது. இவர்களது நதிமூலம் பற்றிய சுவாரஷ்யமான ஆய்வுகள் நடந்துள்ளன. அந்த தேடலில் 'கஸார்' இராசதானி பற்றி தெரியவந்தது. அதுவே ஐரோப்பிய யூதர்களின்மூலமாக நம்பப்படுகின்றது.

முன்னொரு காலத்தில் கஸ்பியன் கடலுக்கும், கருங்கடலுக்கும் இடைப்பட்ட பிரதேசத்தையும், தெற்கு ரஷ்யாவையும், கிழக்கு உக்ரேனையும் சேர்த்து ஒரு மாபெரும் யூத இராஜ்ஜியம் பத்தாம் நூற்றாண்டு வரை நிலைத்து நின்றது. கஸார் மக்கள் மத்திய ஆசியாவை சேர்ந்த துருக்கி மொழிபேசும் இனத்தை சேர்ந்தவர்கள்.

இருப்பினும் அவர்கள் ஆட்சியின்கீழ் பிறஇனத்தவர்களும் வாழ்ந்தனர். மேற்கே கிறிஸ்தவ மதமும், கிழக்கே இஸ்லாமிய மதமும் பரவிக்கொண்டிருந்த காலம் அது. இரண்டுக்குமிடையே தமது தனித்தன்மையை காப்பாற்றுவதற்காக, கஸார் ஆளும் வர்க்கம் யூத மதத்திற்கு மாறியது. இந்த மத மாற்றம் அரசியல் காரணத்திற்காக ஏற்பட்ட ஒன்று. இன்று நடுநிலை பேண விரும்பும் சுவிட்சர்லந்துடன் ஒப்பிடத்தக்கது.

கஸார் இராசதானி அரபு-இஸ்லாமிய படையெடுப்புகளை வெற்றிகரமாக தடுத்து நின்ற போதும், அதனது வீழ்ச்சி வடக்கே இருந்து வந்த ரஷ்யர்களால் ஏற்பட்டது. அதற்குப் பிறகு கஸார் மக்கள் அந்தப் பிரதேசத்தில் இருக்கும் பிற இனத்தவர்களுடன் கலந்துவிட்டனர். பெரும்பாலானோர் யூத மதத்தை கைவிட்டு, இஸ்லாமியராகிவிட்டனர். இருப்பினும் குறிப்பிடத்தக்க கஸார் யூதர்கள் போலந்திற்கும், பிற ஐரோப்பிய நாடுகளுக்கும் புலம்பெயர்ந்ததாக நம்பப்படுகின்றது.

புலம்பெயர்ந்த யூதர்கள் 'யிட்டிஷ' கலாசாரத்தை உருவாக்கினர். யிட்டிஷ் என்பது, ஹீப்ரு, ஜெர்மன், ஸ்லோவாக்கிய சொற்கள் கலந்த மொழியைக் குறிக்கும். கிழக்கு மற்றும் மத்திய ஐரோப்பாவில் வாழ்ந்த யூதர்கள் இந்த மொழியை பேசினர். நவீன இஸ்ரேல் உருவாகி, ஹீப்ரு உத்தியோகபூர்வ மொழியாகிய பின்னர், இப்போது அந்த மொழி மறைந்துவருகின்றது.

இஸ்ரேல் என்ற தேசம் உருவான போது, அங்கே யூதர்களின் புராதன மொழியான ஹீப்ரு பேசுவோர் யாரும் இருக்கவில்லை. எல்லோரும் அதற்கு முன்னர் வாழ்ந்த நாட்டு மொழிகளையே பேசினர், இன்றும்கூட வயோதிபர்கள் ஜெர்மன், பிரெஞ்சு, ஆங்கிலம், அரபு என்று பல்வேறு மொழிகளை வீடுகளில் பேசிவருகின்றனர். இளம் சந்ததி மட்டுமே ஹீப்ரு மொழியை தமது தாய் மொழியாக்கியது.

நவீன இஸ்ரேலை உருவாக்க பலஸ்தீனர்களின் பூர்வீக தாயகம் விழுங்கப்பட்டது. மேற்குக்கரையில் ஒரு துண்டு நிலமும் காஸாவில் சிறுதுண்டு நிலமும் இப்பொழுது பலஸ்தீனர்களுக்கு எஞ்சியுள்ளன.

(ஏ.எச்.ஏ. ஹுஸைன்)

# பொதுபல சேனாவுக்கு அதிகாரம் அனுசரணையா?

தொடர் - 17

**தமது பூர்வீக நிலங்களை அபகரிக்க அதிகாரத் தரப்பு எடுத்து வரும் நடவடிக்கைகள் குறித்து அந்த ஏழைக் கிராம மக்கள் தமது துயரத்தைப் பகிர்ந்துகொண்டனர்.**

# சேருவிலவில் புனித பூமி!



**பூர்வீகமாக 90 அல்லது 95 ஆண்டுகளுக்கு முன்பிருந்தே இப்பகுதியில் வாழ்ந்துவரும் எங்களை விரட்ட நினைப்பது அக்கிரமம். தங்களது வழிபாட்டு இடம் என்று அவர்கள் கூறுமிடத்தை துப்புரவுசெய்து சிரமதானம்செய்து கொடுக்க எங்கள் கிராமத்தவர்கள் எந்நேரமும் தயாராக இருக்கின்றார்கள். நாங்கள் ஒருபோதும் இடைஞ்சலாகவோ, இனவெறுப்புடனோ நடந்துகொள்ளமாட்டோம். எங்களை எமது பூர்வீக இடங்களில் நிம்மதியாக வாழவிடுங்கள்.**

### சேகுத்தம்பி ஹயாத்து மூமின்

*(வயது 64)*



நான் சுமார் 45 வருடங்களாக இந்தப் பகுதிக்கு வந்து காடு வெட்டி, பயிர் செய்துகொண்டு வாழ்ந்து வருகின்றேன். அந்த மண்புற்றுப் பகுதியை பெரும்பான்மை மக்களைக் குடியேற்று வதற்காக எங்களை இங்கிருந்து வெளியேற்றும் முயற்சியில் அவர்கள் ஈடுபட்டுள்ளார்கள். தொல்பொருளுக்குரிய இடம் இது என்று அவர்கள் கூறுகின்றார்கள். அவர்களது மண்புற்றைச் சூழ ஏராளமான வெற்றுக்காணி பரந்து கிடக்கின்றது. அவர்கள் பன்சல கட்டுவதாக இருந்தால் அந்தக் காணி கள் அவர்களுக்குப் போதும். ஆனால் இந்த ஊரையே பெரும்பான்மை யினரின் குடியேற்றமாக மாற்றவேண்டும் என்பதுதான் அவர்களது உள்நோக்கம்.

பரம்பரை பரம்பரையாக வாழ்ந்து வரும் எங்களை விரட்டிவிட்டு மாத்தறை, ஹம்பாந்தோட்டை, குருநாகல் போன்ற பிரதேசத்து பெரும்பான்மை மக்களை இங்கே கொண்டு வந்து குடியேற்றப் போகின்றார்கள். அப்படிச் செய்தால் நாங்கள் எங்கே போவது? அருகிலுள்ள கடலிலா போய் விழச் சொல்கின்றார்கள்? இங்கிருக்கின்ற 'சாதுவும்' அரசாங்க அதிகாரிகளும் தான் இந்த அநியாயத்தைச் செய் கின்றார்கள். அப்படியென்றால் பரம் பரை பரம்பரையாக இங்கே பிறந்து, வளர்ந்து, வாழ்ந்து கொண்டிருக்கும் எங்களுக்கு 'சொந்தப் பூமியில் வாழ உரிமையில்லையா?

### ஷரோன் மக்பிரா

*(வயது 43)*



நாங்கள் எல்லோரும் பிறந்தது, வளர்ந் தது, வாழ்ந்து கொண்டிருப்ப தெல்லாம் இந்தக் காணியில்தான். எனது தந்தை 85 வயதில் காலமானார். அவர் தனது 15 ஆவது வயதில் இங்கே வந்து காடுவெட்டி வீடுகட்டி பயிர்செய்து வாழ்ந்ததாகக் கூறியிருக்கின்றார்.

இவ்வளவு காலத்திற்கும் இங்கே பெரும்பான்மை மக்களின் நடமாட்டமோ, பன்சலயோ இங்கு இருந்ததாக நாம் கேள்விப்பட்டதில்லை.

இப்பொழுது ஓரிரு மாதங்களாகத் தான் திடீரென வந்து விகாரை இருந் ததற்கான தடயம் இருப்பதாகவும் அதனைச் சூழ உள்ளவர்கள் வெளி யேறவேண்டும் என்றும் கூறுகின்றார்கள்.

எனது 60 பேர்ச்சஸ் காணிக்கு அரசாங்கத்தால் தரப்பட்ட அனுமதிப் பத்திரம் உண்டு. இங்கிருந்து நாங்கள் குடிபெயர்ந்து எங்கே. போய்வாழ்வது? இந்த வெளியேற்றப் பிரச்சினை ஆரம் பத்திலிருந்து எதையுமே நிம்மதியாக செய்யமுடியாமல் இருக்கின்றது.

எப்பொழுது என்ன நடக்குமோ என்ற பயப்பீதியில் மக்கள் உறைந்து போய் உள்ளார்கள். வீட்டைவிட்டு வெளியே செல்லவே பயங்கரமாக இருக்கின்றது. நாட்டில் ஏனைய பாகங்களில் நடந்த வன்முறைகளைக் கேள்விப்பட்டு நாங்கள் அச்சத்தில் உறைந்துபோய் உள்ளோம்.

### எஸ். சனூஜா - மாணவி

*(வயது 14)*



நாங்கள் வாழ்ந்து கொண்டி ருக்கின்ற ஊருக்குள் பௌத்த மத வழி பாட்டுத் தலம் இருந்ததாகக் கூறி எங்களை வெளியேறச் சொல்லியிருக் கின்றார்கள்.

இதனால் நாங்கள் கடும் மனத்தாக் கத்திற்கு ஆளாகியிருக்கின்றோம். எப் பொழுது நம்மை வெளியேற்றுவார்கள் என்கின்ற பயம்தான் அது. நான் மட்டு மல்ல என்னோடு படிக்கின்ற இந்தக் கிராமத்தைச் சேர்ந்த மற்றப் பிள்ளை களும் அப்படித்தான் உணர்கின்றார்கள். கருத்தூன்றிப் படிப்பதற்கும், சாப்பிடுவதற் கும், நிம்மதியாகத் தூங்குவதற்கும்கூட முடியாமல் எந்நேரமும் வெளியேற்றப்படு வோம் என்கின்ற பயமாகத்தான் உள்ளது. சிலநேரங்களில் நாம் வாழ்ந்த இடத்தைவிட்டு எங்கே போவது என்ற துயரம் தாங்காமல் மனம் வெதும்பி அழுகின்றோம்.

### மர்சூக் மௌலவி



நான் இந்தக் கிராமத்தில் கடந்த 35 வருடங்களாக வாழ்ந்து வருகின் றேன். எனது அறிவுக் கெட்டிய வரையில் இங்கு ஒரு பௌத்த குடும்பம்கூட வாழ்ந்ததற்கான எந்தவித ஆதாரங்களும் இல்லை. அப்படி இருக்கும்போது எப்படி இங்கே பௌத்த வழிபாட்டுத்தலம் இருந்திருக்க முடியும்?

இங்கு வந்து காடுவெட்டி குடியேறி காலங்காலமாக வாழ்ந்துவரும் ஏழைகள் வீட்டுத் தோட்டம், சேனைப் பயிர்களைச் செய்து தமது ஜீவனோ பாயத்தைக் கழித்துவந்துள்ளார்கள்.

ஆனால், இப்பொழுது இந்தக் கிராம வாசிகளை இங்கிருந்து வெளியேற்றும் படலம் ஆரம்பித்துள்ளதால் எல்லோரும் ஒருவித பயப்பீதியில் உறைந்து போயுள்ளார்கள்.

ஒருவருடத்திற்கு முன்னர் எங்களுக்கு காணிக்குரிய போர்மிட் தருவதாகக் கூறி நில அளவைத் திணைக்களத்தினால் அதிகாரிகள் வந்து நிலத்தை அளந்தார்கள்.

பின்னர் 2013.12.06 ஆம் திகதி மீண்டும் அவர்களே வந்து அளக்க முற்பட்டபோது மக்கள் தடுத்தார்கள். அதன்போது பிரதேச செயலாளர் உடனே இங்கு வந்தார். உங்களுக்குக் காணியும் போர்மிற்றும் தருவதற்காகவே நாம் இவ்வாறு காணிகளை அளக்கின் றோம். எனவே அதற்குத் தடை ஏற்படுத்த வேண்டாம் என்று மக்களை சமாதானப்படுத்தினார். அதனை மக்களும் நம்பினர்.

ஆனால் அவர் வாக்குறுதி தந்ததற்கு எதிர்மாறாக எந்தக் காணி கள் அளக்கப்பட்டதோ அந்தக் காணி யில் வசிப்பவர்களை ஓகஸ்ட் மாதம் 30ஆம் திகதியுடன் காலிசெய்து வெளி யேறுமாறு எச்சரிக்கை விடுக்கப்பட்டிருக் கின்றது.

இதனால் மக்கள் பயப்பீதியுடன் வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள்.

சிறுவர்கள்கூடப் பயந்த நிலையில் இருக்கிறார்கள். படையினர், பொலிஸார், பௌத்த பிக்குகள். மற்றும் பெரும் பான்மை பேசுவோரின் நடமாட்டங் களைக் கண்டால் அச்சத்துடன் ஓடி ஒழிந்துகொள்கின்றார்கள்.

இரவுவேளையில் பெரும்பாலானோர் நிம்மதியாகத் தூங்குவதே இல்லை. தமது வீடுகளுக்கு நாசம்செய்து விடுவார்களோ இரவோடிரவாக எம்மை விரட்டிவிடுவார்களோ என்ற அச்சம் தான் இதற்குக் காரணம். அன்றாடம் கூலித் தொழிலுக்குச் செல்பவர்கள்கூட வெளியில் எங்கும் செல்லாமல் இந்தப் பிரச்சினை பற்றியே கவலையோடு காலம் கழிக்கிறார்கள். மாணவர்கள் சிறுபிள்ளைகள் என்று எல்லோரையும் இந்தப் பிரச்சினை வாட்டத் துவங்கி யிருக்கின்றது.

எங்களுக்கு ஒரு பக்கம் கடலும் மற்றப்பக்கம் நீனாக்கேணியும் அடுத்த பக்கத்தில் சேருவிலயும்தான் எல்லை களாக உள்ளன.

சேருவிலவில் மாற்று இனங்கள் கலப்பில்லாமல் ஹம்பாந்தோட்டை, மாத்தறை, அம்பலாங்கொட, ஹிங் குறாக்கொட போன்ற தென்னிலங்கைக் கரையோரப் பகுதிகளிலிருந்து பெரும் பான்மை மக்களைக் கொண்டு வந்து துரித குடியேற்றம் செய்கின்றார்கள்.

அவர்களுக்காக மூன்று ஏக்கர் வயல் காணியும், அரை ஏக்கர் குடியிருப்புக் காணியும் வழங்கி வீடும் அமைத்துக் கொடுத்து வருகின்றார்கள்.

### முஹம்மத் ஹனீபா செய்யதஹம

*(வயது 64)*



நான் அறிந்த வரையில் 90 அல்லது 95 வருட சரித்திரம் இந்தக் கிராமத் திற்கு உண்டு.

எனது தகப்பனார், பாட்டனார் எல்லோரும் இந்த நிலத்தை ஆண்டிருக்கின்றார்கள்.

எனது தகப்பன் இதிலுள்ள மண் மேட்டைப் பற்றிச் சொல்லியிருக்கின்றார். இது யாருடைய வழிபாட்டுத் தலம் எனத்தெரியாது. ஆனால் ஒல்லாந்தர் காலத்திலிருந்து அவர்களது ஆட்சியின்கீழ் இது இருந்திருக்கலாம் என்று அவர்கூற நான் கேட்டிருக்கின்றேன்.

புலிகள் இந்த மண்மேட்டை இடித்துத் தள்ளி சமப்படுத்த முயற் சித்தபோது அதனை ஊர் மக்கள் தடுத்தார்கள். இது புராதன மண்புற்று. இதனை நாம் பாதுகாக்க வேண்டும் என்று கூறினோம். அதனை அவர் களும் ஏற்றுக்கொண்டார்கள்.

இப்பொழுது நாம் பாதுகாத்த மண் புற்றே நமக்கு வினையாகிவிட்டது. அதனை வைத்தே எங்களைக் குடி யெழுப்ப முயற்சிக்கின்றார்கள்.

அது பௌத்த வழிபாட்டுத் தல மென்றிருந்தால் அதனை அவர்கள் வழிபட்டுவிட்டுப் போகட்டும். அந்த வழிபாட்டுத்தலத்தை விஸ்தரிப்பதற்கு அதனைச் சூழவுள்ள 25 ஏக்கருக்கு மேற்பட்ட காணி போதுமானது.

ஆனால், அதற்காக பூர்வீகமாக 90 அல்லது 95 ஆண்டுகளுக்கு முன் பிருந்தே இப்பகுதியில் வாழ்ந்து வரும் எங்களை விரட்ட நினைப்பது அக்கிரமம்.

தங்களது வழிபாட்டு இடம் என்று அவர்கள் கூறுமிடத்தை துப்புரவு செய்து சிரமதானம் செய்து கொடுக்க எங்கள் கிராமத்தவர்கள் எந்நேரமும் தயாராக இருக்கின்றார்கள். நாங்கள் ஒருபோதும் இடைஞ்சலாகவோ, இன வெறுப்புடனோ நடந்துகொள்ளமாட்டோம். எங்களை எமது பூர்வீக இடங்களில் நிம்மதியாக வாழவிடுங்கள்" என்றாரவர்.

திருகோணமலை மாவட்ட முஸ்லிம் களுக்கெதிராக மேற்கொள்ளப்பட்டு வரும் காணி அபகரிப்பின் மற்றொரு அங்கமாக சேருவில பிரதேச செய லாளர் பிரிவிலுள்ள செல்வநகர் நாவற்கேணிக்காடு கிராம சேவை யாளர் பிரிவு சிக்கியிருக்கின்றது.

கிழக்கு மாகாண முதலமைச்சரின் சொந்த மாவட்டத்திலேயே காணி அபகரிப்புக்கள் இடம்பெறுகின்றன.

ஏற்கெனவே குச்சவெளி, புல் மோட்டை, சின்னம்பிள்ளைச்சேனைப் பகுதிகளிலும் முஸ்லிம்களின் காணி கள் பெரும்பான்மை இனத்தவர் களால் அபகரிக்கப்படுவதாக சர்ச்சை எழுந்துள்ள நிலையில் இப்போது நாவற்கேணிக்காடும் சேர்ந்துள்ளது.

(தொடரும்)

நூல் விமர்சனம்

# சுயகற்றலை மேம்படுத்த ஒரு வழிகாட்டி



எம்.நித்தி




ஆசிரியர் எம்.நித்தி தனது மொழி கற்பிக்கும் திறனாலும், பேச்சாற்றலாலும் நன்கு அறியப்பட்ட ஒருவர். "தமிழ் தந்த முத்து" என்னும் நூலினை இவர் ஏலவே எழுதி வெளியிட்டிருந்தார்.

"பல்தேர்வு வினாக்கள் ஐந்நூறு" என்னும் அவரது இப்புதிய நூல் அண்மையில் வெளிவந்துள்ளது. தரம் ஆறு தொடக்கம் தரம் ஒன்பது வரையிலான மாணவர்களின் தமிழ் மொழியாற்றலை மேம்படுத்தும் நோக்கில் இந்நூல் எழுதப்பட்டுள்ளது.

தமிழ் இலக்கணம், இலக்கியம் மற்றும் மொழிவளம் தொடர்பிலான ஐந்நூறு வினாக்களையும் அவற்றுக்கான விடைகளையும் உள்ளடக்கிய இந்நூல் மாணவர்களுக்கு மிகப் பெரியதொரு வரப்பிரசாதம் என்றே கருதலாம். மிகவும் கையடக்கமான வடிவில் நேர்த்தியான அச்சில் வெளிவந்துள்ள இந்நூலின் விலையும் மிகக் குறைவானது.

மாணவர்கள் சுயமாகவே ஆசிரியரின் உதவியின்றித் தமது மொழியாற்றலை வளப்படுத்திக் கொள்வதற்கான வழியினை இந்நூல் ஏற்படுத்தியுள்ளது. இன்னொருவகையில் கூறுவதானால் மாணவர்களின் சுயகற்றலை மேம்படுத்துவதற்கான துணைச் சாதனமாக இந்நூல் வெளிவந்துள்ளமை பாராட்டத் தக்கதொன்றாகும். தமிழ்மொழியின் ஆரோக்கியமான வளர்ச்சி குறித்த ஆசிரியரின் எதிர்பார்ப்புக்களையும் ஏக்கங்களையும் இந்நூல் துலாம்பரமாக எடுத்துக்காட்டுகின்றது.

தமிழ்மொழி மீதான பற்றுணர்வு மற்றும் செம்மையான மொழிப்பிரயோகம் என்பவற்றை புகட்டக்கூடிய பருவம் மாணவப் பருவமாகும். அதிலும் இடை-நிலைக் கல்வி கற்கும் மாணவர்கள் மத்தியில் மேற்படி விடயங்களை இலகுவில் படியவைத்துவிட முடியும். இடைநிலைக் கல்வியில் மாணவர்கள் பெற்றுக்கொள்ளும் மொழியுணர்வும், மொழியறிவும், மொழிவளமுந்தான், அவர்களின் வாழ்நாள் முழுவதும் நின்று நிலைக்கக்கூடியதாக இருக்கும். அந்த வகையில் இடைநிலை மாணவர்களின் தேவை மற்றும் மனப்பக்குவம் என்பன அறிந்து ஏற்றவகையில் இந்நூலினை நித்தி ஆக்கியுள்ளார்.

வெறுமனே பாடத்திட்டத்துடன் தொடர்புற்ற விடயங்களை மட்டும் உள்ளடக்காது அதற்கு அப்பால் தமிழ்மொழி சார்ந்த பரந்த தேடலுக்கும் கற்கைக்கும் வழிகாட்டக் கூடிய விடயங்கள் இந்நூலின்கண் உள்ளன. மிக எளிமையான மொழியில் இந்நூல் அமைந்துள்ளது. பல்தேர்வு வினாக்களின் பல வகைகளிலும் ஆசிரியர் தனது கவனத்தினைச் செலுத்தி இருக்கிறார். வினாக்கள் ஒவ்வொன்றும் மிகத் தெளிவானதாக அமைந்துள்ளது. தமிழ்மொழிசார்ந்த பல விடயங்களையும் மாணவர்கள் அறிந்திருக்க வேண்டும் என்னும் நோக்கில் பரந்த தளத்தில் வினாக்கள் உருவாக்கப்பட்டிருப்பதைக் கண்டுகொள்ள முடியும். விடைகள் கச்சிதமாக ஆராய்ந்து தரப்பட்டுள்ளன. வினாக்களையும் விடைகளையும் உருவாக்குவது என்பது சாதாரணமாக விடயமல்ல. பரந்த வாசிப்பும், மொழியறிவும், மொழிப்பற்றும் கொண்ட ஒருவராலேயே செம்மையான வினாக்களை உருவாக்கிக் கொள்ள முடியும். ஆசிரியரிடம் மேற்படி திறன்கள் ஒருமித்து இருப்பதனாலேயே அவரால் இவ்வாறானதொரு நூலினைத் தரமுடிந்தது.

இந்நூல் இடைநிலை மாணவர்களுக்கு மட்டுமன்றிப் போட்டிப் பரீட்சைகளில் பங்குகொள்ள இருப்போருக்கும் மிகச்சிறந்த வழிகாட்டியாக இருக்கும் என்பதில் ஐயமில்லை. மேலும் தமிழ்மொழி சார்ந்த பொது அறிவுப் போட்டிகளில் பங்குபற்றுவோருக்கும் சிறந்த கைநூலாக இது அமைகின்றது. வினாத்தாள் தயாரிப்பில் ஈடுபடும் ஆசிரியர்களும் இந்நூலிலுள்ள வினாக்களை மாதிரி வின்ாக்களாகக் கொள்ளமுடியும். ஆக, கல்வித்துறையிலுள்ள பல்வேறு பிரிவினருக்கும் பயனளிப்பதாக இந்நூல் அமைந்துள்ளது.

தமிழ்மொழியின் எதிர்கால வளர்ச்சி மற்றும் முன்னேற்றம் குறித்த ஐயுறவான கருத்து நிலைகள் நிலவும் இக் காலத்தில் ஆசிரியர் நித்தியவர்கள் இந்நூலினைக் காலத்தின் தேவையறிந்து வெளிக் கொணர்ந்துள்ளார். தமிழ் மொழி வளர்ச்சி முன்னேற்றம் பற்றி வெறுமனே பேசாது செயல் ரூபத்தில் தனது பங்களிப்பினை ஆசிரியர் வழங்கியுள்ளார். அவரது இம்முயற்சி பாராட்டப்பட வேண்டியது. அவரது இவ்வாறான முயற்சிகள் தொடர்கையில் தமிழ் மாணவர்களும் தமிழ்ச்சமூகமும் பல நன்மைகளை அடையுமென எதிர்பார்க்கலாம்.


**ஈஸ்வரநாதபிள்ளை குமரன்**
சிரேஷ்ட விரிவுரையாளர், தமிழ்த்துறை
**யாழ். பல்கலைக்கழகம்.**



தினம்தோறும் கல்விமுரசு இணைப்பு

தினமுரசு

நாளிதழ்

ரூ.10/=

மட்டுமே

A/L, O/L மற்றும் புலமைப் பரிசில் மாணவர்களுக்கான மாதிரி வினாத்தாள்கள் விடைகளுடன் தினமும் வெளியாகின்றன!

இப்போது நீங்கள் அறிய விரும்பும் அன்றாடச் செய்திகள் அனைத்துக்கும்

- உள்நாட்டு - வெளிநாட்டு - விளையாட்டுச் செய்திகள்
- உள்நாட்டு - உலக - இந்தியச் செய்திகள்
- கனதிமிக்க கட்டுரைகள்
- தேடித் தொகுத்த பல்சுவை அம்சங்கள்
- சினிமா
- நாள் ராசி பலன்
- வேலைவாய்ப்புத் தகவல்கள்
- மருத்துவக் குறிப்புகள்
- பத்திகள் - "பரமர் சங்கமம்", "பதிவிறக்கப் பெட்டகம்"

வடபுலத்தான் எழுதும் நாட்டு நடப்பு குறிப்புகளும் விமர்சனங்களும்

வடபுலத்தான் எழுதுவது...




# கசப்பானதொரு உண்மை



கௌசல்யா ரங்கநாதன்

**போட்ட** பட்ஜெட்டுக்கு மேலேயே இழுத்துக்கொண்டு போய்விட்டிருந்தது எங்கள் மகளின் கலியாணம்.

வீட்டைக் கட்டிப்பார். கலியாணத்தைப் பண்ணிப்பார்னு சும்மாவா சொன்னாங்க" என்று என் நண்பர்கள் ஆறுதல் சொன்னார்கள் எனக்கு.

"நான் அது பத்தியெல்லாம் கவலைப் படலை" என்று எப்படி அவர்களிடம் சொல்வது...?

வாழ்க்கைப்பட்ட இடத்தில் பெண் வசதியாய், மனநிறைவாய் வாழ்ந்தால் அதுபோதும் என்று நினைத்துக் கொண்டிருக்கையில் என் சம்பந்தி அருகில் வந்தார்.

"கலியாணத்தை எந்தக் குறையும் வைக்காம பண்ணிட்டீங்க" என்று புன்முறுவலுடன் சொன்னார்.

"அது என் கடமை."

"ஆனாலும்.."

"என்ன சொல்லுங்க. இன்னும் ஏதாவது நாங்க செய்யணுமா?" என்று நான்கேட்க, "என்ன சம்பந்தி இப்படி கேட்டுட்டீங்க?" என்றார்.

"தவறாயிருந்தா என்னை மன்னிச்சிடுங்க" என்றேன்.

"எங்களை என்ன ஈவிரக்கம் இல்லாதவங்கனு நினைச்சிட்டீங்களா சம்பந்தி" என்றார் கண்ணீருடன்.

"ஐயோ... நான் அப்படி சொல்லி யிருக்கக் கூடாதுதான். தேவையில்லாமல் ஒருத்தர் மனசைப் புண்படுத்திட்டேன்." என்றேன்.

"மறுபடி மறுபடி ஏன் பெரிய பெரிய வார்த்தையெல்லாம். நாம் ஒண்ணுக்குள் ஒண்ணாயிட்டோம். இந்த சம்பிரதாய மன்னிப்பெல்லாம் நமக்குள்ள தேவையா?" என்றவரிடம் மேற்கொண்டு என்ன பேசுவதென்று தெரியவில்லை எனக்கு.

பிறகு அவரே தொடர்ந்தார். "இதபாருங்க நான் ஒண்ணு சொன்னா தப்பா நினைக்கக்கூடாது நீங்க"

"நான் ஏன் உங்களைத் தப்பா நினைக்கிறேன்"

"எங்க ஒரே மகனுக்கு கலியாணம் பண்ண பெண் பார்த்தப்ப உங்க பெண் ஜாதகம் கிடைச்சது... பொருத்தம் அருமையாயிருந்தது. பையனுக்குப் பெண்ணையும்,பெண்ணுக்குப் பையனையும் பிடிச்சுது. நமக்குள்ளயும் ஒரு புரிதல் இருந்திச்சி. நாங்க எதையும் உங்க கிட்டயிருந்து எதிர்பார்க்கலைன்னு பல முறைகள் சொல்லிப் பார்த்தோம். ஆனா நீங்க கேட்கலை.

எங்க பெண்ணுக்கு நாங்க என்ன செய்யணுமோ அதை செய்ய அனுமதிக்கணும். இல்லைனா எங்க மனசு புண்பட்டுப் போகும்னு நீங்க வற்புறுத்தி கேட்டதாலதான் உங்க விருப்பப்படியே செய்யுங்கனுவிட்டோம் மனசேயில்லாம. நீங்க செஞ்ச எந்த சீர்செனத்தி பத்தியும் குற்றம், குறை சொல்லலை. மனநிறைவாதான் ஏத்துகிட்டோம். மத்தவங்க மாதிரியில்லை நாங்க. இந்தக் காலத்தில் "பெண்கள் ஆண்களுக்கு சமமா நல்லா படிக்கிறாங்க. நல்ல வேலைக்குப் போய் கைநிறைய சம்பாதிக்கிறாங்க. ஆட்டோ கூட ஓட்டுறாங்க. அப்பப்பா கிரேட். ஐயா நான் பெண்களை மதிக்கிறவன்" என்றவர் சற்று நிறுத்தி, ஆம் ஐ போரிங் யூ சம்பந்தி?" என்றார்.

"ஆனா இப்ப என்ன சொல்ல வர்ரீங்கனு என் சிற்றறிவுக்கு எட்டலை. நாங்க ஏதாவது தெரிஞ்சோ, தெரியாமலோ தவறு செஞ்சிருந்தா எங்களை மன்னிச்சிரணும். கலியாணத்தில் உங்களைச் சேர்ந்தவங்களை எங்க பக்கத்தில் யாராவது தரக்குறைவா நடத்திட்டாங்களா?"

"நோ... நோ... ஏன் இப்படியெல்லாம் எதை எதையோ எண்ணி மறுகிறீங்க."

"நாங்க எல்லாருமே பூரண திருப்தி யோடதான் இருக்கோம். நான்... நான்... மனப்பூர்வமா ஒரு கேள்வியை உங்க கிட்ட கேட்கப்போறேன். கேள்வி தவறாயிருந்தா என்னை மன்னிச்சிரணும். ஆனா அக்கேள்வியின் உள்அர்த்தம் உங்களுக்கு ஒருநாள் புரியவரும்... அதனால் தயவுபண்ணி நான் கேட்கப் போற கேள்வியைத் தப்பா எண்ணக் கூடாது."

"பரவாயில்லை சொல்லுங்க. ஏன் இவ்வளவு பீடிகை? நீங்க கேட்க நினைச்ச கேள்வியை எங்கிட்ட தாராளமா கேட்கலாம்"

"குட். உங்களுக்கு உங்க ஓபிசில் ஓய்வூதியம் உண்டா?"

"கிடையாது"

"அப்ப ரிடையர்ட்மென்டுக்குப் பிறகு நீங்களும் சம்பந்தியம்மாவும் எப்படி காலத்தை ஓட்டப்போறீங்க?" அவர் இப்படியொரு கேள்வியைக் கேட்டதும் அப்படியே நிலைகுலைந்து போனேன்.

சே.. என்ன மனிதர் இவர். பிள்ளையைப் பெற்றவன். பிள்ளை கைநிறைய சம்பாதிக்கிறான். பார்த்துப் பார்த்து பிள்ளைக்கும் ஒரு கலியாணம் பண்ணியாயிற்று.

என் பெண்ணும் படித்து நல்ல வேலையில் இருப்பது இவர்களுக்குப் பிளஸ் பொயிண்ட்தான்- இதனால் ஏற்பட்ட ஆணவமா?

மெதுவாய் வாழைப்பழத்தில் ஊசியேற்றுவதுபோல இப்படியொரு கேள்வி என்னிடத்தில் அவசியமா?

எனக்கு ஓய்வூதியம் வராவிட்டால் என்ன? எனக்கு உதவி செய் என்று மகள் வீட்டிலா வந்து டேரா போடப் போகிறேன்.

நான் ஏதாவது ஏடாகூடமாய் கேட்க, "அது நிச்சயம் என் பெண் வாழ்க்கையைப் பாதித்துவிடக்கூடாது. கடவுளே இவர்களை மன்னியுங்கள். அதாவது இவர்கள் அறியாமல் செய்த பிழைகளை மன்னித்தருள்க... அதனால் மௌனம் காத்தேன்" வேறு என்ன செய்வது?

அவர்களை அக்கு வேறு, ஆணி வேறாக பிய்த்திருப்பேன்.

எங்களால் முடியாத அளவுக்குப் போகும் காலகட்டத்தில் ஏதாவதொரு முதியோர் காப்பகமா கிடைக்காமல் போய்விடும்.

அப்போதும் நிச்சயமா பெண்ணைக் கொடுத்தவன் வீட்டில் வந்து ஒண்டிக் கொள்ளமாட்டோம்... மனம் இடங் கொடுக்காது.

இருந்தாலும் மனம் அமைதியின்றி தவித்தது.

ஆனால் காலம் போகும்... வார்த்தை கள் நிற்கும் என்பது முதுமொழி... அது மட்டுமா? பேசாத வார்த்தைக்கு நீ எஜமான் என்றொரு கருத்தும் உண்டு...

கடவுளே எங்களை இப்படி நிர்க்கதியாய் படைத்தாய்?

"படைத்தது உன் குற்றமல்லதான்"

நாங்கள் எங்கள் ஏழ்மையை வெளிச்சம்போட்டு காட்ட விரும்பவில்லை...

நாட்டில் எங்களைப் போன்றவர்கள் ஏராளம்... ஏராளம்...

ஒரு பெண்ணைக் கரையேற்றிடவே அரும்பாடுபட்டேனே, அதுவே 50, 60 களில் எப்படியெல்லாம் முன்னோர் அல்லல்பட்டிருப்பார்கள் என்ற எண்ண ஓட்டம் என் மனதில் வந்து போயிற்று.

"என்ன சம்மந்தி... யு ஸீம்டு பி பெர்டர்ப்ட்" என்றார். அவர் கேள்வியின் தாக்கம் புரியாமல்...

நான் அப்போதும் பதில் சொல்லாமல் மழுப்பினேன்.

"விடுங்க... விடுங்க சம்பந்தி.. திக்கற்றவர்களுக்குத் தெய்வமே துணைம்பாங்க" என்று மேலும் சொல்லி மறுபடியும் என் மனப்புண்ணைக் கிளறிவிட்டார்.

கல்லினுள் தேரைக்கும், கருப்பை அண்டத்துயிர்க்கும் படியளக்கிறவன் அந்தப் பரம்பொருள் இல்லையா" என்றேன் என் மன வருத்தத்தை வெளிக் காட்டிக்கொள்ளாமல்.

"ஆமாமாம்.. சரியாச் சொன்னீங்க. விடுங்க. பெத்த பசங்க முதுமை காலத்தில் பெற்றவர் களைக் கவனிக்காட்டி என்ன... எத்தனை, எத்தனை முதியோர் இல்லங்கள் பல்கிப் பெருகிக்கிடக்குது இன்னைக்கு. இது ஏதாவ தொன்றில் அடைக்கலம் கிடைக் காமலா போயிடும் நம்மைப்போல் உள்ளவங்களுக்கு" என்றார்.

மிக மிக சிரமப்பட்டு பதிலே பேசாமல் அமர்ந்தேன் அங்கு.

பிறகும் தவிர்க்க இயலாத் சந்தர்ப் பங்களில் மட்டுமே சம்மந்தி வீட்டுக்குச் சென்று பெண், மாப்பிள்ளையைப் பார்த்துவிட்டு ஒரு சில நொடிகளில் திரும்பிவிடுவதை வழக்கமாக்கிக் கொண்டிருந்தேன். காலப்போக்கில் ஒரு நாள் திடீர் என்று உடல்நிலை சரியில்லாமல் போயிற்று எனக்கும் என் மனைவிக்கும். உதவிக்கும் ஆள் இல்லை.


பக்கத்து வீட்டு மனிதர்கள் உதவி யுடன் ஒரு முதியோர் இல்லத்தில் இடம் கிடைத்தது.

காலத்தை அங்கேயே கழித்து விடுவதுதான் சாலச்சிறந்தது என்று தோன்றவே, அந்த முதியோர் இல்லம் செல்லத் தயாரானோம். எங்களது சொற்ப சாமான் செட்டுகள் எல்லாம் எடுத்துக்கொண்டு, போனிலேயே மகள், மருமகனுக்கு விபரம் சொன்னேன். அவர்களும் ஏன் இப்படியொரு முடிவு என்று எங்களைக் கேட்கவில்லை. ஊரிலும் கேட்கவேயில்லை.

ஒரு சுபயோக, சுபதினத்தில் முதியோர் இல்லத்து வாயிற்கதவைத் திறந்துகொண்டு எங்களுக்கென ஒதுக்கப்பட்டிருந்த இடத்துக்குப் போனால் அங்கு "வெல்கம் சம்பந்தி என்னைக்காவது ஒருநாள் இதுபோல இடத்துக்கு வருவீங்கனு நினைச்சேன். ஆனா இதே இல்லத்துக்கு நீங்களும் வருவீங்கனு நினைக்கல" என்றவர் குலுங்கி, குலுங்கி அழத்தொடங்கினார்.

பிறகு கண்களைத் துடைத்துக் கொண்டு சொன்னார்... "நாம் பெற்ற பிள்ளையோ, பெண்ணையோ குற்றம் குறைசொல்ல முடியாது. அவசரமான உலகம்... இதில் வயசானவங்களை வீட்டில் வச்சு பராமரிக்கணும்னு நாம் நினைக்கக்கூடாது.

யதார்த்தம் புரிஞ்சு, சின்னஞ்சிறிசு களுக்கு இடம்கொடுத்துட்டு நாம் விலகிடணும்... அவங்க நல்லாயிருக் கணும்னு மட்டும் பிரார்த்தனை பண்ணு வோம் என்ன" என்றார் உலகம் போகும் போக்கைப் புரிந்துகொண்டவர் போல.



"ஏண்டி, இந்த சாப்பாட்டை நாய்கூட சாப்பிடாது!"

"மெதுவா பேசுங்க. உங்க அம்மா உள்ளே சாப்பிட்டுக்கிட்டு இருக்காங்க."

"சத்திர சிகிச்சையில ஒரு சின்ன தப்பு நடந்து போச்சு!"

"அப்படியா டாக்டர்?"

"ஆமாம். அதனால்தான் பேஷண்ட் பிழைச்சிருக்கார்!"

# தமிழர் பிரச்சினை

# தவறாக கையாளப்பட்டு, தோல்வியில் முடிந்தது

## இந்திய முன்னாள் அமைச்சர் நட்வர்சிங்



**கடந்த** சிலநாட்களாக அரசியல், மற்றும் ராஜதந்திர மட்டத்தில் மிகுந்த பரபரப்பை ஏற்படுத்திவரும் விடயமாக, இந்தியாவின் முன்னாள் மத்திய அமைச்சர் நட்வர்சிங் எழுதி வெளியாகவுள்ள புத்தகம் உள்ளது. இந்தப் புத்தகத்தில் உள்ள சில பகுதிகள் வெளியாகி பரபரப்பை ஏற்படுத்தியுள்ளன. இந்த புத்தகத்தில் உள்ள சில விடயங்களை நீக்குமாறு சோனியாகாந்தி நட்வர்சிங் இல்லத்துக்கே சென்றுகேட்டுக் கொண்டும், அவர் நீக்க மறுத்துவிட்டதாகவும் தகவல் வெளியாகியுள்ளது.

இந்தியப் படைகளை இலங்கைக்கு அனுப்பிவைக்குமாறு அப்போதைய அதிபர் ஜெயவர்த்தனா கேட்டுக்கொண்டதற்குக் காரணம், தன்து ஆட்சிகவிழ்வதை தவிர்ப்பதற்காகத்தான் என முன்னாள் மத்திய அமைச்சர் நட்வர்சிங் எழுதிய புத்தகத்தில் குறிப்பிட்டுள்ளார்.

இந்திய அரசியலில் மட்டுமின்றி உலக அளவில் பரபரப்பை ஏற்படுத்தவிருக்கும் முன்னாள் மத்திய அமைச்சர் நட்வர் சிங்கின் புத்தகத்திலிருந்து வெளியான மேலும் சில தகவல்கள்:

"1987ம் ஆண்டு ராஜிவ் காந்தி பிரதமராக இருந்தபோது, இலங்கைக்கு இந்திய இராணுவத்தை அனுப்பிவைப்பதற்கான உத்தரவை பிறப்பித்தார். இந்த உத்தரவைப் பிறப்பிப்பதற்குமுன் மத்திய அமைச்சரவையில் இடம்பெற்றுள்ள தனது சகாக்களுடனோ அல்லது உயரதிகாரிகளுடனோ அவர் கலந்தாலோசிக்கவில்லை. தன்னிச்சையாகவே இந்த உத்தரவைப் பிறப்பித்தார்.

அந்த சமயத்தில் ராஜிவ் காந்தி இலங்கைக்குச் சென்றிருந்தார். அப்போதைய இலங்கை அதிபர் ஜெயவர்த்தனே அளித்த வரவேற்பில் கலந்துகொண்ட ராஜிவ், அங்கிருந்தபடியே எந்த ஓர் அதிகாரியின் ஆலோசனையையும் பெறாமல் இந்த அவசரமான, அதிரடியான முடிவை மேற்கொண்டார்.

தனக்கு எதிராக ஆட்சி கவிழ்ப்பு நடக்கக்கூடும் என அஞ்சிய ஜெயவர்த்தனா, இந்திய படைகளை இலங்கைக்கு அனுப்புமாறு கேட்டுக்கொண்டார். அவரது இந்த கோரிக்கைக்கு உடனே சம்மதம் தெரிவித்தார் ராஜிவ் காந்தி. அந்த சமயத்தில் கொழும்பில் இருந்த நானும் (நட்வர்சிங்), பி.வி. நரசிம்மராவும் இலங்கைக்கு இந்தியப் படைகளை அனுப்பும் உத்தரவு ஏற்கனவே பிறப்பிக்கப்பட்டுவிட்டதை அறிந்துகொண்டோம்.

எந்த ஒரு நோக்கமோ அல்லது விவரணமோ தெரிவிக்கப்படாமலேயேதான் இந்திய அமைதிப்படை இலங்கைக்கு அனுப்பிவைக்கப்பட்டது. யாழ்ப்பாண தீபகற்பத்தின் பூகோள அமைப்பு குறித்தோ அல்லது புலிகளின் மறைவிடங்கள் குறித்தோ இந்திய அமைதிப் படைக்கு எதுவும் சொல்லப்படவில்லை.

யாழ்ப்பாணத்தில் இலங்கை ராணுவத்தின் முற்றுகைக்குள்ளான தமிழர்களுக்கு, இந்திய விமானப்படை விமானங்களை அதிரடியாக அனுப்பி உணவுப் பொட்டலங்களை போடும் முடிவையும் ராஜிவ் காந்தி மிகச் சாதாரணமான மற்றும் வீராவேச முறையில் மேற்கொண்டார். இதுதொடர்பாக இலங்கை அதிபர் ஜெயவர்த்தனாவுக்கோ, ஐக்கிய நாடு சபையில் உள்ள இந்தியப் பிரதிநிதிக்கோ தகவல் தெரிவிக்கவேண்டும் என்பதைக்கூட ராஜிவ் காந்தியும், அவரது குழுவினரும் அறிந்திருக்கவில்லை.

ஐ.நா. பாதுகாப்புக் குழுவில் ஓர் உறுப்பினர் என்ற அடிப்படையில் இலங்கை அரசு இதை வைத்து பிரச்சினையை கிளப்பும் என நான் சுட்டிக்காட்டிய பின்னரே, அவர்கள் இது குறித்து இருதரப்புக்கும் முன்கூட்டியே தகவல் தெரிவித்தனர்.

இலங்கை தமிழர் பிரச்சினைக்கு தீர்வு காணும் ராஜிவ் - ஜெயவர்த்தனே ஒப்பந்தம் தொடர்பாக பிரபாகரனை ராஜிவ் காந்தி சந்தித்தார். பின்னர் "பிரபாகரனிடமிருந்து எழுத்துப்பூர்வமான உறுதி எதையும் வாங்கினீர்களா?" என நான் ராஜிவிடம் கேட்டேன்.

நான் இவ்வாறு கேட்டதும் எரிச்சலடைந்த ராஜிவ், "அவர் வார்த்தையால் உறுதி அளித்துள்ளார்" எனக் கூறினார்.

ஆனால் பிரபாகரன், அப்போதைய பிரதமர் ராஜிவ் காந்தி உட்பட அனைவரிடமும் இரட்டை கலப்பு நிலைப்பாட்டையே மேற்கொண்டிருந்தார். தொடக்கத்திலிருந்தே இலங்கை தமிழர் பிரச்சினை தவறாக கையாளப்பட்டு, இறுதியில் முற்றிலும் தோல்வியில் முடிந்தது.

ராஜிவ் காந்தி பிரதமராக இருந்தபோது சீனாவுக்கு மேற்கொண்ட பயணம் வெற்றிகரமாக அமைந்ததாக கூறப்பட்டது. ஆனால், அந்தப் பயணத்தின்போது சீன பிரதமர் உடனான சந்திப்பில் தன்னுடன் சீனாவுக்கான இந்திய தூதரையோ அல்லது வெளியுறவுத் துறை செயலர் கே.பி.எஸ். மேனனையோ உடன் அழைத்துச் செல்ல ராஜிவ் மறந்துவிட்டார். அதன்பின்னர் அவர் தனது தவறை உணர்ந்து மேனனிடம் மன்னிப்புக் கோரினார்.

தனது புகழ் உச்சத்தில் இருந்த முதல் 18 மாத ஆட்சிக் காலத்தில் ராஜிவ்காந்தி 3 பேர் கொண்ட ஒரு குழுவினர்மீது அதீத நம்பிக்கை கொண்டிருந்தார். ஆனால், அவர்கள் அகம்பாவத்துடனும் மூடத்தனமாகவும் செயற்பட்டனர். எந்த விவகாரமாக இருந்தாலும் அவர்கள் என்ன சொல்கிறார்களோ அதை அப்படியே கேட்டு செயற்பட்டார். அந்த மூவரில் இரண்டு பேர் அருண்சிங் மற்றும் அருண் நேரு. இந்த இருவரும் மிகுந்த அதிகாரமுள்ளவர்களாக திகழ்ந்தனர்.

இவை அவரது புத்தகம் பற்றி வெளியான தகவல்கள். நட்வர்சிங் புத்தகத்தால் இன்னும் அடுத்தடுத்து பரபரப்பான தகவல்கள் வெளியாகும் எனத் தெரிகிறது.

(03 ஆம் பக்கத் தொடர்ச்சி)

### நல்லூர் உற்சவம்...

ஆனால், தமிழர் பண்பாட்டின் உயர் விழுமியங்கள், பாரம்பரியங்கள், கலாசார அம்சங்கள், ஆன்மீகப் பெருமைகள் மற்றும் இன்னோரன்ன உயர் சிறப்பம்சங்கள் எந்தளவுக்கு கடைப்பிடிக்கப்படுகின்றன, அதற்கான அரிய வாய்ப்பாக இந்த ஆன்மீக ஒன்றுகூடலை நாம் பயன்படுத்திக் கொள்ளமுடியுமா என்பதைப் பரீட்சித்துப் பார்க்க இந்த வாய்ப்பை ஒரு களமாகப் பயன்படுத்திக் கொள்ளலாம்.

பிரபல எழுத்தாளரும் சமூக சேவையாளருமான வசந்தி ஜெயராஜா இது பற்றி மனம்விட்டுக் கூறும் விடயங்கள் சிந்தனைக்கு விருந்தாய் அமையும். "இன்றுவரை பண்பாட்டுப் பாரியம்பரியங்கள் நல்லூர் கந்தசுவாமி ஆலயச்சூழலில் நிலைத்து நிற்பதை நான் பெருமையுடன் பார்க்கின்றேன்." என்கிறார் அவர்.

ஆயினும், கடந்த 3 தசாப்தங்களாக நிலவிய உள்நாட்டுப் போரின் தாக்கம் எமது உயர் விழுமியங்களையும் சிறப்பம்சங்களையும் பேணிக்காப்பதில் சமீபகால புலம்பெயர்வுகளுக்குப் பின்னர் ஏற்பட்ட அந்நியக் கலாசாரங்கள் ஒரு சவாலாக அமைந்துவிட்டிருப்பதையும் வேதனையுடன் அவர் வெளிப்படுத்துகின்றார்.

ஆனால், இந்த கலாசார மாறுதல்களினூடே இந்த திருத்தலத்தில் பேணப்பட்டு வரும் சிறப்புக்களை குறைத்து மதிப்பிடுவதற்கு ஒருபோதும் வாய்ப்பளித்துவிடக் கூடாது. என்றும் அவர் விலியுறுத்துகின்றார்.

"பண்பாட்டுப் பாரம்பரியங்கள் நீடித்து நிலைத்து நிற்பதற்கு எம்மாலான எல்லா அர்ப்புணிப்புக்களையும் செய்யவேண்டும்.

உள்ளத்து அமைதிக்கும், ஆன்மீக உயர்வுக்கும் அடித்தளமாய் அமைந்திருக்கும் இந்த சந்நிதானத்தின் ஒன்றுகூடல் நமக்குள்ளே ஒரு பிரகடனத்தைச் செய்ய தூண்டவேண்டும் என்றுகூறும் அவர், அப்பொழுதுதான் நல்லூர் ஆலய ஆன்மீகப் பிரவாகம் அகிலமெங்கும் பெருக்கெடுக்கவும் வழியேற்படும் என்றும் நம்பிக்கை வெளியிட்டார்.

புலம்பெயர் தமிழர் இதனூடாக புகழ் படைக்கவேண்டும். அவர்களே இந்த விடயத்தில் அடையாளச் சின்னமாய்த் திகழவேண்டும். குட்டித்தீவான இலங்கையில் மட்டுமல்ல அகிலத்தின் நாலாதிசைகளிலும் ஆன்மீகப் பிரகடனம் செய்யவும் பண்பாடுகளைப் பறைசாற்றவும் புலம்பெயர் உறவுகள் திடசங்கற்பம் கொள்ளவேண்டும்.

மாறாக 'ஆலய சந்நிதானத்திற்குள் நுழையும் நம்மவர்கள் பாரம்பரிய உடைகளை அணிந்து கண்ணியமாக வருக' எனும் பதாதைகள், பிரசுரங்களும் முக்கியத்துவம் பெறுவதற்கு இனிமேலும் இடமளித்துவிடக்கூடாது.

எல்லாவற்றுக்கும் மேலாக ஆடிமாத ஆலயத் திருவிழாவுடன் மட்டும் எமது ஆன்மீகப் பண்புகளும், உயர் சிறப்புக்களும் சந்நிதான எல்லையிருந்து விடைபெற்றுச் செல்வதற்கு அனுமதித்துவிடக் கூடாது" என்றும் அவர் வலியுறுத்துகின்றார்.

இதனை அக்கறையுள்ள அனைவரும் நின்று நிதானித்து சீர்தூக்கிப் பார்க்க வேண்டும். அதற்கு நல்லூர்த் திருவிழாவை நல்ல அரியவாய்ப்பாகப் பய

(17 ஆம் பக்கத் தொடர்)

### தெரிவுக்குழுவே இனப்பிரச்சினைக்கு...

**கேள்வி : இந்த விடயத்தில் புலம்பெயர் அமைப்புகள் எவ்வாறு செயற்படவேண்டும் என்று நீங்கள் எதிர்பார்க்கின்றீர்கள்?**

**பதில் :** புலம்பெயர்ந்த மக்களிடம் நான் அன்பாகக் கேட்டுக்கொள்வது என்னவென்றால், இலங்கை ஒருவன் முறையான நாடு அல்லது தவறான நாடாக சித்தரிக்கப்படுவதை அவர்கள் ஏற்றுக் கொள்ளவேண்டிய தேவையில்லை. அவர்கள் நினைத்தால் என்றும் வரலாம். எனவே புலம்பெயர்ந்து வாழ்கின்ற மக்களிடம் இருக்கின்ற பொருளாதார பலங்கள் அறிவியல்ரீதியான வளங்களை அவர்கள் இங்கு வடக்கு, கிழக்கிலே பிரயோகிக்கவேண்டும். மாறாக வெளிநாடுகளில் இருந்துகொண்டு சத்தம் போட்டுக்கொண்டு கதைத்துக்கொண்டு இருப்பதில் அர்த்தம் இல்லை.

இன்று வடக்கு, கிழக்கில் பொருளாதார கட்டமைப்புகளை ஏற்படுத்துவதற்கு வர்த்தகங்களை மேற்கொள்வதற்கு பல வாய்ப்புகள் இருக்கின்றது. இதில் அவர்கள் முதலீடுகளைச் செய்து எமது மக்களுக்கு வேலைவாய்ப்புகளை வழங்குவார்களாக இருந்தால் யுத்தத்தில் இழந்த பல குறைபாடுகளை நாம் நீக்கக்கூடியதாக இருக்கும். இதனை விடுத்து வீணே குற்றச்சாட்டுக்களை மாத்திரம் பிரயோகிப்பதில் எதுவித நன்மையும் பெறப்போவதில்லை.

**கேள்வி : அபிவிருத்தியில் புலம்பெயர் உறவுகள் எவ்வாறு செயற்பட முடியும்?**

**பதில் :** அபிவிருத்தி என்றரீதியில் இரண்டுவிதமாக இருக்கின்றது. தற்போது வடக்கு, கிழக்கில் அரசாங்கத்தினால் பாரிய அளவிலான கட்டுமானப் பணிகள் இடம்பெற்று ஒரு வகை அபிவிருத்தி மேற்கொள்ளப்பட்டுவருகின்றது. ஆனால் தொழில் வாய்ப்பு என்றரீதியில் அரசாங்கத்தினால் முழுமையாக வழங்கமுடியாத நிலை ஏற்படும். ஏனெனில், அரசாங்கம் என்பது சட்டதிட்டங்களுக்கு அமைய கல்வித்தகைமைகளுக்கு அமைய மாத்திரம்தான் தொழில்வாய்ப்புக்களை வழங்கமுடியும்.

எனவே இந்த யுத்தத்தின் காரணமாக பல இளைஞர்கள் கல்விகற்கின்ற வாய்ப்புக்களை இழந்து தற்போது தவித்துக் கொண்டிருக்கின்றார்கள். இவர்களுக்கு சில தொழிற்சாலைகள், தொழில் மையங்கள் வர்த்தக நிலையங்களை ஆரம்பிக்கின்றபோதுதான் தொழில் வழங்கக்கூடிய நிலை அதிகரிக்கும். இதுபோன்ற பாரிய முதலீடுகளை புலம்பெயர்ந்து வாழ்கின்ற மக்கள் மேற்கொள்வார்களாக இருந்தால் இங்கு பலமாற்றங்களை கொண்டுவரலாம் என நான் எதிர்பார்க்கின்றேன்.

**கேள்வி : மீள்குடியேற்றம் தற்போது எந்த நிலைமையில் இருக்கின்றது?**

**பதில் :** மீள்குடியேற்றத்தைப் பொறுத்தமட்டில் 98 வீதம் முடிவடைந்திருக்கின்றது. இரண்டுவீதமான பிரச்சினைகள் தற்போது இருக்கின்றது. அவற்றை மிகவிரைவாக தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கின்றோம். சம்பூர் போன்ற பிரதேசங்கள் ஏனைய பிரச்சினைகள் தற்போது முடிவடைந்திருக்கின்றது. அந்த பிரதேசங்களில் இருக்கின்ற குறைபாடுகளை இணை அமைச்சுகளின் ஊடாக நிவர்த்தி செய்துவருகின்றோம்.

பொதுவாக மின்சார அமைச்சு, நீர்ப்பாசன அமைச்சு, விவசாய அமைச்சு, வீதி அமைச்சு போன்ற அமைச்சுக்களினூடாக அந்தந்த பணிகள் மேற்கொள்ளப்பட்டுவருகின்றன. இதில் பல முன்னேற்றங்கள் நடந்து கொண்டிருக்கின்றன. இந்திய வீட்டுத் திட்டத்தின்கீழ் 45000 வீடுகள் யாழ்ப்பாணத்தில் கட்டப்படுகின்றது.

இதில் 4000 வீடுகள் தற்போது. மட்டக்களப்பிலும் 1000 வீடுகள் திருகோணமலை மாவட்டத்திலும் கட்டப்பட்டுக் கொண்டிருக்கின்றன. அதுபோல் வீடு இழப்புகளுக்காக 1700 இலட்சம் ரூபா நிதியும் மட்டக்களப்பு மாவட்டத்திற்கு தற்போது வந்திருக்கின்றது. ஒவ்வொரு வீட்டிற்கும் ஒரு இலட்சம் ரூபா வீதம் வழங்கப்படுவதற்கும் திட்டமிட்டிருக்கின்றோம். இதேபோன்று பல திட்டங்களை தற்போது எமது மக்களுக்காக செய்திருக்கின்றோம்.

எனவே மிகவிரைவில் அவர்கள் சிறந்த வாழ்க்கைக்குள் செல்வார்கள் என்பதை எதிர்பார்க்கின்றோம்.

# இலக்கியம்

# அடையாளம்



"யாழ்ப்பாண இராச்சியம்
தாழ் பணியவேண்டும்!"
அந்நியத் தளபதி
ஆணையிட்டான்!

"வாள் ஏந்தும் தமிழர்
தாழ் பணியமாட்டார்!"
யாழ்ப்பாண மன்னன்
சங்கிலியன் சூளுரைத்தான்!

வாள், அம்பு, வில் உங்களிடம்!
துப்பாக்கிகள், பீரங்கிகள்
எங்களிடம்!
அந்நியத் தளபதி
கொக்கரித்தான்!

தாயகப் பற்றும் தளராத
மனதும் எங்களிடம்
சங்கிலியன் தோள்கள்
பூரித்தன!" யாழ்ப்பாணத்தின்
கடைசி மன்னன்
நீயாகத்தான்
இருக்கப்போகிறாய்!"
சங்கிலியன் விழிகள்
சிவந்தன.

கடைசி மன்னன் நானாக
இருக்கலாம் கடைசி வீரன்
நானாக இருக்க முடியாது?

இன்று வித்தாக விழுபவர்கள்
நாளை வீர முத்துக்களாக
எழுவார்கள் எச்சரிக்கிறாயா
மன்னா? போர்த்துக்கேய
தளபதி போய்விட்டான்.

ஒக்ரேபர் 28, 1591
ஆக்கிரமிப்பதற்காக அந்நிய மரக்
கலங்கள் யாழ். கடலேரியில்
அணிவகுந்து வந்தன.

42 மரங்கலங்கள்
250 வள்ளங்கள்
பெரிய பீரங்கிகள்
துப்பாக்கி ஏந்திய
போர்த்துக்கேய சிப்பாய்கள்.

தகவல் வந்தது சங்கிலியன்
கலங்கவில்லை
எதிர்த்து நின்றது மறவர் படை
கொதித்து நின்றது அவர் தம் வீரம்

சரணடைந்தேன் உன்னை
குரல் கேட்டு
நிமிர்ந்தான் சங்கிலி.

போர்த்துக்கேயனுடன் பேரம்
பேசிய காட்டிக் கொடுக்கும்
கயவனல்லவா நீ
என்று கேட்டான்
வந்தவனை நோக்கி.

மன்னித்துக் கொள் மன்னா!
எண்ணித் திருந்தி
உன்னிடம் வந்தேன் என்றான்.

தாழம்பூவுக்குள் தான்
பாம்பு இருக்கும் - வாய்
ஜாலத்துக்குள் விஷம்
இருக்கும் என்பதை மறந்து
சங்கிலி மகிழ்ந்தான்.

வா நண்பா!
ஒன்றாகி நிற்போம்
மார்புறத் தழுவினான்.

தழுவியவன் பிடி இறுகியது
வாஞ்சைப்பிடி என்று
நினைத்தான் சங்கிலி.
வஞ்சகப் பிடி என்று
உணர்ந்து விழித்தபோது
வஞ்சகத்துடன் வந்தவர்கள்
வளைத்துக் கொண்டனர்.

மன்னன் உயிர்
தேவையானால் விலகிப்
போங்கள் சங்கிலியனின்
காவலர்களை வஞ்சகப்படை
எச்சரித்தது.

சங்கிலியன் என்ற அடங்காத
வீரன் சிறைப்பட்டான்.

எதிரியால் நெருங்க முடியாதவன்
தன் இனத்தானால் நொருங்கிப்
போனான். போர்த்துக்கேய
தளபதி சங்கிலியனை சிரச்சேதம்
செய்தான் தலைவணங்காத
உன் தலையை
கொய்ய வருத்தம்தான்.
ஆனால் நீயிருந்தால்
எங்களுக்கு நல்ல
அடிமைகள்
இருக்கமாட்டார்கள்.

மன்னா உன்போன்ற
வீரர்கள் பிறந்த
மண்ணில் எப்படி
பதர்கள் முளைத்தன.

எப்படி மன்னா
ஏமாந்து போனாய்?

சங்கிலி என்றும்
புவிராச பண்டாரம்
பரராசசேகரன்
சாவு முனையிலும்
முறுவலித்தான்!

மக்களே போலிருப்பர்
மக்களே அல்ல!
நம்மவர் போலிருப்பர்
நம்மவர் அல்ல!

கண்ணீரிருக்கும்
காதிருக்கும்
கையிருக்கும், காலிருக்கும்
மூக்கிருக்கும், முகமிருக்கும்
வாயிருக்கும், வயிறிருக்கும்
ஆனால் மனிதரேயல்ல!

அவர்கள்தான் கயவர்கள்!
அடையாளம் காண
தவறியதால்
ஏமாந்து போனேன்.
சங்கிலியன் மட்டுமா
திருவள்ளுவரும் கூறுகிறார்.

**"மக்களே போல்வர் கயவர் அவரன்ன**
**ஒப்பாரி யாங் கண்டது இல்"**

அதிகாரம்: 108 - குறள்: 1071

# சிந்தியா பதில்

**சிந்தியா! அண்மைக் காலமாக ஊடகத்துக்கு எதிராக இடம்பெறும் அடக்குமுறைகளை அடக்குவது யார்?**

**திருமதி எம்.பார்வதி, நல்லூர்.**

திருடனாகப் பார்த்து திருந்தாவிட்டால் திருட்டை ஒழிக்கமுடியாது என்ற பாடல் வரிகள்தான் ஞாபகத்துக்கு வருகின்றது. ஊடகங்களுக்கு எதிராக அடக்குமுறை என்றால் இலங்கையில் ஊடகங்களே இருக்கமுடியாது. தேசிய ஊடகங்களில் அடக்குமுறை பிரயோகிக்கப்படுவதாகக் காணமுடியாது.

யாழ்ப்பாணத்தில் உள்ள ஊடகங்களில் அடக்குமுறை பிரயோகிக்கப்படுவதாக கருத முடியாது. எனக்கென்னவோ ஊடகவியலாளர்களும், ஊடகங்களும் அதீதமாக சுதந்திரத்தோடு தான் இயங்குகின்றன. சொந்த அரசியல் விருப்பு வெறுப்புக்களுக்கு அமையவே ஊடகங்கள் செயற்படுகின்றன. வெளிப்படையாக என்பதைவிடவும் இருட்டடிப்போடு செயற்படுவதற்கே தமக்கு சுதந்திரம் தேவை என்பதே பெரும்பாலான ஊடகவியலாளர்களின் கோரிக்கையாக இருக்கின்றது.

**சிந்தியா! மோடி இலங்கை விஷயத்தில் இரக்கம் காட்டுவாரா?**

**எம்.டொறின், மன்னார்.**

மோடிக்கு ஜெயலலிதா காதல் கடிதங்களையே எழுதுகின்றார் என்று கேலிச் சித்திரம் வெளியிட்டு அது தவறு என்பதையும் இலங்கை அரசு ஏற்றுக்கொண்டுள்ளதை, இந்திய மோடி அரசு திருப்தியோடு ஏற்றுக் கொள்வதாக அறிவித்துள்ளது. அவ் விவகாரத்தை தமிழகத்தில் ஜெயலலிதா தனது அரசியலுக்காக ஒரு எதிர்ப்பு வேலைத் திட்டமாகவே முன்னெடுத்துச் செல்கின்றார்.

தென்னிந்திய சினிமா உலகத்தினரும் "அம்மாவை அவமானப்படுத்திவிட்டார்களே" என்று எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் நடத்தியிருக் கின்றார்கள். தமிழகத்தில் ஆட்சியிலிருக்கும் போது கலைஞருக்காகவும், அம்மாவுக்காகவும் இப்படி சினிமா உலகினர் திரண்டு குரல் கொடுப்பது மிகச்சாதாரணமான விடயமாகும்.

இலங்கை ஜனாதிபதியை பல கோரமான உருவமாக சித்தரித்து பதாதைகளை ஏந்தியவர்கள் இன்று ஒரு கேலிச் சித்திரத்துக்காக எதிர்ப்புக் காட்டுகின்றார்கள். ஒரேயொரு கேலிச்சித்திரம் ஜெயலலிதாவுக்கு மிகப்பெரிய அரசியல் இலாபத்தைக் கொடுத்துள்ளது. அந்தவகையில் ஜெயலலிதா உள்ளூர மகிழ்ச்சியடைவார்.

**அண்மையில் நடந்த அரசியல் ஜோக் ஒன்று கூறுங்கள் சிந்தியா?**

**ஈ.மாதங்கி, கோப்பாய்.**

காரைநகரில் பதினொரு வயது சிறுமிகள் மீதான துஷ்பிரயோகம் தொடர்பான செய்தி குறித்து கருத்துக் கூறிய பிரதமர் ஜெயரட்ண, அந்தச் சிறுமிகளை புலிகளின் வரிப்புலி சீருடை அணிந்த இருவர்தான் அந்தச் சிறுமிகளை காட்டுக்குள் தூக்கிச் சென்றார்களாம் என்று கூறியதுதான். உண்மையில் அது ஜோக்தான். நமக்குத்தான் அதற்கு சிரிப்பதா?, அழுவதா? என்று தெரியவில்லை.

**சிந்தியா! நிம்மதியின் விலை என்ன?**

**மு.அரவிந்தன், கல்மடு.**

எந்தச் சந்தையில் நிம்மதியைக் கண்டீர்களோ அங்குதானே இந்தக் கேள்வியைக் கேட்க வேண்டும். எல்லோருக்கும் கொஞ்சமாவது நிம்மதி தேவையாகத்தான் இருக்கின்றது. நீங்கள் வாங்கிவிட்ட பிறகு எமக்கும் தெரியப்படுத்துங்கள்.

**சிந்தியா! சினிமாவில் எம்.ஜி.ஆர் காலத்திலிருந்து பாடிக்கொண்டுவரும் எஸ்.பி.பாலசுப்பிரமணியம் தற்போது லிங்கா படத்திலும் பாடியிருப்பதாகக் கேள்வி? சினிமாவில் இவரது ஆயுள் இன்னும் எத்தனை ஆண்டு நீடிக்கும்?**

**ஜி.கவி, மாத்தளை.**

இத்தனை ஆண்டுகளில் இப்படி ஒரு கொடூரமான கேள்வியை நான் எதிர்கொண்டதில்லை. எப்படி இப்படியெல்லாம் சிந்திக்கின்றீர்கள்? ஒரு தடவை பி. சுசீலா அவர்களைப் பற்றி பேட்டி ஒன்றில் கவிப்பேரரசு வைரமுத்து அவர்களிடம் கேட்டபோது, எனக்கொரு காலத்தால் அழியாத தோப்பு இருந்தால் அதில் சுசீலா எனும் குயில் பாடிக்கொண்டே இருக்கச் சொல்லி கேட்டுக்கொண்டே இருப்பேன் என்று கூறினார். அப்படி தமிழர்கள் இவ்வுலகில் வாழும் காலம்வரை எஸ்.பி.பாலசுப்பிரமணியம் எனும் அற்புதங்கள் நிறைந்த பாடகர் பாடிக் கொண்டே இருக்கவேண்டும் என்றுதான்



விரும்புகின்றேன். அற்புதமான குரலும், தன்னடக்கமும், பணிவும், கனிவும் நிறைந்த ஒரே பாடகர் அவர் மட்டும்தான். அவரது பாடல்களை எப்போது கேட்டாலும் பரவசமாகவே இருக்கும். உங்களுக்கு அவரது ஆயுள் எத்தனை நாளைக்கு என்ற கேள்வி ஏன்? உதித்தது.

**சிந்தியா! வேலையில்லாத பட்டதாரி தனுஷ்க்கு ஒரு மைல் கல்லாக அமையுமா?**

**எம்.பர்ஹானா, தர்ஹாநகர்.**

நிச்சயமாக. தனுஷின் இருபத்தி ஐந்தாவது படம் என்பதற்காக சாகசம் புரியாமல் அவருக்கு எது பொருந்துமோ அதை சரியாக தெரிவு செய்து நடித்திருக்கின்றார். அவரே கதாநாயகன்,

அவரே நகைச்சுவை நடிகர் என இரண்டு நடிப்பையும் திறமாகச் செய்திருக்கின்றார். சின்னச் சின்ன வார்த்தைகளில் சிரிக்கச் செய்தும், வில்லனோடு மூச்சுவிடாமல் ஒரு நிமிடம், இருபத்துமூன்று விநாடிகள் மூச்சு விடாமல் பேசியும் அசத்தியிருக்கிறார்.

"முன்னமெல்லாம் இல்லாதவன் இருக்கிறவனிடம் கொள்ளையடிச்சான். இப்ப இருக்கிறவன் இல்லாதவனிடம் கொள்ளையடிக்கிறான்" என்று அவர் பேசும் வார்த்தைகள் முகநூலில் பிரபலமாகி வருகின்றது. சமூகத்தில் வேலையில்லாமல் இருக்கும் அத்தனை இளைஞர்களுக்கும் இந்தப் படம் சமர்ப்பணம். இளைஞர்களை, குடும்பத்தை, யுவதிகளை குறிவைத்து தனுஷ் போட்ட கணக்கு வெற்றியைக் கொடுத்துள்ளது. வேலையில்லாத பட்டதாரி, தண்டச்சோறு அல்ல.

**வாழ்க்கைத் தத்துவம் ஒன்று கூறுங்களேன் சிந்தியா?**

**சு.யமுனா, யாழ்ப்பாணம்.**

தத்துவம்... முயற்சி உங்களை எத்தனை தடவைகள் கையை விட்டாலும், நீங்கள் ஒருபோதும் முயற்சியை கைவிட்டு விடாதீர்கள்... இது எனது தத்துவம் அல்ல எடிசனின் தத்துவம்...

**சிந்தியா! நண்பனை நம்பலாமா?**

**ப.கவின், கிளிநொச்சி.**

சந்தேகப்படும் நண்பனை நம்பாதீர்கள். நல்ல நண்பனை சந்தேகப்படாதீர்கள்.

**பாகிஸ்தான் அணியுடனான டெஸ்ட் தொடருடன் ஓய்வு பெறப்போகும் மஹேலவைப் பற்றி கொஞ்சம் குறிப்பிடுங்களேன் சிந்தியா?**

**எவ்.இஷான், திருகோணமலை.**

ஆம். மஹேலவின் ஓய்வு நிச்சயம் இலங்கை அணிக்கு பேரிழப்புத்தான். தற்போதைக்கு அவ்விடத்தை நிரப்புவார்களென யாரையும் நம்ப முடியவில்லை.

தினேஸ் சந்திமல்மீது ஓர் எதிர்பார்ப்பு இருந்தது. ஆனால் தற்போது அணியில் இடம்பிடிப்பதற்கே அவர் திண்டாடிவருகிறார். எனவே சந்திமல் கடுமையாகப் போராட வேண்டியுள்ளது.

1997ஆம் ஆண்டு இந்தியாவிற்கு எதிராக அறிமுகமாகி 147 டெஸ்ட் போட்டிகளில் விளையாடி 11671 ஓட்டங்களை குவித்த மஹேலவின் ஓய்வு, இலங்கைக்கு எதிராக விளையாட வருகின்ற அணிகளுக்கு நிச்சயம் தெம்பைக் கொடுக்கும் என்பதை அடித்துச் சொல்லலாம்.

# காதிலை பூ கந்தசாமி

" நான் சொல்வதெல்லாம் பொய் பொய்யைத் தவிர வேறொன்றுமில்லை. "

**வணக்கமுங்கோ!**

**போன வாரம் நம்முடைய வடமாகாண முதலமைச்சர் ஒரு பகிடியை சிரிக்காமல் விட்டிருக்கிறாருங்கோ. அதாவது ஐ.நா. விசாரணைக்குழு சாட்சியமளிக்குமாறு அழைப்பு விடுத்தால் அவரும் சாட்சியம் வழங்கத் தயாராமுங்கோ.**

யுத்த காலத்தில் களத்தில என்ன நடந்தது என்பதைத் தான் கண்ணால காணாதுவிட்டாலும் அழைத்தால் சாட்சியமளிக்கத் தயாராமுங்கோ.

அந்தக் காலத்தில விக்கி, தனது சிங்கள சகாக்களோடை யுத்தம் என்ன கட்டத்திலை போகுது எண்டு விடுப்புக் கேட்டுத் தெரிந்து கொள்ளுறதிலையும் ஆன்மீக சொற்பொழிவுகளை மனப் பாடம் செய்வதிலையும் ஈடுபட்டுக் கொண்டிருந்தாருங்கோ.

சந்தேகத்தின் பேரிலையும், குற்றத் தின் பேரிலையும் கொண்டுவந்து நிறுத்தப்பட்ட பெடியளுக்கு மற்ற வர்களைவிடவும் அதிக தண்டனை வழங்கி தன்னை நேர்மையான நீதி-வான் எண்டு காட்டிக் கொள்வதிலை யும் கவனம் செலுத்தினாருங்கோ.

யுத்தம் போர்க்குற்றங்களை செய்து விடும் என்றோ, யுத்தம் மனித உரிமை மீறல்களை செய்யத் தூண்டிவிடும் என்றோ, யுத்தம் ஈடுசெய்ய முடியாத இழப்புக்களை மக்களுக்கு கொடுத்து விடும் என்றோ, யுத்தம் தாங்காத அழிவுகளை ஏற்படுத்திவிடும் என்றோ விக்கி ஒருபோதும் வாயே திறக்கவே இல்லையே ஏன்?

இதுவே அவரைச் சுற்றிய உண்மை யாக இருக்கும்போது, அவர் கூப் பிட்டால் சாட்சியமளிக்கின்றேன் எண்டு சொல்வதைக் கேட்க சிரிப்பாகத்தானே இருக்கும்.

அப்புடியெண்டால் முன்னாள் நீதிபதி ஒருவர் வெளிப்படையாக அவர் கேள்விப்பட்டதையும், தன்னைச் சுற்றியிருப்பவர்களின் விருப்பு, வெறுப்புக் கலந்த அறிக்கைகளையும் மட்டும் படிச்சுப்போட்டு பொய் சொல்லப்போறாருங்கோ.

எனக்கென்னவோ இவர் சாட்சி சொல்லப்போறன் எண்டால், அதற்கு அரசாங்கம் ஏதாவது சொல்லும். பிறகு இவர் ஒரு வீரக்கதையை விடுவார். இப்படியே ஒண்டுமில்லாததைக் கொண்டே ஒரு நாடகத்தை நடத்தி முடிச்சுப் போடலாம் எண்டு ஒரு திட்ட மாகவும் இருக்கலாமுங்கோ.

எப்புடி பார்த்தீங்களோ, தமிழர்கள் செத்தாலும் அரசியல் இலாபம் தானுங்கோ, இருந்தாலும் இலாபம் தானுங்கோ. விக்கி என்ன செய்ய வேணுமெண்டால் உண்மையில யுத்தத் தால பாதிப்புக்களை அனுபவித்தவர் களை பாதுகாப்பாக சாட்சியமளிக்க ஏற்பாடு செய்து கொடுக்கவேணுமுங்கோ.

விக்கிக்கு கொடுத்த பொறுப்புக் களையே சரியாச் செய்ய ஏலாமல் அழுதுகொண்டிருக்கிறார். இதில சாட்சியமளிக்கப் போனாலும் அங்கையும் போய் ஆளுநர் காலைப்பிடிச்சு இழுக்கிறார், மத்திய அரசாங்கம் மார்பிலேயே மிதிக்குது, அதிகாரிகள் அவையின்ர இஷ்டத்துக்கு நடக்கினம் எண்டுதான் சொல்லுவாரே தவிர வேற என்ன தெரியும் எண்டு வாத்தியார் சொல்லிக் கொண்டு திரியிறாருங்கோ.

எனக்கென்னவோ வாத்தியார் சொல்லுமாப்போலை இல்லையுங்கோ. விக்கிக்கு இப்ப பொலிரிக்ஸ் நல்லாவே வருகுதுங்கோ. இல்லாட்டில் பொய்தான் சொல்லவேணும் எண்டு தெரிஞ்சும் சாட்சியமளிக்கத் தயாரெண்டு சொல்லுவாறோ.

இதே கதையை நம்முடைய கண் உருட்டி சம்மந்தன் ஐயா சாட்சியம் சொல்லத் தயாரெண்டு சொல்லி யிருந்தால் அதை வரவேற்கலாம். ஆனால் சும்மா சொல்லக் கூடாதுங்கோ. சம்மந்தர் கூட்டுக்குள்ளே நல்லா பொலிரிக்ஸ் பண்ணுறாருங்கோ. அவர் பின்னுக்கு நிண்டுகொண்டு நேற்று பொலிரிக்ஸில தொப்புக்கட்டீர் எண்டு குதிச்ச விக்கியை புஸ் பண்ணி விடுவாராமுங்கோ.

விக்கியும் சம்மந்தருடைய கயிறை விழுங்கிக் கொண்டு சாட்சியமளிக்கப் போறன், சாதாரணமாக நிற்கப் போறேன் எண்டு மேடைகளிலை முழங்குவாராமுங்கோ. விக்கி ஐ.நா. விசாரணைக்குழுவுக்கு சாட்சியமளிப்பாராம், மாவைக் குருப் இலங்கை அரசின் விசாரணைக்குழுவுக்கு சாட்சியமளிக்கத் தயாராமுங்கோ.

இவை சொல்லுறதைப் பார்த்தால் மிதவாதம் பேசினாலும் அவனையும் சுட, இவனையும் சுடு எண்டு காட்டிக் கொடுத்து கொலை செய்த குற்ற உணர்வு மேல் எழுந்து இவையளை தூங்கவிடாமல் தொல்லை செய்யுதாக்கும் இதெல்லாம் மனச்சாட்சி உள்ளவைக்குத் தானே எண்டு கேட்டுப் போடாதேங்கோ.

விக்கியருக்கு நல்ல வாய்க்குர்த்த முங்கோ. சாட்சியமளிக்கப்போவதாகக் கூறினார். இந்தா பாருங்கோ, தேசப்பற் றுள்ள தேசிய இயக்கம், அமைச்சர் வாசுதேவ நாணயக்கார ஆகியோர் விக்கியின்ர கருத்தை எதிர்த்து அல்லது விமர்சிச்சு தெற்கில அறிக்கைகளை விடுவதற்கு ஆரம்பிச்சிட்டினமுங்கோ.

இனி என்ன மாறிமாறி அறிக்கைவிட்டு அவர் அவர்களுடைய பொலிரிக்ஸை நடத்துவினமுங்கோ. ஊடகங்களும் ஒன்னுக்கு ரெண்டாக செய்திகள் போட்டு பிசினஸ் பண்ணுவினமுங்கோ. உது தானுங்கோ இண்டையான் பொலிரிக்ஸ்.

**"யாவும் கலப்படமற்ற கற்பனை"**

# இந்தவாரம் உங்கள் பலன்

07.08.2014 தொடக்கம் 13.08.2014 வரை)

## மேடம்

நீண்டநாட்களாக நடைபெற்று வந்த சொத்து சம்பந்தமான வழக்கு விசயங்களில் காவல் துறையினர்கள் உதவிகளால் திரும்பக் கிடைக்கும். ரேஸ் லோட்டரி போன்றவற்றின் மூலமாக பணம் மற்றும் பொருட்களை எமாற்றம் அடை யாமல் இருக்கவும் நீண்டகாலமாக வராத கடன்கொடுத்து இருந்த பணங்கள் மற்றும் பொருட்கள் நண்பர்களின் உதவியால் திரும்பக் கைக்கு வந்துசேரும். திருமண விஷயங்கள் போன்ற சுபகாரிய நிகழ்ச்சிகளைச் சற்று தள்ளிப்போடுவது நல்லதாகும். விவ சாயம் செய்பவர்களுக்கு சுமாரான விளைச்சல் உண்டாம். காதல் சம்பந்தமாக நல்ல சேதி வந்துசேரும். பொதுவாக இது ஒரு நற்பலன் தரும் வாரமாகும்.

## இடபம்

ஒரு சிலருக்கு தாய்வழியிலான சொத்துக்களில் இருந்துவந்த பிரச்சினை கள் தீர்ந்து சொத்துக்கள் கிடைக்கும். மற்றவர் களை நம்பி பணம் மற்றும் பொருட்களைக் கடன் கொடுத்து ஏமாற்றம் அடையவேண்டாம். தாயின் உடல்நிலையில் இதுநாள் வரையில் இருந்து வந்துள்ள பாதிப்புகள் குறைந்து நிம்மதி அடைவீர்கள். கணவன், மனைவி உறவுகள் சுமாராகக் காணப்படும். மற்றவர்களின் விச யங்களில் அநாவசியமாகத் தலையிட்டு வீண் சிக்கலில் மாட்டிக்கொண்டு மனநிம்மதியை இழக்கவேண்டாம். பூர்வீகச் சொத்துக்களில் இருந்துவந்துள்ள பிரச்சினைகள் பெரிய மனிதர் களின் தலையிடுதலால் திரும்பக் கிடைக்கும். விவசாயிகள் நன்மை அடைவார்கள்.

## மிதுனம்

உடல்நிலையில் உஷ்ணம், காய்ச்சல் போன்ற தொல்லைகள் வந்துபோகும். குலதெய்வ ஆலய வழிபாடுகளுக்கான முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். விளையாட்டுத் துறைகளைச் சார்ந்தவர்களுக்குப் பரிசு மற்றும் பாராட்டுதல்கள் கிடைக்க வாய்ப்புகள் உள்ளது. நாட்பட்ட பழைய கடன்கள் அடைபடும். விபரீத மான எண்ணங்களால் வீண் பழிச்சொல்லுக்கு ஆளாகநேரிடலாம். நீண்டகாலமாகத் திருமணம் ஆகாதவர்களுக்கு உறவினர்களின் ஆதரவுகளால் திருமணம் நடைபெறும். குடும்பத்தில் வீணாக ஏற்பட்டுவந்த மருத்துவச் செலவுகள் குறைந்து காணப்படும். புதிய ஆடை ஆபரணங்களை வாங்கு வதைச் சற்று தள்ளிப்போடவும். சமுதாய வளர்ச்சி களுக்கான விசயங்களில் ஈடுபட்டு மனமகிழ்ச்சியும் பரிசு மற்றும் பாராட்டுக்களையும் பெறுவீர்கள்.

## கடகம்

நீண்டகாலமாக உத்தியோகம் இல்லாத படித்த இளைஞர்களுக்குப் புதிய உத்தியோகம் கிடைக்க வாய்ப்புகள் உள்ளது. பொருளாதாரத்தில் இருந்துவந்துள்ள நெருக்கடிகள் சற்றுக்குறைந்து காணப்படுவதன் மூலம் நிம்மதி அடையலாம். குடும்பத்தில் நடக்க இருக்கும் சுபகாரிய நிகழ்ச்சிகளைச் சற்று தள்ளிப்போடுவது சிறந்ததாகும். அண்டை அயல் வீட்டுக்காரர்களுடன் வீண் பிரச்சினைகள் வர இருப்பதால் எச்சரிக்கையுடன் பேசிப் பழகுதல் நல்லதாகும். உற்றார் மற்றும் உறவினர்களின் எதிர்பாராத திடீர் வரவுகளால் பொருட்செலவுகள் ஏற்பட்டாலும் அவர்களால் ஆதாயங்கள் அடைவீர்கள். உற்றார் உறவினர்கள் மற்றும் நண்பர்களிடம் இருந்து எதிர்பார்த்த ஆதாயம் கிடைக்க இன்னும் சற்றுக் காலதாமதம் ஆகலாம்.

## சிங்கம்

குலதெய்வ ஆலய வழிபாடு-களைச் செய்துவர முயற்சிப்பீர்கள்.. குழந்தைகள் உயரமான இடங்களில் கவனமுடன் ஏறி இறங்குவது நல்லது. உத்தியோகத் துறையினர்கள் மேலதிகாரிகளுடன் மனக்கசப்புகள் ஏற்பட்டு பணி இடமாற்றம் ஏற்பட வாய்ப்பு இருப்பதால் முன்கோபத்தை தவிர்த்துப் பணியாற்றுதல் சிறந்ததாகும். வெளிநாடு சென்றுவருதல் போன்ற முயற்சிகளில் எதிர்பார்த்து இருந்த நபர்களின் ஆதரவுகள் கிடைக்கும். விவசாயம் செய்பவர்களுக்குப் புதிய முறை விவசாயங்கள்மூலம் நல்ல இலா பம் அடைவார்கள். வடக்குத் திசையில் இருந்து நல்ல செய்திகள் கிடைக்கும். பழைய கடன்களை அடைத்து விட்டுப் புதிய கடன் வாங்குவதற்காக முயற்சிப்பீர்கள்.

## கன்னி

உடல்நிலையில் கண், காதுகளில் மிக கவனமாய் இருப்பது. நல்லது. புதிய நண்பர்களின் சேர்க்கையைத் தவிர்ப்பதால் வீண் பிரச்சினைகளில் இருந்து விடுபடலாம். குழந்தைகளின் மனமகிழ்ச்சி களுக்காக நீண்டதூரப் பயணங்களை மேற் கொள்வீர்கள். தாயின் உடல்நிலையில் மிக கவனமுடன் இருப்பது நல்லது. உத்தியோகத் துறையினருக்கு இடமாற்றங்கள் ஏற்பட வாய்ப்புகள் உள்ளது. பிரிந்துபோன கணவன் - மனைவி திரும்ப ஒன்றுசேருவார்கள். பிள்ளைகளின் உடல்நிலையில் கவனமுடன் இருப்பது நல்வது. செய்யாத குற்றங்களுக்கு அவப்பெயர் சேர வாய்ப்பு உள்ளதால் கவனமுடன் இருக்கவும். வீடு, வாகனங்களைப் பார்ப்பதன்மூலம் பொருட்செலவுகள் வந்து சேரலாம்.

## துலாம்

மாணவர்கள் கல்வியில் மிகுந்த எச்சரிக்கையுடன் பயின்றுவருவது நல்லது. வெளிநாட்டில் வசிப்பவர்கள் தாய்நாடு சென்று திரும்பிவருவதற்கான வாய்ப்புகள் உள்ளது. விட்டுப்போன பழைய பிரச்சினைகள் மீண்டும் தலைதூக்கும். பிள்ளைகளால் தொல்லைகள் ஏற்பட்டாலும் அவர்களால் பெயர், புகழ் போன்றவை கிடைக்கும். புதிய கடன் வாங்கிப் பழைய கடன்களை அடைப்பதற்கு முயற்சிப்பீர்கள். பொதுநலத் தொண்டுகளில் ஈடு படுவதிலும் மிகுந்த கவனம் செலுத்துவீர்கள். தேவையற்ற புதிய நண்பர்களின் சேர்க்கையால் வீண் பிரச்சினைகள்வர இருப்பதால் எச்சரிக்கை யுடன் இருப்பது நல்லது. பொதுவாக இது ஒரு நற்பலன் தரும் வாரமாகும்.

## விருச்சிகம்

பிரிந்துபோன கணவன் - மனைவி திரும்ப ஒன்றுசேருவதற்கான வாய்ப்பு உள்ளது. சொத்து சம்பந்தமான வழக்கு விசயங்களுக்காகப் புதிய வழக்குரைஞர்களை நாடுவீர்கள். நண்பர்களின் வீட்டுச் சுபகாரிய நிகழ்ச்சிகளில் கலந்துகொள்வதற்காக நீண்டதூரப் பயணங்களை மேற்கொள்ளுவீர்கள். பொருளா தாரம் சுமாராகக் காணப்படும். வீடு மற்றும் வாகனங்களைப் பழுதுபார்ப்பதன் மூலம் பொருட்செலவுகள் வந்துசேரக்கூடிய காலமா-கும். புதிய ஆடை மற்றும் ஆபரணங்களை வாங்குவீர்கள். மனைவி வழியிலான சொந்த பந்தங்களுடன் சிற்சில கருத்து வேறுபாடுகள் வந்துபோகலாம். நாட்பட்ட தீராத நோய்கள் தீருவதற்காக புதிய மருத்துவர்களின் உதவி களை நாடுவதன்மூலம் நோய் தீரும்.

## தனுசு

குடும்பத்தில் சுபகாரிய நிகழ்ச்சி களுக்காக புதிய கடன்வாங்க முயற்சிப்பீர் கள். திருமணம் ஆகாதவர்களுக்கு இது வரையில் இருந்துவந்த தடைகள் நீங்கித் திரு மணம் நடைபெற வாய்ப்பு உள்ளது. படித்த வேலையில்லாத இளைஞர்களுக்குப் புதிய வேலைவாய்ப்புகள் வந்துசேரும். உத்தியோகத் துறையினர்களுக்கு பணி இடநிரந்தரமும் சம்பள உயர்வுகளும் உண்டாகும். மற்றவர்களை நம்பிப் பணம் மற்றும். பொருட்களை கடன் கொடுப்பதைத் தவிர்க்கவும். வங்கிகளில் பணியாற்றுபவர்களுக்கு பதவி உயர்வுடன் கூடிய இடமாற்றம் ஏற்பட வாய்ப்பு உள்ளது. அலுவலகங்கள் மற்றும் வீடுகளை இடமாற்றம் செய்யப்போட்டிருந்த திட்டங்களில் சற்று பின்னடைவு உண்டாகலாம்.

## மகரம்

வரவேண்டிய பணம் கிடைக்க இன்னும் சற்று காலதாமதம் ஆகலாம். தந்தை - மகன் உறவுகளில் இருந்துவந்துள்ள மனக்கசப்புகள் குறைந்து ஒற்றுமையுடன் காணப்படுவார்கள். உடல்நிலையில் வாயு வாத சம்பந்தமான தொல்லைகள் வந்துபோகும். வேலை இல்லாதவர்களுக்கு புதிய வேலை வாய்ப்புகளுக்காக பணம், பொருட்களைக் கொடுத்து ஏமாற்றம் அடையவேண்டாம். குழந்தைகளின் மனமகிழ்ச்சிக்காக நீண்டதூர உல்லாசப் பயணங்களை மேற்கொள்ளுவீர்கள். புதிய வீடு, நிலம் போன்றவற்றை விலைக்கு வாங்கப்போட்ட திட்டம் நிறைவேறும் காலமா-கும். அயலவர்களுடன் வீண் வாக்குவாதங்களில் ஈடுபடாதீர்கள். பிரயாணங்களின்போது கவனமாக இருக்கவும்.

## கும்பம்

வீடு மற்றும் வாகனங்களைப் புதிதாய் வாங்குவதற்கான திட்டங்களில் சற்று பின்னடைவுகள் ஏற்படும். எதிர்பாராத விதமாக நண்பர்களால் சில ஆதாயங்களும் மனமகிழ்ச்சியும் அடைவீர்கள். வரவேண்டிய மனைவி வழிச்சொத்துக்களும் மற்றும் பணமும் கை வந்துசேரும் காலமாகும். தந்தை - மகன் உறவுகளில் காரணமற்ற முன்கோபத்தால் பிரச்சினைகள் உருவாகலாம். கணவன் - மனைவி உறவுகளில் இருந்துவந்த நீண்டகால மனக்கசப்புகள் தீர்ந்து ஒற்றுமையுடன் காணப்படுவார்கள். காதலர்களுக்கு நல்ல செய்தி வந்துசேரும். விவசாயிகளுக்கு விளைச்சல் ஏற்படாது. மாணவர்களுக்கு கல்வியில் நல்ல முன்னேற்றம் ஏற்படும். பழைய நண்பர்களை சந்தித்துப் பேசுவீர்கள். நற்பலன் தரும் வாரமாகும்.

## மீனம்

நாட்பட்ட பழைய பிரச்சினைகள் மீண்டும் தலைதூக்கும். மாணவர்கள் கல்வியில் மிகுந்த கவனமுடன் பயின்றுவருதல் நல்லது. தீராத நோய்கள் தீருவதற்காக நீண்டதூர பயணங்களை மேற்கொள்ளுவீர்கள். வேலையாட்களால் சிற்சில மனநிம்மதி இன்மை யும் பொருட்செலவுகளும் வந்துசேரும். வேண் டாத விசயங்களில் தலையிட்டு மனநிம்மதி இழக்காதிருங்கள். நண்பர்களால் வீண் பொருட் செலவுகள் வந்துசேரலாம். தந்தைவழியிலான சொத்துக்கள் கைவந்துசேர வாய்ப்பு உள்ளது. கணவன் - மனைவி உறவுகளில் மிகுந்த எச்சரிக்கையுடன் நடந்துகொள்வது நல்லது. நீண்டகாலமாக விடுபட்டுப்போன பழைய நண்பங்கள் மற்றும் உறவினர்களுடன் புதிய தொடர்புகள். ஏற்படலாம். பொதுவாக இது ஒரு சுமாரான நற்பலன் தரும் வாரமாகும்.

# முதன் முதலில் பறந்தவர்கள்

வரலாறு படைத்த வல்லுநர்கள்





சின்னப் பையன்களாக இருந்தபோது, இறந்த போன மாடு, குதிரை ஆகியவற்றின் எலும்பு களைப் பொறுக்கிச் சேகரித்து, உரம் தயாரிக்கும் தொழிற்சாலையில் கொண்டு கொடுத்து காசு சம்பாதித்தார்கள். ஓட்டை உடைசல் இரும்புச் சாமான்களைச் சேகரித்து, பழைய சாமான்களை விற்கும் 'காயலான் கடைக்காரர்'களிடம் கொடுத்துப் பணம் பெற்றார்கள். இந்த இலட்சணத்தில் ஒரு அச்சகத்தை நிறுவி ஒரு தினசரிப் பத்திரிகை யையும் நடத்தினார்கள்.

உழைப்பு - ஆர்வம் - விடாமுயற்சி! பத்திரி கையில் நஷ்டம் ஏற்பட்டது. இழுத்து மூடினார்கள். எல்லாக் குழந்தைகளையும் போலவே இவர்களுக்கும் பட்டம் விடுவதில் ஏக ஆர்வம். பல வண்ணக் காகிதங்களில் விதவிதமான பட்டங்கள் செய்து பறக்கவிட்டுக் குதூகலப்படுவார்கள். ஒருசமயம் தம்பி, "அண்ணா இந்தப் பட்டத்தைப்போல ஆகாயத்தில் பறக்கவேண்டுமென்று உனக்கு ஆசையாக இல்லையா?" என்றுகேட்டான்.


"ஆசைதான், ஆனால் என்னைத் தாங்கிக்கொண்டு பறக்கும் அளவுக்குப் பட்டம் பெரிதாக இருக்கவேண்டுமே!" என்றான் அண்ணா. அந்தக் காலத்தில் எல்லாருமே பறவைகளைப் போலத் தாங்களும் ஆகாயத்தில் பறக்கவேண்டும் என்று ஆசைப்பட்டவர்கள்தான்.

ஆகாயத்தில் பறக்கவேண்டும் என்று ஆசைப்பட்ட இந்தச் சகோதரர்கள் பெரியவர்களானதும் ஏதாவது தொழில் செய்து பிழைக்கத் தீர்மானித்தார்கள். (தொடரும்)

Regd. as a News paper at the G.P.O.(QD/86/NEWS/2012)

# கடமை வீரன்





17 தடவைகள் குண்டுகளை செயலிழக்கச் செய்து பொதுமக்கள் பலரினதும் தன் சக வீரர்களினதும் உயிர்களை காப்பாற்றிய ஒரு இராணுவ வீரருக்கு விருது வழங்கி கௌரவிக்கப்பட்டுள்ளது. இவர் இவ்வாறு சாதனை புரிந்தது ஆப்கானிஸ்தானில் ஹெல்மன்ட் மாகாணத்தில் ஆகும்.

இந்த விருதுக்கு சொந்தக்காரராக 38 வயதான ரெஜிமென்ரல் சாஜன்ட் மேஜர் பற்றிக் ஹைட் தெரிவு செய்யப்பட்டுள்ளார். இவர் கடந்த காலங்களில் குண்டுகளை செயலிழக்க செய்யும்போது சிறு காயங்களுடன் தப்பியமை அவர் செய்த புண்ணியம் என்று சொல்லிக்கொள்ளலாம்.

ஆப்கானிஸ்தானில் நித்தம் உள்ள ஒரு ஆபத்து வீதியோர குண்டுகள் ஆகும். இக்குண்டுகள் காலநேரம் இன்றி வயது வரம்பு இன்றி பலரை பழிவாங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது. இவர் புரிந்த சாகச செயலுக்கு தற்போது பிரித்தானியாவில் பிரித்தானிய முடிக்குரிய இளவரசர் சாள்ஸ் அவர்களின் கையினால் வீர விருது வழங்கி கௌரவிக்கப்பட்டுள்ளார். ஆப்கானில் இடம்பெற்ற சம்பவம் ஒன்றில் தனது இராணுவத்தளபதியையும் காப்பாற்றி பெருமை சேர்த்தவர் என்பதும் குறிப்பிடத்தக்கது. அனைத்தையும்விட இவர் இரு குழந்தைகளின் தந்தை என்பது குறிப்பிடத்தக்கது.

# யுத்தம் தந்த மிச்சம்

பாலஸ்தீனம் மீது இஸ்ரேல் கடந்த சில நாட்களாக பயங்கர தாக்குதலை நடத்திவருகிறது. இந்நிலையில் அண்மையில் நடத்தப்பட்ட அதிபயங்கர தாக்குதலில் நூற்றுக்கணக்கான பாலஸ்தீன மக்கள் கொல்லப்பட்டனர். இதில் நிறை மாத கர்ப்பிணி ஒருவரும் வெடிகுண்டுத் தாக்குதலுக்கு பலியானார். ஆனால் அவர் வயிற்றில் இருந்த குழந்தையை மருத்துவர்கள் அதிசயமாக காப்பாற்றியுள்ளனர்.

இறந்தவர்களின் பிணங்களை சவக்கிடங்கில் போட்டு வைத்திருந்தபோது, அந்தப் பெண்ணின் வயிறு அசைவதைப் பார்த்தார். உடனடியாக அந்த உடல் மருத்துவமனைக்கு எடுத்துச் செல்லப்பட்டுள்ளது.

அப்போது அந்த பெண்ணின் வயிற்றில் உள்ள குழந்தை உயிருடன் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டது. உடனடியாக சிசேரியன்மூலம் அந்த குழந்தையை வெளியே எடுத்து இன்குபேட்டரில் வைத்து பாதுகாத்துவருகின்றனர்.

மருத்துவர்கள் இந்த அதிசய குழந்தைக்கு Shayma Shiekh al-Eid என்று பெயர் வைத்துள்ளனர்.

தற்போது அந்த குழந்தை மிகவும் ஆரோக்கியமாக இருப்பதாக மருத்துவர்கள் கூறியுள்ளனர். இந்த குழந்தையை தத்தெடுக்க உலகெங்கிலும் இருந்தும் விருப்பம் தெரிவித்து நூற்றுக்கணக்கானோர் மருத்துவமனையை அணுகியிருப்பதாக செய்திகள் தெரிவிக்கின்றன.





# மிகப் பெரிய திருமணம்





ஒரு மண்டபத்தில் ஒரு ஜோடிக்கு நடைபெறுவது நாமெல்லாம் அடிக்கடி காணுகின்ற சமாச்சாரம்.


சில ஆலயங்களில் 4 அல்லது 5 ஜோடிகளுக்கு திருமணம் நடைபெறுவதை எப்போதாவது பார்க்கக் கூடியதாக இருக்கும்.

நமது அயல்நாடான இந்தியாவின் தமிழகத்தில் அரசியல் தலைவர்கள் சிலர் தமது பிறந்த நாட்கள் போன்ற தினங்களில் ஏழை மக்களில் ஒரு சில நூறு பேருக்கு திருமணம் செய்து வைத்திருப்பதை அலைவரிசைகளில் பார்த்திருக்கின்றோம்.

இவற்றையெல்லாம் விஞ்சிவிடும் வகையில் தென்கொரியாவில் ஒரு திருமண நிகழ்வு நடைபெற்றிருக்கின்றது.

தென்கொரியாவில் 3,500 ஜோடிகளுடன் மிகப்பெரிய திருமண நிகழ்வொன்று நடைபெற்றுள்ளது. இங்குள்ள Unification Church என்ற தேவாலயத்தில் ஒன்றுகூடிய 3,500 ஜோடிகள் சமய முறைப்படி திருமண பந்தத்தில் இணைந்தனர். இவர்களை வாழ்த்த தேவாலய உள்ளரங்கில் 24,000 பேர் அமர்ந்திருந்தமையும் சிறப்பானதாகும்.

# திருப்பதிக்கே அலுவா



இங்கிலாந்து கிரிக்கெட் அணிக்குள் நுழைந்திருக்கும் இளரத்தம். ஆனால், கொஞ்சம் காரம்கூடிய இரத்தம்போல்தான் தெரிகிறது. சர்வதேச அளவில் பேசப்படுகின்ற டெஸ்ட், ஒரு நாள் போட்டிகள், இருபது -20 என மூன்று வகைப் போட்டிகளிலும் கலக்கக்கூடிய துடுப்பாட்டத் திறமை இந்த மொய்ன் அலியிடம் அட்டகாசமாய் இருக்கிறது.

அதிலும் சுழல் பந்துவீச்சில் இந்தியர்களையே சுழர வைத்திருக்கிறார் என்றால் பாருங்களேன்! (இதைத்தான் திருப்பதிக்கே அல்வா கொடுப்பதுபோல என்று சொல்வார்களோ!) நடந்துவரும் இன்வெஸ்ரிக் தொடரின் 2ஆவது போட்டியை இரண்டாவது இன்னிங்சில் இந்தியர்கள் பட்டபாடு இருக்கிறதே! 6விக்கெட்டுக்கள். அதில் பெரும்பாலானவை விக்கெட்டுக்களை தகர்த்திருந்தன.

சுழல்பந்துகளை சுலபமாகக் கையாளுவதில் இந்திய வீரர்கள் திறமைசாலிகள். அண்மைய வரலாற்றில் சுழல்பந்தின் ஜாம்பவான்களான முரளிதரன், ஷேன் வோர்ன் போன்றோரால்கூட இந்தியாவிற்கு எதிராக பெரிதாக எதனையும் சாதிக்க முடியவில்லை. அப்படிப்பட்ட நிலையில் வேகப் பந்துவீச்சுக்கு சாதகமான மைதானத்தில் இந்தியாவை தோல்வியடையச் செய்திருக்கிறார் என்றால் அவரிடம் ஏதோவொன்று இருக்கின்றது என்றுதானே அர்த்தம்.

பாகிஸ்தான் வம்சத் தொடரினைக் கொண்ட மொய்ன் அலி எதிர்காலத்தில் இங்கிலாந்தின் நம்பிக்கை நட்சத்திரமாக மிளிருவாரென அந்நாட்டு ஊடகங்கள் புகழ்ந்துகொண்டிருக்கின்றன. அதுவும் சுழல்பந்துவீச்சுக்கு சாதகமான உபகண்டத்தின் மைதானங்களில் இங்கிலாந்தின் வெற்றிகளை இலகுபடுத்துவார் என்று எதிர்பார்க்கின்றார்கள். பொறுத்திருந்து பார்ப்போம்.



இப்பத்திரிகை 373, பிரதான வீதி, யாழ்ப்பாணத்தில் உள்ள அச்சுதன் அச்சகத்தில் டி.டி. என்டபிரைசஸ் (பிரைவேட்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் ஓகஸ்ட் 07 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்படுகிறது.

Registered as a News Paper in Sri lanka

இலவச இணைப்பு

தினப்பதிப்பு

# தினமுரசு

THINAMURASU

அற்புதன் அச்சகம்

அனைத்து விதமான Printing வேலைகளையும்
உயர்தரத்துடனும்
குறைந்த செலவுடனும்
குறித்த நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

T.P:- 021 222 3628
Fax:- 021 222 1811

373, பிரதான வீதி,
பஸ்ரியன் சந்தி,
யாழ்ப்பாணம்.

முரசு – 04 திருவள்ளுவர் ஆண்டு 2045 ஆடி 22 வியாழக்கிழமை (07.08.2014) பக்கங்கள் IV ஓசை – 310

## இனவாதத்தை தூண்டும் எஸ்.எம்.எஸ். நான்கு முஸ்லிம்கள் கைதாகினர்



முஸ்லிம்களுக்குள் பீதியை ஏற்படுத்தக் கூடிய செய்தியை தொலைபேசி குறுஞ்செய்தி (SMS) மூலம் பரப்பியதாக குற்றம் சாட்டப்பட்டு நேற்றைய தினம் நான்கு முஸ்லிம்கள் கொழும்பில் கைது செய்யப்பட்டனர். இவர்களை விளக்கமறியலில் வைக்குமாறு கொழும்பு மஜிஸ்ட்ரேட் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இந்த நான்குபேரையும் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்திய பொலிஸார் இவர்கள் மீதான குற்றச்சாட்டுக்கள் குறித்து கூறும்போது, இனவாதத்தை தூண்டும் SMS செய்தியொன்று முஸ்லிம் மக்களிடையே பரப்பப்பட்டு வருவதாக தங்களுக்கு தகவல் கிடைத்ததாகவும் அது குறித்து விசாரணைகளை ஆரம்பித்ததாகவும் கூறினர்.

சம்பந்தப்பட்ட SMS செய்தி

IV ஆம் பக்கம் பார்க்க

## மீசாலை சந்தியில் விபத்து; உடுவில் வாசி உயிரிழப்பு

யாழ். மீசாலைச் சந்திக் கருகில் வேகக்கட்டுப்பாட்டினை இழந்த மோட்டார் சைக்கிளொன்று கடைச் சுவருடன் நேற்று முன்தினம் இரவு மோதியதில் உடுவில் வடக்கினைச் சேர்ந்த கருணானந்தன் தனுப்பிரகாஸ் (வயது-25) என்பவர் உயிரிழந்ததுடன் மேலும் ஒருவர் காயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக கொடிகாமம் பொலிஸார் நேற்றுத் தெரிவித்தனர்.

கொடிகாமத்திலிருந்து சாவகச்சேரிக்குச் சென்று கொண்டிருந்த மோட்டார் சைக்கிளே இரவு 11.45 மணியளவில் வேகக்கட்டுப்பாட்டினை இழந்து சுவர் மீது மோதியுள்ளது.

உயிரிழந்தவரின் சடலம்

IV ஆம் பக்கம் பார்க்க

# சமூகங்களிடையே பதற்றத்தை ஏற்படுத்த முயலும் இராஜதந்திரிகள்

## அரசாங்கம் குற்றச்சாட்டு

විදේශ කටයුතු අමාත්‍යාංශය ශ්‍රී ලංකාව
வெளிவிவகார அமைச்சு இலங்கை
Ministry of External Affairs Sri Lanka

(கொழும்பு)

இலங்கையிலுள்ள சமூகங்கள் மத்தியில் பதற்றத்தை ஏற்படுத்தும் வகையிலான செயற்பாடுகளில் வெளிநாட்டு இராஜதந்திரிகள் நடந்து கொள்வதாக அரசாங்கம் குற்றம் சுமத்தியுள்ளது.

கடந்த திங்கட்கிழமை கொழும்பில் காணாமற் போனோரின் குடும்பத்தினர் பங்கேற்ற நிகழ்வு பிக்குகள் குழுவினால் குழப்பப்பட்டது தொடர்பாக வெளிவிவகார அமைச்சு வெளியிட்ட விளக்க அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

மன எழுச்சியை ஏற்படுத்தக் கூடிய நிகழ்வுகளில் கலந்து கொள்ளும் போது, வெளிநாட்டு இராஜதந்திரிகள் உள்ளூர் உணர்வுகளைக் கருத்தில் கொள்ள வேண்டும் என்று வெளிவிவகார அமைச்சு கேட்டுக்கொண்டுள்ளது. இராஜதந்திர வட்டாரங்களின் சில பிரிவினர், குறிப்பிட்ட சமூகத்தினர் அல்லது மதத்தினர் ஏற்பாடு செய்யும் நிகழ்வுகளில் உணர்வுபூர்வமான விதத்தில் இணைந்து கொள்கின்றனர் .

வடபகுதியைச் சேர்ந்த காணாமற் போனவர்களின் குடும்பத்தினரை அழைத்து மனித உரிமை நிலையத்தின் வாழ்வதற்கான உரிமை அமைப்பு சந்

IV ஆம் பக்கம் பார்க்க

## செப்ரெம்பர் 20 இல் ஊவா தேர்தல்

ஊவா மாகாணசபைத் தேர்தலை எதிர்வரும் செப்ரெம்பர் 20ஆம் திகதி நடத்துவதற்கு தீர்மானித்துள்ளதாக தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் மகிந்த தேசப்பிரிய அறிவித்துள்ளார்.

ஊவா மாகாண சபை கடந்த யூலை 20ஆம் திகதி கலைக்கப்பட்டது.

இந்நிலையில் ஊவா மாகாண சபைக்கான வேட்பு மனுத் தாக்கல் நேற்று நண்பகலுடன் நிறைவடைந்துள்ளது.

## கோத்தாவின் அரசியல் பிரவேசம்; ஜனாதிபதி மழுப்பலான பதில்

அரசியலில் பிரவேசிப்பது தொடர்பாக, பாதுகாப்புச் செயலர் கோத்தாபய ராஜபக்ஷ விடம் இருந்து தமக்கு எந்தக் கோரிக்கையும் வரவில்லை என்று ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

அலரி மாளிகையில் நேற்று முன்தினம் நடந்த ஊடக ஆசிரியர்கள் மற்றும் நிர்வாகிகளுடனான சந்திப்பின் போதே, அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

கோத்தாபய ராஜபக்ஷ அரசியலில் பிரவேசிப்பதற்கு சாத்தியம் உள்ளதா என்று ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விக்குப் பதிலளித்த ஜனாதிபதி, பாதுகாப்புச் செயலரிடமிருந்து அத்தகைய கோரிக்கை எதுவும் விடுக்கப்படவில்லை என்றும், முன்னர் தாம் இதுபற்றி விடுத்த வேண்டுகோளை அவர் நிராகரித்து விட்டார் என்றும் தெரிவித்தார்.

எனினும், அண்மைக் காலமாக, பாதுகாப்புச் செயலர் கோத்தாபய ராஜபக்ஷ ஊடகங்களுக்கு அளித்த பல செவ்விகளில், ஜனாதிபதி அழைத்தால், தான் அரசியலுக்கு வருவேன் என்று கூறி வருகிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

## சாட்சியமளிப்பதை தடுக்கவே செயற்பாடுகளை குழப்பும் அரசு

### அரச சார்பற்ற அமைப்புகள் குற்றச்சாட்டு

இலங்கையில் இடம்பெற்ற உள்நாட்டு யுத்தத்தில் சிக்குண்டு உயிர்பிழைத்தவர்கள் ஐ.நா. விசாரணைக்குழு முன்னிலையில் சாட்சியமளிப்பதை தடுப்பதற்காகவே அரசாங்கம் தமது செயற்பாடுகளை குழப்புவதாக அரச சார்பற்ற அமைப்புகள் குற்றம் சாட்டியுள்ளன.

இந்தக் கும்பல்களுக்கு அரச ஆதரவுள்ளது. யுத்தக் குற்றங்களுக்கு சார்பாக சாட்சியம் அளிக்கப்படுவதை தவிர்ப்பதே முதல் நோக்கம் என மாற்றுக் கொள்கை நிலையத்தின் குசால் பெரேரா தெரிவித்தார்.

மே மாதத்தில் டிரான்பரன்சி இன்ரநஷனல் அமைப்பு ஏற்பாடு செய்திருந்த பத்திரிகையாளர்களுக்கு பயிற்சி வழங்கும் நிகழ்வு இதேபோன்று ஆர்ப்பாட்

IV ஆம் பக்கம் பார்க்க

## ஜப்பான், இந்தியா, பாகிஸ்தானுக்கு நிபுணர் குழுவில் இடமளிப்பு

காணாமற்போனோர் தொடர்பாக விசாரணை மேற்கொண்டு வரும் ஜனாதிபதி ஆணைக் குழுவுக்கு ஆலோசனை வழங்குவதற்கான நிபுணர் குழுவில், ஜப்பான், இந்தியா, பாகிஸ்தான் ஆகிய நாடுகளுக்கும் இடமளிக்கப்படவுள்ளது.

அலரி மாளிகையில் ஊடக ஆசிரியர்கள் மற்றும் நிர்வாகிகளுடன் நேற்று முன்தினம் நடத்திய கலந்துரையாடலின் போதே ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ இந்தத் தகவலை வெளியிட்டுள்ளார்.

சேர் டெஸ்மன்ட் டி சில்வா தலைமையிலான இந்த ஆலோசனைக் குழுவில் ஏற்கனவே மூன்று வெளிநாட்டு நிபுணர்கள் இடம்பெற்றுள்ளனர்.

இவர்களில் ஒருவர் அமெரிக்கா, இருவர் பிரித்தானியர்களாவர்.

இந்த நிபுணர் குழு நியமனம் தொடர்பாக, அரசாங்கத்தில அங்கம் வகிக்கும் தேசிய சுதந்திர முன்னணி உட்பட கட்சிகள் மத்தியில் விசனம் எழுந்துள்ளது.

இந்தநிலையில், ஜப்பான், இந்தியா, பாகிஸ்தான் ஆகிய நாடுகளின் சார்பில், ஒரு நிபுணரை நியமிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக, ஜனாதிபதி கூறியுள்ளார்.

ஏற்கனவே, மூன்று சர்வதேச நிபுணர்கள் நியமிக்கப்பட்ட போது ஜப்பானைச் சேர்ந்த ஒருவரையும் அதில் உள்ளடக்குவதற்கு முயற்சி மேற்கொள்ளப்பட்டது.

ஜப்பானியத் தூதரகத்தினால், நிபுணர் ஒருவரின் பெயர்

IV ஆம் பக்கம் பார்க்க

## சப்ரகமுவ பல்கலை மாணவன் புலனாய்வுப் பிரிவினரால் கைது

சப்ரகமுவ பல்கலைக்கழக மாணவனான வவுனியாவைச் சேர்ந்த யோகராசா நிரோஷன் என்பவரை பொலிஸ் பயங்கரவாத புலனாய்வுப் பிரிவினர் கைது செய்துள்ளனர்.

கைதான மாணவன் தொடர்பில் மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளரும், சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகருமான அஜித் ரோஹண தெரிவித்தார்.

புனர்வாழ்வு பெற்றுவந்த நிலையில் உயர்தரக் கல்வியைக் கற்ற இந்த மாணவன் பல்கலைக்கழகத்திற்கு தெரிவாகியுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் குறிப்பிட்டார்.

பல்கலைக்கழகத்திற்குள் அண்மையில் இடம்பெற்ற சில சம்பவங்களுடன் இந்த மாணவன் தொடர்புபட்டுள்ளமை குறித்து, அவரது கையடக்கத் தொலைபேசி மற்றும் அதன் மூலம் அனுப்பியுள்ள குறுந்தகவல்களை ஆராய்ந்ததன் மூலம் கண்டறியப்பட்டுள்ளதாக அஜித் ரோஹண கூறினார்.

பல்கலைக்கழக மாணவர்கள் மத்தியில் இன ரீதியாக அமைதியின்மையைத் தோற்

IV ஆம் பக்கம் பார்க்க

## காணாமற் போனோர் வழக்கு; கணேசராஜாவே விசாரிப்பார்

### நீதிச்சேவை ஆணைக்குழு பணிப்பு

மாவட்ட நீதிபதி மாணிக்கவாசகர் கணேசராஜாவே காணமற் போனோர் தொடர்பான வழக்கு விசாரணைக்ளை தொடர்ந்தும் நடத்த வேண்டுமென நீதிச்சேவை ஆணைக்குழு பணிப்புரை விடுத்துள்ளது.

அனந்தி சசிதரனின் கணவர் எழிலன் உட்பட காணாமற்போனோர் தொடர்பான வழக்குகளை வேறொரு நீதிபதி முன் விசாரிப்பதற்கு முல்லைத்தீவு மாவட்ட நீதிபதியினால் நீதிச்சேவை ஆணைக்குழுவுக்கு விடுக்கப்பட்ட வேண்டுகோள்

IV ஆம் பக்கம் பார்க்க

# நிரந்தர நியமனம் வழங்கக் கோரி தொண்டராசிரியர்கள் ஆர்ப்பாட்டம்



யாழ். மாவட்ட தொண்டராசிரியர்கள் தமக்கு நிரந்தர நியமனம் வழங்குமாறு கோரி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

கல்வியங்காடு செம்மணி வீதியில் அமைந்துள்ள வடமாகாண கல்வியமைச்சர் த.குருகுலராசாவின் அலுவலகத்திற்கு முன்பாக நேற்றுக் காலை இவர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

யாழ். மாவட்டத்திலுள்ள 235 தொண்டராசிரியர்கள் கடந்த 2009 ஆம் ஆண்டு முதல் இன்றுவரை யாழ். மாவட்டத்தின் பல்வேறு பாடசாலைகளில் வேதனமின்றி தொண்டராசிரியராகக் கடமையாற்றுவதாகவும் தமக்கு விரைவில் நிரந்தர நியமனம் வழங்குமாறும் ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்டவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

கடந்த காலத்தில் வடமாகாண முதலமைச்சர் மற்றும் கல்வியமைச்சர் ஆகியோருக்கு தமது நிரந்தர நியமனம் குறித்து வலியுறுத்தி ஆர்ப்பாட்டங்களை முன்னெடுத்தபோதும் இதுவரை எவ்வித தீர்வும் கிடைக்கவில்லையென தெரிவித்த தொண்டராசிரியர்கள், தமக்கான நிரந்தர நியமனம் விரைவில் வழங்கப்படாதவிடத்து வடமாகாண சபைக்கு முன்னால் அடையாள உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபடப் போவதாகத் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (25)


## சிறு விளம்பரம்

### டயானா பிளாஸ்ரிக்

*றீசைக்கிள் (மீள் சுழற்சி)*

அனைத்து வகையான கழிவு பிளாஸ்ரிக், பொலித்தீன், என்பன விலைக்கு வாங்கப்படும். ரூபா 30 தொடக்கம் ரூபா 70 வரை.

இல.06 கனகசபை லேன்,
சிவலிங்கப்புளியடி,
வண்ணார்பண்ணை, ,
யாழ்ப்பாணம்.
021 222 8680,
077 592 5088.

(C/3395)


## கொடுப்பனவு

(வரணி)

வரணிப் பிரதேசத்திலுள்ள நலிவுற்ற வறுமைக்கோட்டுக்குட்பட்டவர்களுக்கான மாதாந்த உதவிப்பணம் கடந்த 4 ஆம் திகதி முதல் வரணி அஞ்சலகத்தில் வழங்கப்பட்டு வருகிறது. உரியவர்கள் 12 ஆம் திகதிக்கு முன் பெற்றுக்கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (150)

## இடம் மாற்றம்

கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியில் க.பொ.த உயர்தர பரீட்சை நடைபெற்றுக்கொண்டிருப்பதால் கோப்பாய் பிரதேச மத்தியஸ்த சபைக்கான இம்மாதத்துக்கான கலந்துரையாடல்கள் அனைத்தும் எதிர்வரும் 10 ஆம் திகதி முதல் கோப்பாய் நாவலர் வித்தியாலயத்தில் நடைபெறுமென மத்தியஸ்த சபையின் தவிசாளர் இ. மயில்வாகனம் தெரிவித்துள்ளார்.

மீண்டும் அடுத்த மாதம் முதல் வாரத்திலிருந்து கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியில் வழமை போல் நடைபெறுமென தெரிவிக்கப்பட்டுள்ளது. (08)


அனைவருக்கும் பகிரப்பட்ட, விஸ்தரிக்கப்பட்ட, சமனான பரிசமைப்பு

**நியத்த ஜய**
உத்தியோகபூர்வ முடிவு

வெற்றி வாரம் - 279
திகதி - 2014.08.05
வர்ணம் - மஞ்சள்

வெற்றி இலக்கங்கள் — ஆங்கில எழுத்து

07 32 37 57 K

பரிசுத் தொகை ரூபா. 10,452,740/- வெல்லப்படவில்லை

| பரிசு வகை | பரிசுத் தொகை ரூ. | வெற்றியாளர்களின் எண்ணிக்கை | மொத்த பரிசுத் தொகை ரூ. |
|---|---|---|---|
| 4 இலக்கங்களுக்கு | 1,000,000/- | - | - |
| ஏதேனும் 3 இலக்கங்கள் மற்றும் ஆங்கில எழுத்துக்கு | 50,000/- | 8 | 400,000/- |
| ஏதேனும் 3 இலக்கங்களுக்கு | 1,000/- | 206 | 206,000/- |
| ஏதேனும் 2 இலக்கங்கள் மற்றும் ஆங்கில எழுத்துக்கு | 1,000/- | 359 | 359,000/- |
| ஏதேனும் 2 இலக்கங்களுக்கு | 60/- | 9247 | 554,820/- |
| ஏதேனும் 1 இலக்கம் மற்றும் ஆங்கில எழுத்துக்கு | 40/- | 4776 | 191,040/- |
| ஏதேனும் 1 இலக்கத்திற்கு | 20/- | 121722 | 2,434,440/- |
| ஆங்கில எழுத்திற்கு | 20/- | 17551 | 351,020/- |
| நான்கு இலக்கங்கள் மற்றும் ஆங்கில எழுத்து பொருந்துவதன் மூலம் | 10,452,740/- | - | - |
| வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை | | | 4,496,320/- |

எதிர்வரும் வெள்ளிக்கிழமை சுப்பர் ஜக்பொட் பரிசுத்தொகை ரூபா. 10,690,600/-

2014.08.08ம் திகதி வெள்ளிகிழமை அடுத்த சீட்டிழுப்புக்கு செல்லுப்படியாவது நீல வர்ண டிக்கட்களாகும்
வெற்றி பெறும் டிக்கட்கள் 6 மாதத்திற்கு செல்லுப்படியாகும்.

வளமான வாழ்விற்கு அபிவிருத்தி லொத்தர்

அபிவிருத்தி லொத்தர் சபை
356, கலாநிதி கொல்வின் ஆர் டி சில்வா மாவத்தை,
யூனியன் ப்லேஸ், கொழும்பு - 02.
தொ.பே: 011 2333546/47
web : www.dlb.lk

(C/3761)


# நல்லூர் ஆலயச் சூழலில் இன்று....

(யாழ்ப்பாணம்)

நல்லூர்க் கந்தன் மஹோற்சவத்தை முன்னிட்டு இந்துசமயக் கலாசார அலுவல்கள் திணைக்களம் நடாத்தும் ஆன்மீக சிந்தனையும் சமயச் சொற்பொழிவும் கலைநிகழ்வுகளும் தினமும் நல்லூர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் மணிமண்டபத்தில் பிற்பகல் 3 மணிக்கு நடைபெற்று வருகின்றன.

இதில் ஏழாம் திருவிழாவான இன்று இந்துசமய வாழ்வில் என்னும் விடயம் பற்றி சைவப்புலவர் எம்.பி.ஸ்ரீந்திரன் சிறப்புச் சொற்பொழிவாற்றவுள்ளார்.


தொடர்ந்து திருநெல்வேலி சைவவித்தியா விருத்திச்சங்கம், அரியாலை ஸ்ரீ சித்தி விநாயகர், ஏழாலை கருணாகரப் பிள்ளையார், ஏழாலை களவாடோட ஸ்ரீ நாகபூசணி அம்மன், மணற்பிட்டி புகழ் ஸ்ரீ சிவசுப்பிரமணியம் ஆகிய அறநெறிப்பாடசாலை மாணவர்களின் கலை நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளது.

◆◆◆ ◆◆◆ ◆◆◆

நல்லூர்க் கந்தன் உற்சவத்தை முன்னிட்டு இளங்கலைஞர் மன்றம் தெல்லிப்பளை துர்க்காதேவி தேவஸ்தானத்தின் அனுசரணை யுடன் நடாத்தும் தெய்வீக இசையரங்கு நிகழ்வு தினமும் மாலை 6.45 முதல் 8.15 மணிவரை நடைபெற்று வருகிறது.

இதில் ஏழாம் நாள் திருவிழாவான இன்று நல்லூர் சாரங்கம் இசைமன்ற மாணவர்களின் குழுப்பாடல் பக்கவாத்திய சகிதம் இடம்பெறவுள்ளது. (42)

# நல்லைக் கந்தனுக்கு இன்று 7 ஆம் நாள் திருவிழா



## மயில்மீது ஏறிவா!

தாறுமாறாய் நடப்பவர்கள் தவறையிங்கு உணரட்டும்
ஏறுமாறாய் நடப்பவரும் ஏங்கிமனம் மாறட்டும்
பீறுகின்ற வேதனையால் பிதற்றுபவர் தெளியட்டும்
மாறுகின்ற மக்களெலாம் மயிலாக ஆடட்டும்
கூறுகூறாய் அசுரம்தன்னை குமாரவேலன் வீழ்த்தட்டும்
வேறுவழி இன்றிஅவர் அவனைவீழ்ந்து வணங்கட்டும்
ஊறுபடா உள்ளமதுள் உத்தமவேல் நுழையட்டும்
கீறுகின்ற கால்வழியே சொர்க்கமது தெரியட்டும்!

-ஆசுகவி செ.சிவசுப்பிரமணியம் மூளாய்

## நல்லூரான் வழிநடாத்துவான்

போதையில் மயங்காதே,
போர்வையில் திளைக்காதே,
போகிற பாதையில் விழுந்து விடாதே,

வீதியில் போகும்போது
விலாசமாகப் போகாதே
வில்லங்கம் வரும் மறந்துவிடாதே,

நீதியில் இருந்து தவறி
நினைத்தபடி நீ நடந்தால்
நல்லூரான் வழிநடாத்துவான் பார்!

கே.எஸ்.சிவஞானராஜா-கொக்குவில்

## சிங்கார வேலனவன்!

கந்தனே கடம்பனே கார்ம்யில்வாகனனே முருகனே
உந்தனது நாமஞ் சொன்னால் உள்ளமே உருகுதையா!
சிந்தனை யிலினித்திடும் சிங்கார வேலவனே குகனே
எந்தனை மகிழ்விக்க எந்நாளும் நல்லூரில் வருவாய்!

-முருகனடியான்-

## ஓங்கியெழும் ஓசை

தூங்குதுலாக் காவடியைக் கண்டு பரவசத்தால்
ஓங்கியெழும் ஓசை உணர்வலைகள் - ஆங்கடியார்
பக்திப் பெருக்கைமிகக் கூட்டுதே நல்லூரின்
சக்திக் கிவைகளே சான்று.

ஊசிச் செடிலேற்றி ஊறுகளை உண்டாக்கி
ஆசிபெறக் காவடிகள் ஆடுவார் - நேசித்த
நல்லடியார் கூட்டத்தை நல்லூரிற் கண்டிறைஞ்சப்
பொல்லா வினைகளெலாம் போம்.

-நல்லைக்கந்தன் பாமாலை-

## மாறு வழி காட்டுமையா!

ஆறுமுகம் ஆனவரே! ஔவைக்கு உபதேசித்தவரே!
கூறுமடியார் வினைதீர்த்தவரே! குன்றுதோறும் குடிகொண்டவரே
மாறுபடுசூரரை வதைத்தவரே!! மானமுடைதேவர் இடர்தீர்த்தவரே!
தேறுவழிதெரியாத தமிழர்தம் வாழ்வினிலே!! மாறுவழிகாட்டுமையா!

-கவிஞர் சரசாலையூரான்-

# கைபேசியில் ஆபாசப் படம் 50 ஆயிரம் ரூபா அபராதம்

(சாவகச்சேரி)

கைத்தொலைபேசியில் ஆபாசப்படம் வைத்திருந்த ஒருவருக்கு சாவகச்சேரி நீதிமன்றம் 50 ஆயிரம் ரூபா அபராதம் விதித்தது. மிருசுவில் பகுதியைச் சேர்ந்த இந்த நபருக்கு எதிராக கொடிகாமம் பொலிஸார் தாக்கல் செய்த வழக்கு நேற்று நீதிமன்றத்தில் எடுத்துக் கொள்ளப்பட்டது.

வழக்கை விசாரித்த நீதவான் கைத்தொலைபேசியில் ஆபாசப்படம் வைத்திருந்த குற்றத்துக்காக 50 ஆயிரம் ரூபா அபராதம் விதித்ததுடன், அவரது கைத்தொலைபேசியின் ‘சிம்’ அட்டையையும் பறிமுதல் செய்யுமாறு உத்தரவிட்டார்.

## அனர்த்த முகாமைத்துவ இணைப்பு அலகு, மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம்

# கேள்வி அறிவித்தல்

தவிசாளர் பெறுகைக்குழு மாவட்டச் செயலகம் சார்பாக அரசாங்க அதிபர்/ மாவட்டச் செயலரால் கீழ்க் குறிப்பிடப்படும் நிர்மாண வேலைகளுக்கான தகமையுடையோரிடம் இருந்து குறியீடு செய்யப்பட்ட விலைக்கேள்விகள் கோரப்படுகின்றன.

1. விலைக்கேள்வியானது தேசிய போட்டி விலைக்கேள்வியின் மூலம் நடத்தப்படும்.
2. தகமைகள் பற்றிய தேவைப்பாடுகள் விலைக்கேள்வி ஆவணத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளது.
3. ஆர்வமுள்ள தகமையுடைய விலைக் கேள்வியாளர்கள் அனர்த்த முகாமைத்துவ இணைப்பு அலகு, மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம். என்னும் முகவரியில் 05.08.2014 ஆம் திகதி தொடக்கம் காலை 9.00 மணியிலிருந்து மாலை 3.00 மணி வரை விலைக்கேள்வி ஆவணங்களைப் பரிசோதனை செய்யலாம் என்பதுடன், மாவட்ட உதவிப் பணிப்பாளர், அனர்த்த முகாமைத்துவ இணைப்பு அலகு, மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம் (தொலைபேசி இல. 0212221676) அவர்களிடமிருந்து மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்ளலாம்.
4. விலைக்கேள்வி ஆவணங்களின் பூரணமான தொகுதியொன்றை அனர்த்த முகாமைத்துவ இணைப்பு அலகு, மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம். எனும் முகவரியில் எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பித்து 05.08.2014 முதல் 25.08.2014 ஆம் திகதி வரை காலை 9.00 மணியிலிருந்து மாலை 3.00 மணி வரையான காலப் பகுதியில் மீளளிக்கப்படாத தொகையான 1000/- கட்டணமாகச் செலுததிப் பெற்றுக்கொள்ளலாம்.
5. மூடி சீல் வைக்கப்பட்ட விலைக்கேள்விகள் யாவும் தவிசாளர், பெறுகைக்குழு, மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு 26.08.2014 ஆம் திகதியன்று பி.ப. 12.30 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் நேரடியாகவோ அல்லது பதிவுத்தபால் மூலமாகவோ இரு பிரதிகளில் ஒப்படைத்தல் வேண்டும். நேரடியாக ஒப்படைப்பவர்கள் அனர்த்த முகாமைத்துவ இணைப்பு அலகு, மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம். அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் இடுதல் வேண்டும். காலந்தாழ்த்தப்பட்ட விலைக்கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்விதாரர்கள் வேலையின் பெயர் மற்றும் கேள்வி இலகத்தை தபாலுறையின் இடது மேல் மூலையில் குறிப்பிடுதல் வேண்டும். கேள்விகள் யாவும் மேல் குறிப்பிடப்பட்ட முகவரியில் நேரடியாக வருகை தர விரும்பும் விலைக் கேள்வியாளர்கள் அல்லது பிரதிநிதிகளின் முன்னிலையில் 26.08.2014 ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு திறக்கப்படும்.
6. கேள்விகளை ஏற்றுக்கொள்வதும், நிராகரிப்பதும் பெறுகைச் சபையின் இறுதித் தீர்மானத்திற்கு அமைவானதாகும்.
7. கீழ் அட்டவணையில் குறிப்பிடப்பட்ட விலைக் கூறல் பிணையானது கேள்விப்பத்திரம் திறக்கப்படும் திகதியிலிருந்து 90 நாட்களுக்குச் செல்லுபடியாகும் விதத்திலும், கேள்விப் பிணைப்பொறுப்பு 120 நாட்கள் இலக்கமிடப்பட்டும் இருத்தல் வேண்டும்.

| கேள்வி இல | வேலை விபரம் | மதிப்பீட்டுத் தொகை (மில்லியன்) | ஒப்பந்த காலம் (மாதம்) | தேவையான தரம் | கேள்வி பிணைத் தொகை (ரூ) | மீளளிக்கப்படாத தொகை (ரூ) |
|---|---|---|---|---|---|---|
| JF/GA/ DDMCU /DMRP/ 2014/02 | பருத்தித்துறை சின்னத் தோட்டம் பகுதியில் வடிகாலமைப்பு நிர்மாணித்தல். | 5.72 | 06 | C7 | 57,200.00 | 1000.00 |
| JF/GA/ DDMCU /DMRP/ 2014/04 | வேலணை சின்னமடு மேற்குப் பகுதியில் வடிகாலமைப்பு நிர்மாணித்தல். | 8.744 | 06 | C7 | 87,500.00 | 1000.00 |
| JF/GA/ DDMCU /DMRP/ 2014/07 | ஊர்காவற்றுறை நாரந்தனைப் பகுதியில் உவர் நீர் உட்புகுதலில் இருந்து பாதுகாப்பதற்கான தடுப்பணை அமைத்தல். | 3.02 | 06 | C8 | 34,000.00 | 1000.00 |

**சுந்தரம் அருமைநாயகம்,**
**அரசாங்க அதிபர் /**
**மாவட்டச் செயலாளர்,**
**யாழ்ப்பாண மாவட்டம்.**

(C/3432)

# நல்லூர் உற்சவகால சுகாதார நடைமுறைகள் விதிமுறை தவறினால் சட்ட நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

கடந்த திங்கட்கிழமை யாழ்.மாநகர சபை சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையில் கடமையாற்றும் சுகாதார உத்தியோகத்தர்கள் கிரமமாக நடாத்திவரும் உணவு கையாளும் நிலையங்கள், உணவு விற்பனை நிலையங்களிற்கான பரீட்சணையில் ஒரு உணவு விற்பனை நிலையத்தில் காலாவதியான பொதியாக்கப்பட்ட பெரும் தொகை பொருட்கள் கைப்பற்றப்பட்டு அழித்து புதைக்கப்பட்டது.

இம்முறை நல்லூர் உற்சவ காலத்தில் சுகாதார உணவுச் சட்டங்கள் ஒழுங்கு விதிகளுக்கு அமைய உற்சவ கால வியாபார நிலையங்களால் நடைமுறைப் படுத்தப்படல் வேண்டும் என்பதிலும் பக்தர்களின் நலன் கருதி அவர்களின் ஆரோக்கியம் பேணப்படும் வகையில் உணவு, சுகாதாரம் பேணப்படல் வேண்டும் என்பதிலும் யாழ்.சுகாதார வைத்திய அதிகாரி உறுதியுடன் உள்ளார். தொடர்ந்து வரும் தினங்களில் இச்செயற்பாடு மேலும் இறுக்கமாகக் கடைப்பிடிக்கப்பட உள்ளதாகவும், தவறும் பட்சத்தில் நிலையங்களின் உரிமையாளர்களுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் எனவும் அடியார்களும் இவ்விடயத்தில் விழிப்புடன் செயற்பட்டு தமது உடல் நலத்திற்கு தீங்கு விளைவிக்கக் கூடிய உணவுப் பண்டங்கள் விற்பனை செய்யப்படும் இடங்களில் அவற்றைக் கொள்வனவு செய்வதை விழிப்புடன் தவிர்த்துக் கொள்ளுமாறு யாழ்.மாநகர சுகாதார வைத்திய அதிகாரி கேட்டுக் கொள்கின்றார்.

# பொலிகண்டி கடற்பகுதியில் உயிருடன் சிக்கியது இராட்சத சுறா



பொலிகண்டி மேற்கு ஊறணி கடற்பரப்பில் 20 அடி நீளமான இராட்சத சுறா மீனினம் ஒன்று மீனவரின் வலையில் சிக்கி உயிருடன் கரைக்கு கட்டிக் கொண்டு வரப்பட்டுள்ளது. பெருமளவான மக்கள் சுறாவினைப் பார்வையிட்டுள்ளனர்.

குறித்த பகுதி மீனவரான கந்தசாமி கண்ணன் என்பவர் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை இரவு கடற்றொழிலில் ஈடுபட்டுக்கொண்டிருந்த வேளை அவரது 9 இஞ்சி கூரல் வலையில் சுறா சிக்கிக் கொண்டது.

குறித்த மீனவர் சுமார் 800 கிலோ நிறை கொண்ட இம் மீனினத்தை மற்றொரு மீனவரின் உதவியுடன் நேற்றுக் காலை கரைக்கு கட்டி இழுத்து வந்து குறைந்தளவான நீர்ப்பரப்பில் உயிருடன் கடலில் விட்டுள்ளார்.

இதனையடுத்து இம்மீனினத்தை பெருமளவான மக்கள் பார்வையிட்டு வருகின்றனர்.

(116, 18)

# வறிய மக்களுக்கு வாழ்வாதார உதவிகள்

(தென்மராட்சி)

தென்மராட்சிப் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட வரணி வடக்கு, இடைக்குறிச்சி, குடமியன் வரணி, இயற்றாலை, மந்துவில், எழுதுமட்டுவாழ் முதலான கிராமங்களில் வறிய மக்களை இனம் கண்டு அவர்களுக்கு வாழ்வாதார உதவிகள் வழங்குவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

சிறுவர்களை மையப்படுத்தியே இப் பிரிவுகளில் அபிவிருத்திப் பணிகள் நடைபெற்று வருகின்றது. வாழ்வாதாரத்தினை முன்னேற்றுவதை நோக்காகக் கொண்டு மாடு வளர்ப்பிற்கு பயனாளிகளைத் தெரிவு செய்து அவர்கள் மாடு வளர்ப்பதற்கான கொட்டகைகள் அமைக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றது.

கிராம அலுவலர் பிரிவில் இருந்து பதினைந்து பயனாளிகளைத் தெரிவு செய்து அவர்களுக்கு மாடு வளர்ப்பதற்கான முன் ஆயத்த முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. (14)

# மாணவர்களின் விடுதி மாற்றம்

(சப்ரகமுவ)

சப்ரகமுவ பல்கலைக்கழகத்தில் தமிழ் மாணவர்களின் விடுதி மாற்றப்பட்டு அவர்களுக்குப் போதிய பாதுகாப்புடன் கல்வி கற்பதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக மாணவர்களின் பெற்றோர்களிடம் பல்கலைக்கழக நிர்வாகத்தினர் தெரிவித்துள்ளனர்.

அண்மையில் இப்பல்கலைக்கழக விடுதியின் கழிப்பறைப் பகுதியில் வைத்து இரவுவேளை வடபகுதியின் முகமாலைப் பகுதியைச் சேர்ந்த மாணவன் ஒருவர் தாக்குதலுக்குள்ளாகியிருந்தார்.

இதனையடுத்து அந்த விடுதியில் இருந்த சுமார் 40 வரையான தமிழ் மாணவர்களின் பெற்றோர்கள் நேற்றுப் பல்கலைக் கழகத்திற்குச் சென்றிருந்தனர்.

பாதுகாப்புக் கருதி மாணவர்களை பெற்றோர்கள் அழைத்துவர முற்பட்ட போது பல்கலைக்கழக நிர்வாகத்தினர் மாணவர்களின் பாதுகாப்புக் குறித்து உறுதிமொழி வழங்கியதுடன், தாம் மேற்கொண்டுள்ள மாற்று ஏற்பாடுகள் குறித்தும் பெற்றோருக்கு விளக்கமளித்துள்ளனர்.

# விசாரணை நடத்துவதற்காக தொடர்ந்தும் அனுமதி கோரப்படும்

## ஐ.நா. மனித உரிமைப் பேரவை தெரிவிப்பு

இலங்கையில் விசாரணை நடாத்த தொடர்ந்தும் அனுமதி கோரப்படும் என ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவை தெரிவித்துள்ளது.

இலங்கையில் யுத்தம் இடம்பெற்ற காலத்திலான மனித உரிமை மீறல்கள் மற்றும் மனித உரிமை மீறல்கள் தொடர்பில் விசாரணை நடாத்தும் நோக்கில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையின் ஆணையாளர் நவநீதம்பிள்ளை விசாரணைக் குழு ஒன்றை நிறுவியுள்ளார்.

இந்தக் குழவினர் இலங்கையில் விசாரணை நடாத்த அரசாங்கத்திடம் அனுமதி கோரியிருந்தனர்.

விசாரணைக்கு அனுமதியளிக்கப்பட மாட்டாது என அரசாங்கம் ஏற்கனவே திட்டவட்டமாக அறிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

இவ்வாறான ஓர் பின்னணியில் மீண்டும் இலங்கையில் விசாரணை நடாத்த அனுமதி கோரப்படும் என ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவை அறிவித்துள்ளது.

இலங்கை அரசாங்கத்துடன் இணைந்தே இந்த விசாரணைகளை நடாத்த விரும்புவதாகத் தெரிவித்துள்ளது.

ஐக்கிய நாடுகள் விசாரணைக குழுவின் பிரதிநிதிகள் இலங்கைக்கு விஜயம் செய்து அரசாங்கத் தரப்பினர் மற்றும் ஏனையவர்களுடன் தொடர்பு கொள்ளவும் ஆவணங்களை பரிசீலனை செய்யவும் அனுமதிக்கப்பட வேண்டுமென கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

# பதிவுத்திருமணம் செய்வோரின் எண்ணிக்கையில் வீழ்ச்சி

(கொழும்பு)

இலங்கையில் பதிவுத் திருமணங்களின் எண்ணிக்கை பெருமளவில் குறைந்து வருவதாக தெரியவந்துள்ளது.

2012 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது 2013 ஆம் ஆண்டில் பதிவுத் திருமணங்களின் எண்ணிக்கை 38 வீதமாக குறைந்துள்ளன.

இலங்கையில் திருமணம் செய்து கொள்ளும் நபர்களின் எண்ணிக்கை சடுதியாக வீழ்ச்சியடைந்து வருவதாக பதிவாளர் திணைக்களத்தின் 2013 ஆம் ஆண்டுக்கான அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அரசாங்கம் பதிவுத் திருமணத்திற்கான கட்டணத்தை 5 ஆயிரம் ரூபாவாக அதிகரித்தது. இதனால் பொருளாதார சிரமங்களை எதிர்நோக்கி வரும் இளைஞர், யுவதிகள் பெரும் சிரமங்களுக்கு முகம் கொடுத்து வருகின்றனர்.

இந்த நிலைமையானது திருமணங்கள் குறைவதில் தாக்கங்களை ஏற்படுத்தியுள்ளது. அதேவேளை 2013 ஆம் ஆண்டு பல்வேறு காரணங்களினால் ஒரு இலட்சத்து 28 ஆயிரத்து 550 பேர் இறந்துள்ளனர்.

2012 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது இது 38 வீத அதிகரிப்பாகும் எனவும் அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# உடுப்பிட்டியில் ஒரே இரவில் இரு வீடுகளில் கொள்ளை

(வடமராட்சி)

வடமராட்சி உடுப்பிட்டிப் பகுதியில் ஒரே இரவில் இரு வீடுகளில் பணம், நகை என்பன கொள்ளையடிக்கப்பட்டன.

பொக்கணைச் சந்தி உடுப்பிட்டியில் உள்ள லோகானந்தன் ஜெகஞானகலா என்பவரின் வீட்டிற்குள் நேற்று முன்தினம் இரவு நுழைந்த திருடர்கள் 50 ஆயிரம் ரூபா பணம் மற்றும் 2 பவுண் காப்பு உட்பட வேறு நகைகளும் கொள்ளையிடப்பட்டுள்ளன.

இதேவேளை இப்பகுதியைச் சேர்ந்த அனுரதன் புஸ்பமலர் என்பவரின் வீட்டிற்குள் நுழைந்த திருடர்கள் 89600 ரூபா பணம் மற்றும் சங்கிலி என்பவற்றை கொள்ளையடித்துள்ளனர்.

வல்வெட்டித்துறை பொலிஸார் இது தொடர்பான விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (116)

# கடற்தொழிலுக்குச்சென்றவேளை வல்வெட்டித்துறை மீனவர் மாயம்

வல்வெட்டித்துறையிலிருந்து மீன் பிடிக்கச்சென்ற குடும்பஸ்தர் ஒருவர்கரை திரும்பாத நிலையில் அவருடைய படகு பலாலி கடற்பரப்பிலிருந்து ஆதிசக்தி கடற்றொழிலாளர் கூட்டுறவுச்சங்கத்தினரால் மீட்கப்பட்டுள்ளது.

நேற்றுமுன்தினம் இடம்பெற்ற இச்சம்பவத்தில் வல்வெட்டித்துறை ஆதிகோவிலடியைச் சேர்ந்த ஐந்து பிள்ளைகளின் தந்தையான ஞானமூர்த்தி அருளானந்தம் (வயது - 54) என்ற குடும்பஸ்தரே கரை திரும்பவில்லை. குறித்த பகுதி மீனவர் வழமை போல் நேற்று முன்தினம் இரவு தனிமையில் மீன் பிடிக்கச்சென்றிருந்தார். (116)

## இனவாதத்தை...

கள் இந்த நான்கு சந்தேகநபர்களின் கைத்தொலைபேசி ஊடாகவே அனுப்பப்பட்டுள்ளதாக தெரிவித்த பொலிஸார் சந்தேகநபர்கள் சர்வதேச ரீதியல் வைத்திருக்கும் தொடர்புகள் சம்பந்தமாகவும் தாங்கள் தற்போது விசாரித்து வருவதாகவும் அறிவித்தனர். இந்த விசாரணைகள் முடியும் வரை இவர்களை விளக்க மறியலில் வைக்குமாறும் பொலிஸார் நீதிபதியிடம் வேண்டுகோள் விடுத்தனர்.

பொலிஸாரின் இந்த வேண்டுகோளுக்கு எதிர்ப்பு தெரிவித்த எதிர்த்தரப்புத் வழக்கறிஞர்கள் தமக்குக் கிடைத்த செய்தியொன்றை நண்பர்களிடையே பகிர்ந்தளிப்பது ஒரு குற்றச் செயல் அல்ல என்று வாதிட்டனர்.

'லங்கா ஈ நியூஸ்' என்ற இணையத்தளத்தில் கடந்த 30ஆம் திகதி பிரசுரிக்கப் பட்டிருந்த செய்தியொன்றையே இவர்கள் இவ்வாறு sms மூலம் பகிர்ந்ததாகக் கூறிய எதிர்த் தரப்பு வழக்கறிஞர் எம்.எம். சுகயிர் பொலிஸாரின் கைது நடவடிக்கைகளை அனுமதிக்கக் கூடாது என்று வாதாடினார்.

வழக்கு விசாரணையின் இறுதியில் இந்த நால்வரையும் எதிர்வரும் 18 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்ட நீதிபதி அன்றைய தினம் பொலிஸாரின் விசாரணைகளின் முன்னேற்றங்கள் தொடர்ப்பான அறிக்கையொன்றை நீதிமன்றத்தில் சமர்ப்பிக்குமாறு பொலிஸாருக்கு உத்தரவிட்டார்.

## சமூகங்களிடையே...

திப்பு ஒன்றை ஏற்பாடு செய் தீருந்தது என்றும், காணாமற் போனவர்களின் பெற்றோர் களின் கூட்டமைப்பு என்ற இன் னொரு அமைப்பு அந்த கூட்ட த்தில் தாமும் பங்கு கொள்ள இடமளிக்க வேண்டும் என்று வலியுறுத்தியது என்றும்,

இதைத் தொடர்ந்து உருவான வாக்குவாதம் காரணமாகப் பதட்டமான சூழ்நிலை உருவானது என்றும், சட்ட அமுலாக்கல் அதிகாரிகள் அதனை கட்டுப் படுத்தினர் என்றும், இந்த கூட்டத்தில் மேற்குலகின் தூதரகங்களைச் சேர்ந்த தூதுவர்கள் பலர் பங்கு கொண்டிருந்தனர் என்றும் தகவல்கள் தெரிவிக்கின்றன. கருத்துச் சுதந்திரம் மற்றும் ஒன்றுகூடுவதற்கான சுதந்திரத்தை அமைச்சு அங்கீகரிக்கின்றது.

அதேவேளை இராஜதந்திர வட்டாரங்களின் சில பிரிவினர், குறிப்பிட்ட சமூகத்தினர் அல்லது மதத்தினர் ஏற்பாடு செய்த நிகழ்வுகளில் உணர்வுபூர்வமாகக் கலந்துகொள்வதால் மற்றவர்களிடத்தில் பாதிப்பை ஏற்படுத்துகிறது. அத்துடன் நாட்டின் உணர்வுபூர்வமான தருணத்தில் பதட்டமான நிலைமை உருவாவதற்கும் சமூகங்கள் மத்தியில் நம்பிக்கையீனம் உருவாவதற்கும் காரணமாக அமைந்துள்ளது என்றுள்ளது.

## மீசாலை....

சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளதாக கொடிகாமம் பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## சாட்சியமளிப்பதை...

டக்காரர்களால் குழப்பப்பட்டது. யுத்தக் குற்றச்சாட்டுகள் குறித்த விடயமே அரசின் முக்கிய கவலைக்குரிய விடயமாக உள்ளது எனத் தெரிவிக்கும் அந்த அமைப்பின் வெலியமுன தமிழர்கள் எப்படியும் ஊடகவியலாளர்களுடன் உரையாடுவார்கள் ஊடகவியலாளர்களுக்கு தகவல் வெளியாகும் என அரசு அஞ்சுகிறது எனக் குறிப்பிட்டார்.

## காணாமற்...

நிராகரிக்கப்பட்டு முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி மாணிக்கவாசகர் கணேசராஜாவே வழக்கை தொடர்ந்து விசாரித்து முடிவுரை வழங்க வேண்டுமென நீதிச்சேவை ஆணைக்குழு முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி மாணிக்கவாசகர் கணேசராஜாவுக்கு பணிப்புரை விடுத்துள்ளது.

மேற்படி பணிப்புரை கடிதம் மூலமாக முல்லைத்தீவு மாவட்ட நீதிபதிக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. (170)

## ஜப்பான்....

பரிந்துரைக்கப்பட்ட நிலையில், அதனை உள்ளடக்காமலேயே முதலாவது நிபுணர் குழு வெளியிடப்பட்டது.

இது ஜப்பானிய தூதரக அதிகாரிகள் மத்தியில் விசனத்தை ஏற்படுத்தியிருந்தது.

இந்த நிலையில், புதிதாக நியமிக்கப்படவுள்ள நிபுணர்களில், ஜப்பான் மற்றும் இந்தியா, பாகிஸ்தான் நிபுணர்கள் உள்ளடக்கப்படவுள்ளனர்.

எனினும், இந்த நிபுணர்கள் எவரும் விசாரணைகளில் பங்கெடுக்கவோ, அதில் தலையிடவோமாட்டார்கள் என்றும் ஜனாதிபதி திட்டவட்டமாகத் தெரிவித்துள்ளார்.

# கடற்கரையோர எல்லை பாதுகாப்பு; ஆஸி. தளபதி கொழும்பில் பேச்சு



கடற்கரையோர எல்லைப் பாதுகாப்பு மற்றும் கடத்தல்கள் தொடர்பாக இலங்கை அதிகாரிகளுடன் கலந்துரையாடல் ஒன்றை மேற்கொள்வதற்காக அவுஸ்ரேலிய எல்லைப் பாதுகாப்பு கட்டளைத் தளபதி ரியர் அட்மிரல் மைக்கல் நூனன் இலங்கைக்கு விஜயம் ஒன்றை மேற்கொண்டுள்ளார்.

இது தொடர்பான கலந்துரையாடல் கடற்படையினரின் தலைமைக் காரியாலயத்தில், கடற்படைத் தளபதி ஜயந்த பெரேராவுடன் நேற்று முன்தினம் இடம்பெற்றது.

இக்கலந்துரையாடலின் போது இலங்கையிலிருந்து கடல்வழியாக சட்டவிரோதமாக குடிபெயர்வோர் மற்றும் கடல்வழி கடத்தல்கள் என்பவற்றுடன் நடுக்கடலில் தத்தளிப்பவர்களை காப்பாற்றுதல் தொடர்பிலும் கவனம் செலுத்தப்பட்டது.

மேலும் கடல் எல்லைப்பிரச்சினை தொடர்பாக பாதுகாப்புப் படையில் புதிதாக நியமிக்கப்பட்ட அதிகாரிகளை, அவுஸ்ரேலிய எல்லைப் பாதுகாப்பு கட்டளைத் தளபதி சந்தித்ததாக கொழும்பிலுள்ள அவுஸ்ரேலிய உயர்ஸ்தானிகரகம் தெரிவித்தது.

# யுனிஸ்கானின் சதத்தால் சரிவிலிருந்து மீண்ட பாகிஸ்தான்

(காலி)

இலங்கை அணிக்கு எதிரான காலியில் நடைபெற்று வரும் முதல் டெஸ்ட் போட்டியில் யுனிஸ் கான் சதம் அடித்து கைகொடுக்க, பாகிஸ்தான் அணி சரிவிலிருந்து மீண்டது.

நாணயச்சுழற்சியில் வென்ற பாகிஸ்தான் அணி தலைவர் மிஸ்பா துடுப்பாட்டத்தை தேர்வு செய்தார்.

பாகிஸ்தான் அணியின் தொடக்க வீரர்கள் குராம் மன்சூர் (3), அகமது ஷெசாத் (4) விரைவில் ஆட்டமிழந்தனர். ஹேரத் சுழலில் அசார் அலி 30 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். இதன் பின் யுனிஸ் கான், மிஸ்பாவுடன் கைகோர்த்தார். இவர்களின் பொறுப்பான ஆட்டத்தால் அணி சரிவிலிருந்து மீண்டது. எனினும் மிஸ்பா 31 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார்.

சிறப்பான ஆட்டத்தை தொடர்ந்த யூனிஸ் கான் டெஸ்ட் அரங்கில் தனது 24 ஆவது சதத்தை பூர்த்தி செய்தார். மறுமுனையில் அசாத் ஷபிக் அரைச் சதம் கடந்தார். முதல் நாள் ஆட்ட நேர முடிவில், பாகிஸ்தான் அணி முதல் இனிங்சில் 4 விக்கெட் இழப்புக்கு 261 ஓட்டங்களை எடுத்தது. யுனிஸ் கான் (133), அசாத் ஷபிக் (55) ஆட்டமிழக்காமல் இருந்தனர். இலங்கை அணி சார்பில் தம்மிக்க பிரசாத், ஹேரத் தலா 2 விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.

## சப்ரகமுவ....

றுவிப்பதற்கு கைது செய்யப்பட் டுள்ள மாணவனின் செயற்பாடுகள் காரணமாக அமைந்துள்ளனவா என்பது குறித்து விசாரணைகள் மேற்கொள்ளப்படுவதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்தார்.

இந்த விடயங்கள் உறுதிசெய்யப்படும் பட்சத்தில் அந்த மாணவரை தொடர்ந்தும் தடுத்து வைத்திருந்து, வழக்குத் தாக்கல் செய்யப்படும் என்றும், குற்றச்சாட்டுகள் உறுதிப்படுத்தப்படாவிட்டால் எதிர்வரும் ஓரிரு தினங்களில் அவர் விடுதலை செய்யப்படுவார் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2014 ஆகஸ்ட் 07 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.